ஆசிரியர் உரை

# பழைய சம்பவம், ஆனால் இன்றும் (துரதிஷ்டவசமாக) அது சம்பந்தமுடையதாக இருக்கிறது

# An Old Old Story Remains Relevant Today(unfortunately)

Byron Nichols

இவ்வுலகில் சாத்தான் தனது வல்லமையினால் செல்வாக்கை செலுத்தினாலும் கூட, ஓரினச்சேர்க்கை என்னும் பாவம் இன்று உலகில் இந்த அளவு கோரத்தாண்டவமாடும் என்று யார் எதிர்பார்த்திருப்பர் ? அநேகமாக, இவையெல்லாவற்றிலும் கவலை அளிக்கும் காரியம் என்னவென்றால், அப்பாவத்திற்கு கிடைத்திருக்கும் அங்கீகாரமும், விளம்பரமும் தான். நாம் வரலாற்றை சற்று புரட்டிப் பார்த்தால் இப்பாவச்செயலில் ஈடுபட்டவர்களுக்கு இழிவும், அவமானமும் தான் ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தேவன் இந்த ஓரினச்சேர்க்கைப் பாவத்தை கடுமையாகப் பார்த்து தண்டித்திருக்கிறார்.

இக்கட்டுரை எழுதப்படுவதற்கான நோக்கம் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுபவர்களைப் புண்படுத்த வேண்டுமென்பதல்ல என்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். மாறாக, அதே நேரத்தில் அப்பாவத்தைப் பற்றிய விழிப்புணர்வை நம் குடும்பங்களிலும், ஒட்டு மொத்த சமுதாயத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்பதே. நாம் கிறிஸ்தவர்களாகவும், நாட்டின் குடிமக்களாகவும் இருந்து கொண்டு அப்பாவி மக்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர் ளுடைய வாழ்க்கையை அழித்துக்கொண்டுவரும் இப்பாவத்தை நாம் கண்டு கொள்ளாமலும், இதைக்குறித்து அக்கறையற்றும் இருக்க நாம் துணியக் கூடாது.

## "ஓரினச் சேர்க்கை" என்னும் பதம்

ஒரு மொழியில் ஒரு வார்த்தை காலப்போக்கில் மாற்றத்திற்குட்படுவது புதிதான ஒன்றல்ல. ஆயினும், தேவன் தம்முடைய வேதாகமத்தில் வெளிப்படுத்தியிருக்கிற வார்த்தைகளை மாற்றுவது ஆபத்தானதாகும்.

இந்த ஆண்புணர்ச்சி மற்றும் பெண் புணர்ச்சியில் ஈடுபடுபவர்களும் சரி, ஒட்டு மொத்த சமுதாயமும் சரி தேவன் வேதாகமத்தில் இத்தகைய அருவருப்பான காரியங்களைச்

செய்கிறவர்களை எந்த வார்த்தைகளில் அழைக்கிறாரோ அந்த வார்த்தைகளில் அழைக்கப்படாமல் சற்று மென்மையான வார்த்தைகளில் அழைக்கப்பட விரும்புகிறார்கள். தேவன் வேதாகமத்தில் ஆண்புணர்ச்சி என்று கடுமையாகப் பயன்படுத்தியிருக்கிற அந்த வார்த்தையை, ஓரினச் சேர்க்கையாளர்கள் என்று லேசாக அழைப்பது நிச்சயமாகவே தேவனை முற்றிலுமாக எதிர்க்கும் ஒரு செயலாகும்.

என்னைப் பொறுத்தவரை இயற்கைக்கு எதிராகவும், தேவனுக்கு எதிராகவும் ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் உறவு முறையை ஓரினச்சேர்க்கை என்று சொல்ல மாட்டேன். தேவன் இப்பாவச்செயல்களில் ஈடுபடுவோரை வேதாகமத்தில் ஆண், பெண் எப்படி வாழும்படியாக சட்டதிட்டங்களைக் கொடுத்திருக்கிறாரோ அவைகளை வெளிப்படையாகவும் வெட்கமுமின்றி மீறுகிறார்கள். அவர்களுடைய இழிவான செயல்களை மென்மையான அல்லது லேசான வார்த்தைகளால் அழைக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். நானோ அவர்களுடைய அருவருக்கத்தக்க பாவங்களைக் குறிப்பிட தேவன் வேதாகமத்தில் எந்தப் பதங்களை பயன்படுத்தியிருக்கிறாரோ அந்த பதங்களையே பயன்படுத்த விரும்புகிறேன்.

ஓரினச்சேர்க்கையாளர்கள் தங்கள் அருவருப்பான செயல்களைக் குறித்து வெட்கப்படுவதற்குப் பதிலாக, துணிச்சலாக, வெளிப்படையாக தாங்கள் இழிவான செயல்களைக் குறித்துப் பேசி, தங்கள் செயல்களை விளம்பரப்படுத்துகிறார்கள். இதில் வேடிக்கையும், வினோதமும் என்னவென்றால், சமுதாயத்தின் மேல்தட்டில் இருப்பவர்கள் கூட தேவன் அருவருக்கக்கூடிய இப்பாவப் பழக்கத்தை ஆதரிப்பதாக வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள்.

இந்த ஓரினச்சேர்க்கையை ஆதரிப்பவர்களில் பெரும்பாலானோர் கேளிக்கைத் துறையை சார்ந்தவர்களாகவும், உலகப்புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களாகவும் வியாபார உலகில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருக்கிறார்கள்.

இதில் வேதனைக்குரிய உண்மையென்னவென்றால், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடாத பலர் கூட இப்பாவபழக்கத்தை ஆதரித்து இத்தகைய வாழ்க்கை முறை ஏனைய வாழ்க்கை முறையைப்போல ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதுதான் என்றும், இதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கக்கூடாதென்றும் சொல்வது விநோதமாயிருக்கிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தின் வாஷிங்டனிலுள்ள வலிமைமிக்க பல அரசியல் தலைவர்கள் இன்றைய நாட்களில் வெளிப்படையாகவே ஓரினச்சேர்க்கையானர்கள் திருமணம் செய்து கொள்ள சட்டம் இயற்றி விட்டார்கள். இன்னும், சில மாநிலங்களில், சாதாரணமாக அரசாங்கத்தால் வழங்கப்படும் நலத்திட்டங்களுக்கு அவர்களை அரசாங்கங்கள் பயனாளிகளாக்கியிருக் கின்றன. இன்னும் பல அரசியல்வாதிகள் ஓரினச்சேர்க்கையாளர்களின் ஆதரவைப் பெறும் நோக்கில் பொது மக்களின் வரிப்பணத்தில் இவர்களுக்கு ஆதரவாக சில

மாற்றங்களைக் கொண்டு வருகிறார்கள்.

அமெரிக்காவில் கடைசியாகப் பதவி வகித்த ஆறு அதிபர்களில் மூன்றுபேர் வெளிப் படையாகவே ஓரினச் சேர்க்கையாளர்களுக்காக சட்டம் கொண்டு வருவதை ஆதரித் திருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த ஒழுக்கக்கேடான காரியம் தொடர்ந்து மோசமாகிக் கொண்டிருப்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு கவலையை ஏற்படுத்தவில்லையா? அதுவும் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களுடைய ஆசியில் இவைகள் அரங்கேறுகிறது என்பது கொடுமையிலும் கொடுமை.

இப்பிரச்சனைக்கு தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நாம் தெளிவைப் பெற்றுக் கொள்வது சாலச் சிறந்ததாகும். இந்த விவாவதத்தில் தேவன் தம் சித்தத்தை வெளிப்படுத்த அனுமதிப்பதுதான் பொருத்தமாயிருக்கும். எனவே, இந்த ஓரினச் சேர்க்கையைப்பற்றி கர்த்தரும், அவரால் ஏவப்பட்ட தேவதாசர்களும் என்ன சொல்கி றார்கள் என்பதை நாம் கேட்போம்.

**ஆதியாகமம் 2 : 22 - 24 :** " தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவனை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொ ழுது ஆதாம் ; இவள் என் எலும்பின் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி எனப்படுவாள் என்றான். இதினிமித்தம், புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியோட இசைந்திருப்பான் அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். "

**ஆதியாகமம் 19 : 3 - 13 :** வசனங்களை இங்கே எழுதி இடத்தை நிரப்புவதைவிட வாசகர்களாகிய நீங்கள் உங்கள் வேதகாமத்திலேயே சோதோம் கொமோரா பட்டணங்களைப் பற்றி வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

**லேவியராகமம் 18 : 22 :** பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல் ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம் , அது அருவருப்பானது "

**லேவியராகமம் 20 : 13 :** ஒருவன் பெண்ணோடே சம்யோகம் பண்ணுகிறது போல ஆணோடே சம்யோகம் பண்ணினால் அருவருப்பான காரியம் செய்த அவ்விரு வரும் கொலைசெய்யப்படக்கடவர்கள். அவர்கள் இரத்தப்பழி அவர்கள் மேல் இருப்பதாக "

**ரோமர் 1 : 26, 27, 32 :** " இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் ; அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல் அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத் துக்கு விரோதமான அனுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடபித்துத் தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள்

மரணத்திற்கு பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதும்மல்லாமல் அவைகளைச் செய்கிற மற்றவர்களிடமும் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

I **கொரி 6 : 9 ; 11 :** " அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்ப தில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள் ; வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக் காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், கொலைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிபட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயி னும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப் பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.

**எபிரெயர் 13 : 4 :** விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப் படாததாயுமிருப்பதாக ; வேசிக்கள்ளரையும் விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் "

I **தீமோத் 1 : 9 - 10 :** " எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் நீதிமா னுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லா தவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும், ....

**ரோமர் 12 : 9 :** " உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள் "

**நீதிமொழிகள் 14 : 34 :** " நீதி ஜனத்தை உயர்த்தும். பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி".

## தேவன் மன்னிக்கும் தேவனாயிருக்கிறார்

ஓரினச்சேர்க்கை நிச்சயமாக பாவமாகும். ஆனால், அது மன்னிக்கப்படக் கூடியது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமாகும்.

I கொரிந்தியர் 6 : 11 " உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள் " என்று சொல்கிறது. பவுல் இங்கே சில பாவங்களைப் பட்டியலிடுகிறார். மேலும், அவர் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் கடந்த காலங்களில் அவர்கள் எப்படிபட்டவர்காளாயிருந் தார்கள் என்பதையும் இப்போது எப்படிபட்டவர்களாயிருக்கிறார்கள் என்பதையும் நினைவு படுத்தினார். இவைகளெல்லாம் தேவனுடைய அன்பினாலும், மன்னிப்பினாலுமே சாத்திய மாயிற்று. மனத்திரும்பிக் கீழ்ப்படிகிற பாவிகளை தேவன் எப்படி மன்னிக்க சித்தம் உள்ளவராயிருக்கிறாரோ அதுபோல் இந்த அருவருப்பான பாவச் செயலில் ஈடுபடுவோரும் மனந்திரும்பி வரும்போது அவர்களை மன்னிப்பார். ✝

# இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்விலிருந்து...

# From the Event of Resurrection

E.Z.S. RAJANAYAGAM

அந்த நாள் சரித்திரத்தின் பக்கங்களில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வாரத்தின் முதல் நாள். இயேசுவானவர் இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் அவர் மீது பாசமும், நேசமும் கொண்டு, அவர் பிடிக்கப்பட்ட நிலையிலும் ஏனைய சீடர்களைப் போல் ஓடிப்போகாமல், சிலுவை வரை அவரைப் பின்பற்றின ஸ்திரீகளில் குறிப்பிடத்தக்கவர்களான மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பளும் செத்துப்போன அவருடைய சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிடும்படி, ஏற்கனவே வாங்கி வைத்திருந்த பொருள்களோடு அந்தப் பொன்னாளின் அதிகாலை வேளையிலே கல்லறையினிடத்தில் வந்து, கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். (மாற்கு 16 : 1 – 3)

சரீரத்தில் பெலவீனப் பாண்டங்களாகப் படைக்கப்பட்ட இப்பெண்கள் இவ்விதம் பேசிக் கொண்டதற்கான காரணம் அடுத்த வசனத்தில் உள்ளது. ஆம், அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது என்று ( வசனம் 4 ). ஆயினும், அவர்கள் கல்லறையை ஏறிட்டுப் பார்த்தபோது, அவர்களை மலைப்புக்குள்ளாக்கின அந்தக் கல் தள்ளப்பட்டிருந்தது. அங்கே அவர்கள் அச்சத்துடனே உள்ளே பிரவேசித்து, வெள்ளையங்கி தரித்தவனாய் உட்கார்ந்திருந்த வாலிபனைக் கண்டு பயந்தார்கள் ( வசனம் 5). இங்கே பாருங்கள், கல்லறையினிடத்தில் வருவதற்கு முன் மலைப்பு, கல்லறையின் கிட்டே வந்தபோது வியப்பு, உள்ளே பிரவேசித்தபோதோ திகைப்பு. அப்பொழுது அவர்களுக்கு, சிலுவையிலறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த் தெழுந்தார். அவர் இங்கேயில்லை ; இதோ, அவரை வைத்த இடம் என்று உரைக்கப்பட்டது (வசனம் 6).

இயேசு உயிர்த்தெழுந்த நாளில் முதல் தரிசனம் பெற்றவள் மகதலேனா மரியாள்.

அவளிடத்திலிருந்துதான் இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். இந்த மரியாள்தான் துக்கப்பட்டு அழுது கொண்டிருந்த இயேசுவின் சீடர்களுக்கு இயேசு உயிர்த்தெழுந்தார் என்னும் ஆறுதலின் செய்தியை முதலில் கொடுத்தவள். ( வசனம் 10 ). அதன் பின்பு, ஒரு கிராமத்துக்கு நடந்து சென்று கொண்டிருந்த இரண்டு பேருக்கு மறுரூபமாக இயேசு தரிசனமானார் ( வசனம் 12 ). அதற்குப் பின்புதான், பதினொருவரும் போஜன பந்தியிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும், இருதயக் கடினத்தைக் குறித்தும் கடிந்து கொண்டார் (வசனம் 14).

சரி, பரிசுத்த ஆவியானவர் மாற்கு நற்செய்தியாளனைக் கொண்டு இப்படியாக வெளிப்படுத்தியிருப்பவைகளை ஆதாரமாகக் கொண்டு நமக்கான பாடங்களை இப்பொழுது கற்றுக் கொள்வோம்.

## I. இல்லாதவைகளை இருக்கிறதாக எண்ணி பயந்து கொண்டிருப்பது

எப்பொழுது விடியுமென்று இயேசுவின் மீது மெய்பக்தி கொண்ட அந்த ஸ்திரீகள் காத்திருந்து, சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்திற்கு வந்து. கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று பேசிக் கொண்டார்கள். ஆனால், ஏறிட்டுப் பார்க்கிறபோதோ, " ஐயோ என்ன செய்வது? " " ஐயோ எப்படி முடியும்? " என்று இவர்கள் பயந்த அந்தக் கல் தள்ளப்பட்டிருந்தது. தேவன் இந்த பக்திப் பெண்களுக்காக முன்பாகப் போய், இவர்களுக்காகக் கிரியை நடப்பித்திருக்கிறார். இவர்களுக்கு எது தடையாக இருக்குமென்று தேவன் எண்ணினாரோ அதை ஏற்கனவே எடுத்துப் போட்டுவிட்டார். ஆனால், இவர்கள் அதை உணராமல் எடுத்துப் போடப்பட்ட தடை இன்னும் இருக்கிறதாக எண்ணிப் பேசிக் கொண்டு நடந்துள்ளார்கள்.

இப்பெண்கள் இயேசுவின் மீது பக்தி கொண்டவர்கள். இயேசுவுக்காகச் செயல்படத் தீர்மானித்தவர்கள். தீர்மானித்தபடி செயல்படவும் ஆரம்பித்தவர்கள். ஆனாலும், தாங்கள் நேசிக்கிற இயேசுவாலும், இயேசுவை அனுப்பிக் கொடுத்த தேவனாலும் என்ன முடியும், என்ன முடியாது என்பது குறித்த ஆவிக்குரிய அறிவு குறைந்து காணப்பட்டார்கள். இயேசுவின் பிறப்பின் செய்தி அறிவிக்கப்பட்டபோதே தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பது பகிரங்கப்படுத்தப்பட்டது ( லூக்- 1 ; 37 ) இந்தச் செய்தியெல்லாம் இவர்களுக்கு எட்ட வேண்டிய அளவுக்கு எட்டியிருந்தால் இப்படிப்பட்ட பேச்சுக்கு அங்கே அவசியமில்லாமல் போயிருந்திருக்கும் அப்படித்தானே!

அருமையானவர்களே! பல நேரங்களில் தேவன் மீதும், இயேசுவின் மீதும் நம்பிக்கை

யுடைய நாம் இப்படித்தான் வாழ்ந்து கொண்டுள்ளோம். நாம் வேண்டிக்கொள்ளுகிற தற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லவர் ( எபே - 3 : 20 ) நமக்கு இருக்கிறார் என்பதையும், தடைகளை நீக்கிப் போடுகிறவர் நமக்கு முன்னே நடக்கிறார் என்பதையும் நாம் மறந்தவர்களாக நம்முடைய பக்தி வாழ்க் கையை நடப்பித்துக் கொண்டுள்ளோம். ஆகவேதான், கல்லறைக்குச் சென்ற அந்தப் பெண்களைப் போல, இல்லாதவைகளை இருக்கிறதாக எண்ணி தேவை யில்லாத கவலைகளோடு வாழ்வை நடத்திக் கொண்டுள்ளோம்? சிந்திப்போம்.

## II. அற்பமானவர்களை தேவன் தனக்காகப் பயன்படுத்துகிறார்.

இங்கே வசனத்தைப் பாருங்கள். வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார். அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு, அவரோடே கூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய் அந்தச் செய்தியை அறிவித்தாள் என்றுள்ளது. ( மாற்கு 16 : 9, 10 ). எப்படியிருந் தாலும் யாரோ ஒருவருக்குத்தானே முதல் முதல் தரிசனமாக முடியும். அது மகதலேனா மரியாளாக அமைந்து விட்டது. இதிலென்ன சிறப்பு இருக்கிறதென்று மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது எண்ணத்தோன்றும். ஆனால், மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார் என்ற தகவலோடு வசனங்கள் முடிந்திருந்தால் ஒருவேளை அப்படி எண்ணுவதில் பெரிதாகத் தவறு இருக்காது. ஆனால், அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார் என்றும், " அவள் போய் " உயிர்தெழுந்த செய்தியை சீடர்களுக்கு அறிவித்தாள் என்றும் கூடுதலாகக் கூறுகிறது. மகதலேனா மரியாளிடமிருந்த ஏழு பிசாசுகள் துரத்தப்பட்டதை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டுமென்ற கட்டாயம் கண்டிப்பாக இல்லை. சொல்லப்போனால், உயிர்த்தெழுந்த நாளின் செய்திக்கு அது அவசியமுமில்லை. ஆனாலும், ஆவியானவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், அதற்கு ஒரு நோக்கம் இருக்கவே வேண்டும். அதை நாம் காணத் தவறிவிடக் கூடாது.

ஏழு பிசாசுகள் பிடித்திருந்தவளென்பது அவள் எந்தளவு பாதிக்கப்பட்ட ஒரு பெண் ணாக இருந்திருக்கிறாள் என்பதை நமக்குச் சொல்லுகிறது. ( மத். 12 : 45 ). பொதுவாக, இப்படி பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சமுதாயத்தில் எவ்வித மரியாதையும், மதிப்பும் இருக் காது. ஒருவேளை, தேவ தயவினால் அவர்கள் தங்கள் பிரச்சினைகளிலிருந்து மீண்டு வந்தி ருந்தாலும் கூட அப்படிப்பட்டவர்களுக்கு சமுதாயத்தில் உரிய அங்கீகாரம் கிடைத்து விடாது. யோவான் 9 - ம் அதிகாரத்தில் காணப்படும் பிறவிக் குருடன் இதற்கு மிகச்சிறந்த உதார ணம். முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று தான்

அவனைப் பார்த்து ஏசினார்கள் ( யோவான் 9 : 59 ). ஒருவேளை, மரியாளும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்திருக்கலாம். அவள் சுகம் பெற்று, தேவன் மீதும், இயேசுவின் மீதும் அளவுகடந்த பக்தி கொண்டிருந்தும், அவள் ஏழு பிசாசுகள் பிடித்திருந்தவள் என்ற காரணத்திற்காக சமுதாயத்தின் மதிப்பை இழந்தவளாகக் காணப்பட்டிருக்கலாம். ஆயினும், மனுஷருள்ளத்திலிருப்பதை அறியும் வல்லமை கொண்ட இயேசு ( யோவான் 2 : 25 ), தன் உயிர்த்தெழுதலை முதல் முதல் வெளிப்படுத்தினதின் மூலம் அங்கே நியாயம் செய்தார்.

அருமையானவர்களே! நாம் வாழும் சமுதாயம் எப்படிப் பட்டதாயுள்ளது? இயேசுவின் காரியமாக ஒருவன் செயல்படுவதற்கு, தேவனுக்கு முன்பாக அவனுடைய இருதயத்தின் பக்திநிலை எப்படி இருக்கிறதென்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமல், சம்பந்தப்பட்டவர்ளுடைய பழைய வாழ்க்கையோ, முந்தின பக்தி நிலையோ முக்கிய இடம் பிடித்து விடுகிறதா? ஆனால், இயேசுவின் பார்வை அப்படியிருக்கவில்லை. மகதலேனா மரியாள் இதற்குச் சிறந்த உதாரணம்.

## III. பக்தியுள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது

மாற்கு ஆசிரியரின் வரிசைப்படி பார்த்தால், ஒருவேளை அந்தப் பதினொருவரும் தன்னாலே தெரிந்து கொள்ளப்பட்டு, நேசிக்கப்பட்டு, போதிக்கப்பட்டவர்களாயிருந்தாலும், தான் பிடிக்கப்பட்டு, சிலுவையிலறையப்பட்ட நேரங்களில் அவர்களின் பக்திச் செயல்பாடு இருக்க வேண்டிய அளவு இல்லாமல் போனபடியால், தான் உயிர்த்தெழுந்தபோது அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இயேசு நினைக்கவில்லை. மாறாக, தன்னிடமிருந்து, ஏழு பிசாசுகள் துரத்தப்பட்ட நேரத்திலிருந்து, தன்னைத் தொடர்ந்து பின்பற்றுவதில் எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காமல், சிலுவை வரைக்கும் சென்று, பிறகு, தான் வாழ்ந்த பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின்படி ஓய்வுநாளில் ஓய்ந்திருந்து அதன் பிறகு, எப்பொழுது விடியும் என்று காத்திருந்து, கல்லறைக்கு வந்து சேர்ந்த மகதலேனா மரியாளுக்குத் தான் முதல் தரிசனம் தந்தார்.

பக்தியுள்ளவர்கள் தேவனுடைய பார்வையில் எப்பொழுதும் சிறப்பானவர்கள். இது பற்றி பக்தன் தாவீது சொல்லும் போது, பக்தியுள்ளவர்களைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டார் என்று அறியுங்கள் ( சங். 4 : 3) என்று கூறுகிறார். தேவன் பக்தியுள்ளவர்களைக் கனப்படுத்துகிறார். எவ்வித சந்தேகமும் தேவையில்லை. இயேசுவானவர் யூதர்களுக்காக மட்டும் வராமல் எல்லோருக்காவும் வருகிறார் என்பது

பழைய ஏற்பாடு தொடங்கி அறிவிக்கப்பட்ட செய்தி ( லூக். 2 : 10 ). ஆயினும், புறவினத்தாரிலிருந்து முதல் முதல் இயேசுவின் நற்செய்திக்குத் கீழ்ப்படிந்த கொலிநெர்யுவின் சிறப்பு என்ன என்று பார்க்கும் போது, அவன் தேவ பக்தியுள்ளவன் (அப். 10 : 1) என்று வேதம் வெளிச்சம் போடுகிறது. ஆம், தேவன் பக்தியுள்ளவர்களைத் தெரிந்து கொண்டு கனப்படுத்தி ஆசீர்வதிக்கிறார்.

✞

---

**தேவனை எல்லாவற்றிலும் முதலில் வைப்பவன்**
**தேவன் தன்னோடிருப்பதைக் கடைசியில் காண்பான்.**

எப்படியெனில் சரீரம் ஒன்று அவயங்கள் அநேகம், ஒரே சரீரத்தின் அவயவயங்களெல்லாம் அநேகமாயிருக்கும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவி யினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம்தீர்க்கப்பட்டோம். சரீரம் ஒரே அவயமாயிராமல் அநேக அவயவயங்களாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவவயமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? சரீரம் முழுவதும் கண்ணானால் செவி எங்கே? அது முழுவதும் செவியானால் மோப்பம் எங்கே? தேவன் தமது சித்தத்தின்படி அவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? அவயவங்கள் அநேகமாயிருக்கும், சரீரம் ஒன்றே. கண்ணானது கையைப் பார்த்து நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும், தலையானது கால்களை நோக்கி: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும். நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுக்க இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டாமல் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமாயிருக்கிறீர்கள். ( I கொரி 12 : 12 - 27 ).

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பழைய சம்பவம், ஆனால் ... | Byron Nichols | ... 1 |
| இயேசு உயிர்த்தெழுந்த ... | E.Z.S. Rajanayagam | ... 5 |
| பாவத்தைப் பற்றிய ... | Jerry Bates | ... 12 |
| சபையில் ஆண் தலைமைத்துவம் | Louis Rushmore | ... 15 |
| சமச்சீரான உணவு | J.C. Choate | ... 18 |
| அஞ்ஞானிகள் | P.C. Philemon Rajah | ... 23 |
| அழிவிலிருந்து வரும் பாடம் | B. Arjunan | ... 28 |
| ஒரு கிறிஸ்தவன் இரட்சிப்பை ... | E.Z. Selvanayagam | ... 32 |
| நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமா? | Benny Martin | ... 37 |
| **தேவன்** | **God** | |
| கிறிஸ்து ஏற்படுத்தின வித்தியாசம் | Bobby Docker | ... 41 |
| எல்லா மனிதர்களையும் ... | Waxne Barrier | ... 44 |
| தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார்? | Samuel A. Matthews | ... 46 |
| அவர் வந்து சமாதானத்தை ... | G.F. Raines | ... 48 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| சுவிசேஷ ஊழியம் பற்றி சில ... | Charles Box | ... 51 |
| தீர்மானத்தின் பள்ளத்தாக்கு | David Deffenbaugh | ... 53 |
| நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கான ... | Gary C. Hampton | ... 55 |
| **சபை** | **The Church** | |
| பழங்கால வேதாகம பிரசங்கத்திற்காக... | Gary C. Hampton | ... 57 |
| ஆச்சரியம் மற்றும் கண்டு ... | Dalton Key | ... 59 |
| நரகத்தின் அஸ்திபாரங்கள் ... | Paul Holland | ... 60 |
| சபையைப் பற்றி உங்கள் ... | John R. Vaughan | ... 62 |
| மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் | Doyle kee | ... 64 |

| | | |
|---|---|---|
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | |
| சூதாட்டம் ஒரு தவறான செயலாகும் | Hershel Dyer | ... 66 |
| தேவனுடைய முழுமையான ... | Steve Vice | ... 68 |
| மனசாட்சி ஒரு பாதுகாப்பான ... | Basil Overton | ... 71 |
| ஜெபத்தின் மனித பக்கம் | Ancil Jenkins | ... 73 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| கூட்டாண்மையின் வல்லமை | Bill Mcfarland | ... 76 |
| **ஆராதனை** | **Worship** | |
| கர்த்தருடைய பணத்தை ... | Royce Frederick | ... 78 |
| **அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** | **Daily Christian living** | |
| உங்கள் விசுவாசத்தைக் ... | Jimmy Jividen | ... 81 |
| ஒளியை நோக்கி வளர்தல் | Bonnie Rushmore | ... 83 |
| நாம் மூச்சாயிருக்கிறோம் | Marilyn LaStrape | ... 85 |
| சாத்தான் எங்களைத் தடை ... | Loy Mitchell | .. 88 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | |
| பெற்றோர்கள் முக்கியத்துவம் ... | Ferman Carpenter | ... 90 |
| கூட இருக்கும் தகப்பன்மார்கள் | Jack W. Carter | ... 91 |
| உங்கள் குழந்தைகள் பற்றி ... | Max Patterson | ... 93 |
| என் குடும்பத்திற்கு நான் ... | Ken Tyler | .. 94 |
| **ஹாய் குட்டீஸ்!** | **Hey You Kids!** | |
| நேரம் | Spc Alex Gibson | ... 96 |
| **வேதாகம கதாபாத்திரங்கள்** | **Biblical History** | |
| பிலேயாமைப் பற்றி ... | Rex Banks | ... 100 |
| ஆபிரகாம் : தேவனால் ... | Jimmy Young | ... 102 |
| வசன ஆராய்ச்சி | Jerry Bates | ... 104 |

# பாவத்தைப் பற்றிய விழிப்புணர்வு அறிவு

## The Awareness Of Sin

Jerry Bates

கிறிஸ்தவ பிரசங்கியார்களும், எழுத்தாளர்களும் சபைகளில் காணப்படும் பாவத்தைக் குறித்து முறையிடுவதையும், புலம்புவதையும் நாம் காண்கிறோம். உலகத்தில் காணப்படும் பாவங்களில் கிறிஸ்தவர்களுக்கு எந்தப் பங்கும் இருக்கக்கூடாது என்று நாம் சரியாகத்தான் நினைக்கிறோம். சில வேளைகளில், கிறிஸ்தவர்கள் தங்களைத் தேவனுக்கு உண்மையுள்ள பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டு, தாறுமாறான வாழ்க்கை வாழ்வது நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள் தங்களை கிறிஸ்துவினிடத்தில் அர்ப்பணிக்க அவர்களை எப்படி ஊக்கப்படுத்துவதென்று எழுத விரும்புகிறேன்.

என்னிடத்தில் எல்லா பதில்களும் இருக்கிறதென்று நான் சொல்லவில்லை. ஆனால், கிறிஸ்தவர்களை தங்கள் பாவத்தை உணரச் செய்வது ஒரு சாத்தியமான தீர்வு என்று நினைக்கிறேன். முதலில், இது முட்டாள்தனமாகவும் பொருத்தமற்றதாகவும் தெரியும். நம் பாவங்களைப் பற்றிய அறிவு எப்படி ஒருவரை அர்ப்பணிக்கும்படி வழி நடத்தும்? நிச்சயமாகவே, இதற்கு எதிர்மறையானதே சரியானதாக தோன்றும், ஆயினும் இன்று சபையில் பிரதானமான பிரச்சனைகளில் ஒன்று பாவத்தைப் பற்றிய அறிவில்லாமைதான். இதன் விளைவாக, பல கிறிஸ்தவர்கள் தேவனுக்கான சேவையில் உற்சாகமற்றவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இதே காரியத்தைக் குறித்து இயேசு கிறிஸ்து லூக்கா 7 : 36 – 50ல் போதித்திருக்கிறார். கிறிஸ்து, சீமோன் என்னும் ஒரு பரிசேயனுடைய வீட்டில் புசித்துக் கொண்டிருந்தார். அப்போது பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து

பரிமளத் தைலத்தைப் பூசினாள். பரிசேயனாகிய சீமோன் அதைக் கண்டபோது கிறிஸ்து தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாரென்றும் இப்படிப்பட்டவ ளென்றும் அறிந்திருப்பார். ஒருவேளை, அவள் பாவியாயிருப்பதை கிறிஸ்து அறியாதிருந்தால் ஒரு தீர்க்கதரிசிக்கு அவசியமான பரிசுத்தம் அவரிடத்தில் இல்லையென்று அவன் நினைத்தான். எனவே, அவனுடைய பார்வையில் இயெசு கிறிஸ்து ஒரு தீர்க்கதரிசியல்ல என்பது திண்ணம்.

சீமோன் என்ன நினைத்துக் கொண்டிருந்தான் என்பதை இயேசு கிறிஸ்து அறிந்து அவர்களுக்கு ஓர் உவமையைச் சொன்னார். ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டிருந் தார்கள். ஒருவன் ஐந்நூறு வெள்ளிக் காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக் காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக : எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டாரோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான் (லூக்கா 7 : 41 – 43).

இங்கே ஆவிக்குரிய பயன்பாடு மிகவும் தெளிவாயிருக்கிறது. நாம் நம் பாவத்தைக் குறித்தும், பாவமன்னிப்புக்கான தேவை குறித்தும் அறிந்து கொண்டால், தேவன் மீதான அன்பும், கிறிஸ்து மீதான அன்பும் ஊற்றேடுத்து வரும். பல வேளைகளில், கிறிஸ்தவர் களாகிய நாம் பாவமன்னிப்புக்கான தேவை நமக்கு உண்டு என்பதை மறந்து விடுகிறோம். நாம் பூரணர் அல்ல. இருந்தபோதிலும், மற்றவர்களுடைய பாவம் போல நம் பாவங்கள் பெரி தல்ல என்று எண்ணிக் கொள்கிறோம். நாம் நல்ல வாழ்க்கையை, ஒழுக்கமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பதாக நினைக்கிறோம். கொடூரமான பாவங்கள் எதையும் செய்யவில்லை. எனவே, பாவ மன்னிப்பு அவசிய மில்லை என்று நினைத்துக் கொள்கிறோம். நாம் பரிசேயனாகிய சீமோன் சுயநீதியுடையவனாக தனக்கு பாவ மன்னிப்பு தேவையில்லை என்று நினைத்தது போல நாமும் நினைக்கிறோம். அதன் விளைவாக, அவன் தேவனை கொஞ்சமாக நேசித்தான். ஆனால், அந்த பாவியான ஸ்திரீயோ அவருயை பாவம் அதிகமாயிருந்தபடியால் தேவனை அதிகமாக நேசித்தாள் ( லூக்கா 7 : 47 ). இங்கே கேள்வி நம்மிடத்தில் பாவங்கள் அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா என்பதல்ல. பாவத்தைப் பற்றிய அறிவு நமக்கு இருக்கிறதா என்பது தான்.

பிரியமானவர்களே, நம்மிடத்தில் பாவம் அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக

இருக்கிறதா என்பது ஒரு பொருட்டல்ல. எந்தப் பாவத்தையும் நாம் நிவர்த்தி செய்ய முடியாது. பாவத்தின் சம்பளம் மரணம் என்று வேத வசனம் சொல்கிறது ( ரோமர் 6 : 23 ) நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். இல்லையென்றால், நாம் நித்திய ஆக்கினைக்குட் படுத்தப்படவேண்டும். ஆகவே, நாமெல்லோரும் நாம் செய்த பாவங்களுக்காக தேவனுக்கு கடன்பட்டிருக்கிறோம். தேவனோ பாவமன்னிப்பு மற்றும் இரட்சிப்பு போன்றவற்றை கிறிஸ்துவின் தியாகத்தின் மூலமாக நமக்கு அளித்திருக்கிறார். எனவே, பாவத்தைப் பற்றிய அறிவும், உணர்வும் நமக்கு அவசியமாயிருக்கிறது.

நமக்குப் பாவத்தை பற்றிய அறிவு இல்லாமல் போனால் பல பிரச்சினைகள் ஏற்படும். கிறிஸ்துவின் கூற்றுப்படி, எவனுக்கு கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ் சமாய் அன்புகூருவான் அதன் விளைவாக ஒருவர் தேவனிடத்தில் குறைவான அன்பு கொள்கிறார். இன்னும் அதன் விளைவாக ஒருவர் தனக்கு கீழ்ப்படியும் தேவை குறைவாக இருப்பதாக உணர்கிறார். ஏனென்றால், அன்பும், கீழ்ப்படிதலும் ஒன்றோ டொன்று கைகோர்த்து செல்கிறது. இயேசு கிறிஸ்து என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக் கிறான் என்றார் ( யோவான் 14 : 21 ) இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி நாம் தேவ னுக்குக் கீழ்ப்படிய வில்லையென்றால், நாம் அவரை நேசிப்பதில்லை என்றுதான் பொருள்.

மேலும், ஒருவருக்கு பாவத்தைப் பற்றிய அறிவு இல்லையென்றால் தேவனிடத்தில் முழு அர்ப்பணிப்பு இருக்காது. சில வேளைகளில், தேவன் என்னிடத்தில் தாராளமாயிருக்க வில்லையென்றால், நான் எதற்கு அவரிடத்தில் தாராளமாய் இருக்க வேண்டும்? என்கிற எண்ணம் நம்மில் சிலருக்கு ஏற்பட்டு விடுகிறது. சிலர் எப்போதும் தேவனிடத்திலிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். அவர் ஆசீர்வதிப்பதை நிறுத்திக் கொண்டால் சிலர் தேவனுக்கு செய்ய வேண்டிய சேவையையும் நிறுத்திக் கொள்கிறார்கள்.

பாவத்தைப் பற்றிய அறிவு நமக்கு இல்லையென்றால் பல பிரச்சனைகள் ஏற்படும். நாமெல்லாரும் பாவக்கடன்பட்டிருக்கிறோம். அதை நம்மால் திருப்பிச் செலுத்த முடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக இரட்சிப்பு என்னும் ஈவு நமக்கு கிடைத்திருக்கிறது. இதை நாம் ஒருபோதும் சம்பாதிக்க முடியாது. மேலும், அந்த ஈவை நமக்கு தருவதற்கு அவருக்கு எந்த அவசியமும் இல்லை. தேவனுடைய ஈவின் மகா மேன்மையை நாம் உணர்ந்து கொண்டால் தேவனுக்கான நம்முடைய அன்பும், அர்ப்பணிப்பும் நிச்சயமாக அதிகரிக்கும்.

✞

# சபையில் ஆண் தலைமைத்துவம்

# Male leadership in the church

Louis Rushmore

கிறிஸ்துவின் சபை இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமாயிருக்கிறபடியால் ( ரோமர் 16 : 16 ). அவர் எவைகளை அங்கீகரித்திருக்கிறாரோ அவைகளின்படி நடக்கக் கடமைப் பட்டிருக்கிற எல்லோருமே மோசேயின் வார்த்தைகளுக்கும் அல்லது பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் செவிகொடுக்க வேண்டும் ( மத்தேயு 17 : 1 – 5; யோவான் 12 : 48 ). மேலும், இயேசு கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தைக் கட்டளை யிடுகிறவராகவும் (யாக். 4 : 12). புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தராகவும் இருக்கிறார் (எபி. 9 : 15 ) இன்று இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களெல்லாம் மத சம்பந்தமான அறிவுரைகளுக்கு இவரிடமே செல்ல வேண்டும். தெய்வீக போதனைகளை மனுசருடைய கற்பனைகளைக் கொண்டு மாற்றுவதை இயேசு கிறிஸ்து கடிந்து கொண்டார் (மத்தேயு 15 : 9 ). தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் வேறொரு சுவிசேஷத்தையும் ( கலாத்தியர் 1 : 6 – 9 ), தெய்வீக சித்தத்திற்கு மாற்றான மனித சித்தத்தையும் கடுமையாகக் கடிந்துகொண்டார் ( கொலோ 2 : 23 ). ஆகவே, தேவன் கிறிஸ்தவத்தில் எவைகளைஅங்கீகரித்திருக்கிறார் என்பதை கற்றுக் கொள்வதற்காக நாம் பிரத்யேகமாக புதிய ஏற்பாட்டுக்குத்தான் செல்லவேண்டும்.

இது சபையில் ஆண்களின் பங்கு, பெண்களின் பங்கு உட்பட வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கும் எல்லா பாடங்களுக்கும் உண்மையாயிருக்கிறது. சபையிலும், வீட்டிலும் ஆண்களுக்கான பங்கு என்ன, பெண்களுக்கான பங்கு என்ன போன்றவைகளெல்லாம் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, அவைகள் சிருஷ்டிப்பின் காலத்திற்கே திரும்பிச் செல்கின்றன. அதாவது, கலாச்சாரமேயில்லாத சிருஷ்டிப்பின் நாட்களிலிருந்தே இவைகள் தேவனால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ( I தீமோத்தேயு 2 : 13 – 14; I கொரிந்தியர் 11 : 8 – 9 ). புதிய ஏற்பாடு அங்கீகரிக்கிற சபை தலைமைத்துவத்தை உள்ளூர் சபைகளில் நடைமுறைப்படுத்த கிறிஸ்துவின் சபைகள் கடமைப்பட்டிருக்கின்றன. தேவனால் அங்கீகரிக்கப்படாத காரணத்தால் தான் கிறிஸ்துவின் சபைகளில் பெண்

தலைமைத்துவம் இல்லை. தேவன் பெண்களை தலைமைத்துவப் பங்கிலிருந்து விலக்கி வைத்திருக்கிறபடியால், தேவனால் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை ஏற்க ஆண்கள் தீவிரம் காட்டவேண்டும் ( I தீமோத்தேயு 2 :8 )

தேவனுடைய அதிகாரத்திற்கு மதிப்பு கொடுத்து, தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனால் அங்கீகரிக்கப்பட்டவைகளில் அக்கறை கொள்ளுவார்கள். சபையின் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை ஒரு பிராந்திய சபை தேவபக்தியுள்ள மனிதர்களால் வழிநடத்தப்படும், அச்சபை பெண் தலைமைத்துவத்தை கொண்டிராது. மனிதனுக்காக தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை எப்படி நாம் மாற்ற முடியாதோ அப்படியே தேவன் ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் பணித்திருக்கிற கடமைகளையும், பொறுப்புகளையும் நாம் மாற்ற முடியாது. வேத வாக்கியங்களின் போதனைக்கு எதிராக நாம் செயல்பட்டால் அது ஆவிக்குரிய பிரகாரமாகவும், நித்திய நித்தியமாகவும் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்திவிடும்.

உலகெங்கிலுமுள்ள சமகால சமுதாயத்தின் மனநிலை ஏற்கனவே தேவன் ஆணுக்கும், பெண்ணுக்கும் கொடுத்திருக்கிற கடமைகளை அத்து மீறிவிட்டது. அறிவுப் பூர்வமாகப் பார்த்தால் பெண்கள் ஆண்களுக்கு கீழானவர்களல்ல, ஆவிக்குரிய பிரகாரமாக பார்த்தாலும் நிச்சயமாக அப்படித்தான். ஆவிக்குரிய பிரகாரமாக ஆண்களும், பெண் களும் சமமானவர்கள் என்பது வேதாகம உபதேசமாகும் ( கலாத்தியர் 3 : 27 ). மேலும், வேலை செய்யும் இடங்களில் ஆண், பெண் சமத்துவம் நிலவலாம், அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், வீட்டிலும், சபையிலும் தேவன் ஆண்களுக்கென்றும், பெண்களுக் கென்றும் குறிப்பாக வெவ்வேறு பங்குகளைக் கொடுத்திருக்கிறார். உண்மையுள்ள கிறிஸ் தவர்கள் தெய்வீக ஆலோசனைகளிலிருந்து வழிவிலகிச் செல்லக்கூடாது. ஆணுக்குப் பெண் கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறபடியால்தான் ஆறாயிரம் ஆண்டுகளாக பெண்கள் மதம் சம்மந்தமான காரியங்களிலும், வீட்டிலும் ஆண்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார்கள். அதுபோல், புதிய ஏற்பாட்டில் தேவன் சபையிலும், வீட்டிலும் பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்படியவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறபடியால் தான் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக பெண்கள் ஆண்களுக்கு சபையிலும், வீட்டிலும் கீழ்ப்படிகிறார்கள். தற்கால சமுதாயத்தில் சில அரசியல் சீர்திருத்தங்கள் இருக்கின்ற போதிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் மாறாத சில பங்குகளை தேவன் கொடுத் திருக்கிறார். உதாரணமாக, இன்றும் பெண்கள்தான் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டி ருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் இப்பங்கை I தீமோத்தேயு 2 : 15 ல்

மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். சபையிலும், வீட்டிலும் பெண்களின் பங்கு பற்றிய முரண்பாடு தேவனுடைய அதிகாரத்தையும், அவருடைய வார்த்தையையும் மதிக்காதவர்களுக்குத் தான் ஏற்படுகிறது.

ஸ்திரீகள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிவதற்கு வேதாகமம் பல காரணங்களைக் கொடுக்கிறது. 1. என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள் ( I தீமோத்தேயு 2 : 13 ); 2. மேலும், ஆதாம் வஞ்சிக்கப்பட விடல்லை ; ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். 3. புருஷன் ஸ்திரீயி லிருந்து தோன்றினவனல்ல; ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள் (I கொரி 11 : 8); 4. புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல; ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள் (I கொரிந்தியர் 11 : 9). இருந்தபோதிலும் ஸ்திரீயின் இரட்சிப்பையும், மதிப்பையும் புருஷன் கட்டுப்படுத்த முடியாது ( கலாத்தியர் 3 : 28 ). ஸ்திரீகள் உட்பட கிறிஸ்தவர்களுக்கான வாழ்க்கையின் அளவுகோல் சமுதாய சட்டதிட்டங்களல்ல. மாறாக, தேவனுடைய வார்த்தைகள் தான். சபையிலும், வீட்டிலும் கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான இறுதி அதிகாரம் கொண்ட ஸ்திரீகள் என்ன பங்கு வகிக்க வேண்டும், புருஷர்கள் என்ன பங்கு வகிக்க வேண்டும் என்று வேறுபடுத்திக்காட்டும் முழுமையான உரிமை நம் பரம தகப்பனுக்கே உண்டு.

இயேசு கிறிஸ்து கட்டின சபையில் ஆண் தலைமைத்துவம் ஏதேன் தோட்டத்தை ஆரம்பமாக கொண்டதாகும். ஆம், புதிய ஏற்பாட்டு சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சர்வவல்லமையுள்ள தேவன் மார்க்க சம்மந்தமான காரியங்களிலும், வீட்டிலும் ஆண் தலைமைத்துவத்தை ஏற்படுத்திவிட்டார். பிதாக்களின் காலத்திலிருந்து இன்றுவரை ஆண் தலைமைத்துவம் நீடித்திருக்கிறது. ✞

---

## எச்சரிக்கையாயிருப்போம்

இதோ, பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் செயல்களினாலும், தங்கள் வீம்புகளினாலும் மோசம்போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை. அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

(எரேமியா 23 : 32).

# சமச்சீரான உணவு

# A Balanced Diet

J.C. Choate



மனிதன் உயிர் வாழ்வதற்கு சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் அப்பமும் தண்ணீரும் அவசியமாயிருக்கிறது. ஆவிக்குரிய பிரகாரமாக, இந்தப் போஷாக்கு இயேசு கிறிஸ்து ஜீவத்தண்ணீராகவும், ஜீவ அப்பமாகவும் அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறார் என்பதன் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. (யோவான் 6 : 35 : 4 : 14 ). அவர் மூலமாக நாம் பெற்றிருக்கும் போஷாக்கு நம்மை இரட்சிக்கிறது. நம்மை போஷிக்கிறது, மேலும், அது இந்த வாழ்க்கையில் நம்பிக்கையையும், பரலோக வீட்டிற்கான வாக்குத் தத்தத்தையும் நமக்குத் தருகிறது.

நாம் தேவனுடைய வார்த்தைகளினால் போஷிக்கப்படுவது ஆவிக்குரிய பிரகாரமாக அவசியமாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து " மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று சொன்னார் ( மத்தேயு 4 : 4 ).மலைப் பிரசங்கத்தில் அவர் நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள் " என்று சொன்னார். ( மத்தேயு 5 : 6 ).

நாம் தியானிக்கும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தாலும் சரி, நாம் கேட்கும் பிரசங்கங்களாக இருந்தாலும் சரி சமச்சீரான ஆகாரம் நமக்கு தேவையாயிருக்கிறது. சத்தியத்தின் ஒரு பகுதியை மட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நாம் சிந்தித்துக் கொண்டிருந்தால் தேவனுடைய சித்தத்தைப் பற்றிய நம் கண்ணோட்டத்தில் நாம் ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்ள நம் சிந்தனையைத் திரித்து குறுகச் செய்து விடுவோம். நம் ஆவிக்குரிய உணவு சமச்சீராக இல்லையென்றால் அது மதவாதம், உற்சாகமின்மை போன்ற ஆவிக்குரிய நோய்களுக்கு வழி வகுக்கும்.

நம் அன்றாட வாழ்க்கையில் சரீரப்பிரகாரமாக நாம் உறுதியானவர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் இருக்க வேண்டுமென்றால், நமக்குச் சமச்சீரான ஆகாரம் தேவை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நமக்கு விருப்பமான ஆகாரத்தை உண்பது மாத்திரம் நல்லதல்ல. குழந்தைகளுக்கும், வாலிபர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பால் அவசியமானதாகும். இருந்தபோதிலும் ஒரு குறிப்பிட்ட காலம் வரும்போது சரியான சரீர வளர்ச்சிக்கு ஒருவர் பலமான ஆகாரத்தை எடுத்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. இதே விதி ஆவிக்குரிய பிரகாரமாகவும் உண்மையாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு " நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் " என்று சொன்னார். ( I பேதுரு 2 : 2). மேலும், எபிரெய ஆசிரியர் சொல்லும்போது நாம் உறுதியானவர்களாக பெலனுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றால் பலமான ஆகாரத்தை உட்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார். காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (5 : 12 : 14)

நாம் ஆரோக்கியமற்ற உணவை உட்கொள்ளும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆரோக்கியமற்ற ஆகார கலாச்சாரம் உலக முழுவதும் வேகமாக பரவி வருகிறது. ஆப்பிரிக்க நாடுகளில் இக்கலாச்சாரம் படையெடுத்துவிட்டது. இவ்வகையான ஆகாரம் அதிகப்படியான கொழுப்பு சத்தையும், உடலுக்குத் தேவையான சத்துக்களை குறைந்த அளவில் கொண்டதாகவும் காணப்படுகிறது. ஆனால், இவைகள் துரிதமாக தயார்படுத்தப்படுகிறது.

இன்று ஆரோக்கியமற்ற ஆவிக்குரிய ஆகாரங்கள் வேகமாக ஜனங்களுக்கு கொடுக்கப்படுகின்றன. ஜனங்கள் எந்நேரத்திலும், எங்கிருந்தாலும் வெறுமனே விசுவாசிப்பதனால் மட்டும், அல்லது ஒரு ஜெபத்தினால் மட்டும் இரட்சிக்கப்படுவதாக வாக்களிக்கப்படுகிறார்கள். பெரும்பாலான ஜனங்கள் பரவசமூட்டும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதால், பெரும்பாலான மதத்தலைவர்கள் மற்றும் பிரசங்கிமார்கள் ஜனங்களுக்குப் பிடித்தவைகளைக் கொடுக்கிறார்கள் – ஆனால் நிச்சயமாக விலைக்குத் தான் தருகிறார்கள்.

நாம் லேசான ஆகாரங்களை, இனிப்பு வகைகளோடு எடுத்தால் ஆரோக்கியமற்ற ஒரு சூழ்நிலைக்குள் கடந்து செல்கிறோம் என்று பொருள். பெரும்பாலான நேரங்களில் நமக்கு தேவை பலதரப்பட்ட காய்கறிகளை உள்ளடக்கிய ஆகாரமும், சில வேளைகளில் போதுமான அளவு மாமிச ஆகாரமும் தான்.

ஆவிக்குரிய பிரகாரமாக, நாம் சுவிசேஷத்தை போதுமான அளவு கேட்டு அதை விசுவாசித்து இரட்சிக்கப்படும்படி அதற்குக் கீழ்ப்படியலாம். ஆனால், அதற்கு மேல் நாம் முதிர்ச்சி அடையவில்லையென்றால் நாம் பிரச்சனைக்குள்ளாகிறோம். நமக்கு தேவை ஒரு நல்ல உறுதியான கிறிஸ்தவ வாழ்க்கையைக் கட்டுவதற்கு உறுதியான அஸ்திபாரம்தான். இதற்கு வெறுமனே சுவிசேஷம், சபை, ஆராதனை பற்றிய அறிவு மாத்திரம் போதாது. விசுவாசம் என்றால் என்ன, ஜெபம் எப்படி கிரியை செய்கிறது மற்றும் கிறிஸ்தவ சாட்சியங்களைப் பற்றிய புரிந்து கொள்ளுதலும் அவசியமாயிருக்கிறது.

மறுமுனையில், நாம் அடைந்தாயிற்று, எங்களுக்கு எல்லாம் தெரியும் என்கிற நிலைக்கு சில வேளைகளில் வந்து விடுகிறோம். சில வேளைகளில், நமக்கு எல்லாம் தெரியாவிட்டாலும் கூட தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அடிப்படை உபதேசங்கள் தெரியும் என்றும் மெத்தனப் போக்கு நமக்குள் ஏற்பட்டு விடுகிறது. ஆதலால், அடிப்படை உபதேசங்களைப் பற்றி திரும்பத் திரும்ப பிரசங்கிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பேதுரு இதைப்பற்றி சொல்லும்போது " இதினிமித்தம் இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன் " ( II பேதுரு 1 : 12 ) என்று சொன்னார். மேலும், அவர் தொடர்ந்து சொல்லும்போது, " பிரியமானவர்களே இந்த இரண்டாம் நிருபத்தை இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன் " என்றும் சொன்னார். ( II பேதுரு 3 : 1 )

வேதவாக்கியங்களில் எத்தனை முறை நோவா பற்றியும், ஜலப்பிரளயம் பற்றியும், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை மீட்டது மற்றும் சோதோம் கொமராவின் அழிவு பற்றியும் வாசிக்கிறோம்? நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருடைய வாழ்க்கை, மரணம், அடக்கம் மற்றும் உயர்த்தெழுதலைப் பதிவு செய்ய நான்கு எழுத்தாளர்களைத் தெரிந்து கொண்டார். அத்தோடு பவுல், பேதுரு மற்றும் யோவான் போன்ற அப்போஸ்தலர்கள் மாபெரும் பாடங்களை மறுபடியும் வலியுறுத்தினார்கள். தேவனுடைய காரியங்களை திரும்பத் திரும்பச் சொல்லும் போது, நாம் அவைகளை தொடர்ந்து நினைவில் வைத்துக் கொள்ள உதவுகிறது. மேலும், இது தேவனுடைய சத்தியத்தை பலப்படுத்துகிறது.

தனிப்பட்ட முறையில் நாம் வேத பாடத்தைப் படிக்கும்போதும் சரி, நம் பிரசங்க மேடைகளிலும் சரி தேவனுடைய வல்லமை, பரலோகத்தின் அழகு, நரகத்தின் வேதனை போன்ற எண்ணற்ற தலைப்புகளைக் குறித்து நாம் படிக்க வேண்டும். அது நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கும், கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் உச்ச நிலையை எட்டுவதற்கும் அது நம்மை உற்சாகப்படுத்தும். ஆனால் அதே நேரத்தில், சுவிசேஷத்தைக் குறித்தும் வசன அடிப்படையிலான ஞானஸ்நானத்தைக் குறித்தும், ஒன்றான மெய் சபையைக் குறித்தும், ஆராதனையில் தேவன் விரும்பும் சபையைக் குறித்தும் நாம் பாடங்களைப் படிக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தை நமக்கு மாத்திரம் போதிக்கப்படுவதில்லை. பலதரப்பட்ட மக்கள் பல்வேறு ஆவிக்குரிய தேவைகளில் இருப்பார்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. நம்முடைய கூட்டங்களில் பலதரப்பட்ட தலைப்புகளில் பிரசங்கங்களை கேட்க சிறுபிள்ளைகள், வாலிபர்கள் புதிதாக மனமாற்றமடைந்தவர்கள், பார்வையாளர்கள், வயதான அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். மனிதர்கள் மறக்கின்ற சுபாவத்தை உடையவர்களாக இருக்கிறபடியால் தேவனுடைய வார்த்தைகள் திரும்பத் திரும்ப போதிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. தேவன் விரும்புகிறபடி காரியங்கள் செய்யப்படும்போது சபையில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்படும். சபை அங்கத்தினர்கள் மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க திறன் பெற்றவர்களாக காணப்படுவார்கள், சபை பலமான ஒன்றாகக் காணப்படும்.

சபையில் தேவனுடைய வார்த்தைகள் சரியாக போதிக்கப்படவில்லையென்றால் சிறுபிள்ளைகள் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவில்லாமல் வளருவார்கள், புதிய அங்கத்தினர்கள் முன்பு அறிந்திருந்த சத்தியத்தை மறந்துவிடுவார்கள். தேவனுடைய வார்த்தையல்லாமல் வார்த்தை ஜாலங்களை உள்ளடக்கிய பேச்சுகள்,

சொற்பொழிவு போன்றவைகளால் அங்கத்தினர்கள் அலட்சியப்போக்கைக் கடைப்பிடித்து விசுவாசத்தில் பெலவீனமடைந்து விடுவார்கள். சபை உறுதியாயிராது.

என் சகோதரர்களே! நம்மை மீட்டமைக்கிற வேதபாடத்திற்கும், நற்செய்திப் பிரசிங்கத்திற்கும் நாம் திரும்புவோம். தேவனுடைய வார்த்தையைப் பகுத்துப் போதிக்கிற சபைக்கு நாம் திரும்புவோம். தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவு நம் ஆத்து மாக்களை போஷித்து தேவன் நாம் செய்யும்படியாகப் பணித்திருக்கிற காரியங்களைச் செய்து முடிக்க வழிவகுக்கும். தேவனுடைய வார்த்தையின் சமச்சீரான ஆகாரம் மாத்திரமே இதைச் செய்ய முடியும். " கடைசியாக என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்து வத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள் " என்று அப்போஸ்தலனாகிய பவுல் புத்திமதி சொல்வதை கவனிப்போம் (எபேசியர் 6 : 10).

✞

## வசனம் தரும் ஆறுதல்

✓ நீங்கள் ஆவிக்குரிய போராட்டம் கடுமையாக இருக்கிறதே என்று நினைத்தால் சங்கீதம் 27 ஐ தியானியுங்கள்.

✓ நீங்கள் ஆவிக்குரிய காரியங்களில் குறைவுள்ளவர்கள் என உணர்ந்தால் ரோமர் 8 ஐ தியானியுங்கள்.

✓ நீங்கள் மற்றவர்களிடத்தில் காட்டும் அன்பிலும், தேவனிடத்தில் காட்டும் அன்பிலும் பெலவீனமாக இருந்தால் I கொரி 13 ஐ தியானியுங்கள்.

✓ நீங்கள் தேவனுடைய பிரமாணத்தைப் பற்றிய அறிவில் குறைவுள்ள வர்களாக இருந்தால் யாத்திராகமம் 20 : மத்தேயு 23 : 34 - 40 பகுதிகளைத் தியானியுங்கள் .

✓ நீங்கள் மன்னிக்க சிரமப்பட்டாலோ அல்லது மன்னிப்பைத் தேட சிரமப்பட்டாலோ சங்கீதம் 32 மற்றும் மத்தேயு 18 ஐ தியானியுங்கள்.

# அஞ்ஞானிகள்!

# *Gentiles & Heathens*

Philemon Rajah

**ஞா**னத்திற்கும், அஞ்ஞானத்திற்கும் உள்ள இடைவெளி மிகவும் பெரியது. அது ஞானிக்கும் பைத்தியத்திற்கும் உள்ள இடைவெளி போன்றது. ஞானம் என்பது, தேவனுக்கு பயப்படுகிறதினாலே ஒருவரிடத்தில் ஆரம்பமாகிறது. நீதி 1 : 7 " கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள் " என்கிறது. அவர் அதை தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்வதினாலே முழுமையடைகிறது. யாக் 1 : 5ல் " உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் " என்று வாசிக்கின்றோம்.

ஞானம், ' தேவனுக்கடுத்த ஞானம் ' , ' உலகத்துக்கடுத்த ஞானம் ' என இரண்டு வகைப்படும்.

' அஞ்ஞானம் ' என்பது, முழுமையாகவே தேவனுக்கு எதிரானது. அதாவது தேவனுக்கு எதிரான எல்லாமே அஞ்ஞானமாக இருக்கிறது. சில நேரங்களில் இந்த பயங்கரமான அஞ்ஞானம், பாதுகாப்பானது போல தோன்றுமே தவிர, அது உண்மையில் ஞானமல்ல.

யார் அஞ்ஞானி?

**1. பரலோக தேவனை தவிர்த்து மற்றவற்றை ஆராதிப்பவர்கள்.**

ஆராதனை அல்லது தொழுகை என்பது தேவனுக்குரியது. அதை மற்ற யாருடனோ, மற்ற வேறு எதுவுடனோ பங்கிடுவது அஞ்ஞானம். எசே 20 : 32 மரத்துக்கும், கல்லுக்கும் ஆராதனை செய்து, அஞ்ஞானிகளைப் போலவும், தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப் போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே, உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை ". ஆகையால் அப்படிப்பட்ட ஆராதனையும், பலியும் வீண்

மற்றும் பாவமுமாகும். 1 கொரி 12 : 2 " நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதை செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே ". மேலும், பவுல் அந்த பலிகள் பேய்களுக்குரியது என்கிறார் ; 1 கொரி 10:20 " அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை ".

ஆகையால், தேவனுடையதை, தேவனுக்கு மட்டுமே செலுத்த வேண்டும்.

## 2. வீண் வார்த்தைகளைப் பேசுபவர்கள்.

மத்தேயு 6:7 " அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள் ".

ஒவ்வொன்றையும் அளக்க ஒரு அளவுகோல் உண்டு.

திடப் பொருளை அளக்க கிலோ கிராம்;

திரவப் பொருளை அளவிட லிட்டர்;

நிலங்களை அளக்க மீட்டர் அல்லது அடி;

ஆனால், வார்த்தைகளை எப்படி அளப்பது?

மிகவும் எளிது. நாம் பேசுகின்ற வார்த்தை, பேசுகின்ற நமக்கும், அதை கேட்கின்றவர்களுக்கும், அவர்களது ஆத்துமத்திற்கும் எப்பொழுது பயனற்றதாக உள்ளதோ, அவைகள் எல்லாம் வீண்வார்த்தைகள்!


எபே 4 : 29 " கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்: பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள் "

## 3. உலக கவலையினால் நிறைந்திருப்பவர்கள்

கவலைக்கும் அக்கறைக்கும் வித்தியாசம் உண்டு. அக்கறை நம்மை உந்தி செயல்பட வைக்கும் ; கவலை நம்மை வருத்தி முடக்கிப்போடும். மத்தேயு 6 : 32 " இவைகளெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளையெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமப்பிதா அறிந்திருக்கிறார் ".

மத்தேயு 6 : 27, 31 " கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு

ஒரு முழத்தைக் கூட்டுவான்? " " ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள் "



இயேசு, நாம் அக்கறையுள்ளவர்களாகவும், அதே சமயத்தில் கவலையற்றவர்களாகவும் இருக்கும்படி விரும்புகிறார். பிலி 4:6–7 " நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும் - ஆகையால் என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள் "

## 4. தங்களைத் தாங்களே கறைப்படுத்துகிறவர்கள்.

1 தெச 4 : 4 – 7 " தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து, இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிகட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் ".

ஒருவர், சேறுள்ள இடத்தில் அமர்ந்து அந்த சேற்றை தன் மேலே அள்ளி போட்டுக் கொண்டு இருந்தால், அவரைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள். அதைக் விடக் கொடியது, ஒருவர் தன் உடலை மோகத்தினால் கறைப்படுத்துவதாகும். ஏனெனில், கறைபடுவது உடல் மட்டுமல்ல, ஆன்மாவும் தான். மோகம் அல்லது காமவிகாரத்தினால் ஒருவர் தன்னை பல விதங்களில் கறைப்படுத்த முடியும். உதாரணமாக, விபச்சாரம், வேசித்தனம், சுயபுணர்ச்சி, ஆண்புணர்ச்சி, மிருகபுணர்ச்சி, ஆபாச வார்த்தைகள், மோக சிந்தனைகள் மற்றும் ஆபாச காட்சிகள் போன்றவை ஆகும்.

### 5. தன்னை திருத்திக்கொள்ளாமல் அல்லது மனந்திரும்பாமலிருப்பவர்கள்

நாம் நமது தவறுகளை உணராதிருப்பது, அல்லது அதை சரியென்று சாதிப்பது, அல்லது அந்தத் தவறை தொடர்ந்து செய்ய நியாயமான காரணங்களைத் தேடிக்கண்டு பிடிப்பது எல்லாம் அஞ்ஞானம் தான்.

நீதி 27 : 12 " விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்: பேதைகளோ நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள் ".

நீதி 29 : 1 " அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான் ". தாவீது, " நான் பாவம் செய்தேன் " என்றதினாலே வாழ்ந்திருந்தான். சவுல், தான் செய்த பாவத்திற்கு நியாயமான காரணம் தேடி வீணாய் போனான். ஏலியின் புத்திரர்களும், ஆரோனின் புத்திரர்களும், அனனியா சப்பிராளும் மனம்திரும்பாமையினால் தேவனால் அழிந்துபோனார்கள். இப்படிப்பட்ட அஞ்ஞான செயல்களுக்கு நம்மை நாமே விலக்கிக் காப்போம்.

### 6.ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளாதவர்கள்.

நீதி 11 : 30 " நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்கிறவன் ஞானமுள்ளவன் " ஆத்தூமாக்கள் பேரில் அக்கறைக்கொண்டு, அவர்களை நித்தியத்திற்கு நேராக வழிநடத்தும்படி கரிசனை உள்ளத்தோடு பிரயாசப்படுகிற ஒவ்வொருவரும் ஞானவான்கள். ' யார் எப்படிப் போனால் எனக்கென்ன? அவர்கள் நரகத்திற்கு போனால் நான் என்ன செய்ய முடியும்?' என சொல்லிக்கொண்டு, மற்றவர்களுக்கு பரலோகத்திற்கு போகும் வழியை போதிக்காதவர்கள் ஒவ்வொருவரும் அஞ்ஞானிகள்.

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவசித்தம். இதைச் சத்தம் போட்டுச் சொல்லாமல் மௌனமாக இருக்கக்கூடாது! இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள், அறிவியாதிருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். எசேக்கியேல் 3 : 17 – 19 " மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்திற்கு காவலாளனாக வைத்தேன்; வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில் நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்: அவன் இரத்தப்பழியையோ உன் கையில் கேட்பேன். நீ துன்மார்க்கனை எச்சரித்தும்,அவன் தன்

துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்".

ஞானவான்களாய் நடந்து, ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்கு உட்படுத்தி நட்சத்திரங்களைப் போலவும் சதாகாலமும் பிரகாசிக்கிறவர் களாயிருக்க முயலுவோம் (தானி 12 : 3).

✝

# தாயும் தந்தையும் கைவிட்டாலும்

## Mark Machorter

தாய் தகப்பனுடைய அன்பு இவ்வுலகில் சக்திவாய்ந்த ஒன்றாகும். பல சந்தர்ப்பங்களில் தாயும் தகப்பனும் தங்கள் பிள்ளைகளுக்காக எதையும் செய் வார்கள். பெற்றோர் தாங்கள் உயிர்வாழும்வரை தங்கள் பிள்ளைகளுக்கு பெற்றோர்களாக இருக்கிறார்கள்.

இருந்தபோதிலும், சிலவேளைகளில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களை கைவிட்டுவிடுவார்கள். இது அநேகமாக பெற்றோர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத தவறை பிள்ளைகள் செய்ததன் காரணமாக இருக்கலாம். ஆனால், சில வேளைகளில் பெற்றோர்கள் தவறான காரணத்திற்காக தங்கள் குழந்தைகளைக் கைவிடலாம். குழந்தை செய்த அல்லது விசுவாசிக்கும் ஒன்றை பெற்றோர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். வேதாகம காலங் களில் பல ஜனங்கள் ஒன்றான மெய்தேவனை விசுவாசிக்கவில்லை. அவர்களு டைய குழந்தைகள் தேவனைப் பின்பற்றாவிட்டால் அவர்களைப் பெற்றோர் கைவிட்டுவிடும் நிலைகாணப்பட்டது.

"என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்" ( சங்கீதம் 27:10). இங்கே தாவீது தன் பெற்றோர்கள் தன்னை கைவிட்டாலும், தேவன் கைவிடமாட்டார் என்று சொல்கிறார். தேவன் நம் பரம தகப்பனாயிருக்கிறார். நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருந் தால் அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார்.

கிறிஸ்துவை விசுவாசித்ததற்காகப் பெற்றோர்கள் ஒரு குழந்தையை கைவிட்டால் உண்மையுள்ள பல கிறிஸ்தவர்கள் அக்குழந்தையை தங்கள் குழந்தையாக தங்கள் சகோதர, சகோதரிகளாக ஏற்றுக் கொள்வார்கள். எல்லாவற்றையும் விட மேலாக, பரமப்பிதா அக்குழந்தைக்கு பரலோகில் நித்திய ஜீவனைக் கொடுப்பார்.

✝

# அழிவிலிருந்து வரும் பாடம்

## The Lesson From Destruction

B. Arjunan

உலகத்தின் அழிவு நமக்கு அநேக பாடங்களைக் கற்றுத் தருகிறது. இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு தமது நிருபத்தில் சொல்லும்போது: " இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் " எனக் குறிப்பிடுகிறார். (2 பேது 3 : 11). அழிந்துபோகிற உலகத்தைப் பார்த்து இன்னும் கொஞ்சம் சந்தோஷமாயிருப்போம் என்று சொல்லிப் பாவத்தை தண்ணீரைப்போல பருகுகிறார்கள். ஒருமுறை " ஸ்கைலாப் " என்ற ராக்கெட் விழப்போவதாக அரசு அறிவித்தது. இதை அறிந்த ஜனங்கள் நாமெல்லோரும் சாகப்போகிறோம் என்று சொல்லி களியாட்டில் அநேகர் இறங்கினர். வேறு சிலர், இருக்கும் வரை நன்கு அனுபவித்து விட்டு சாவோம் என்று சொல்லி குடிக்கவும், புசிக்கவும் மற்றும் அநேக தவறுகளைச் செய்யவும் ஈடுபட்டனர். ஆனால், பேதுரு நமக்கு உணர்த்தும் பாடம் என்ன? இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியுள்ளவர்களாயும் இருக்க வேண்டும் என்று உணர்த்துகிறார். அழிவு நமக்கு ஓர் எச்சரிப்பைக் கொண்டுவருகிறது. அதைப்பார்க்கும் போது நாம் இன்னும் பரிசுத்தமாக ஜீவிக்கவும், நலமான காரியங்களைச் செய்யவும் சிந்திக்கவும் முற்படவேண்டும்.

சமீபத்தில் ஜப்பான் அழிவு நமக்கு மிகுந்த துக்கத்தை கொண்டு வந்தது. அந்த அழிவைத் தொலைக்காட்சியில் பார்த்தபோது வாழ்க்கை என்பது என்ன? என்ற கேள்விக் குறியாகிவிட்டது. மனிதனுடைய எண்ணங்கள் அனைத்தும் தவிடுபொடியாகிவிட்டது. நாளைக்கு இன்னின்னதை செய்வோம் என்று சொல்லியவர்களுடைய கனவு அனைத்தும் வீணாய்ப் போய்விட்டது. ஆகையால் : தேவன் ஒருவர் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. இவைகள் மனிதனுக்கு ஓர் எச்சரிப்பையும் ஒரு பாடத்தையும் கற்றுத்தருகிறது

என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆகையால்: "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்: அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்: நீதியுள் ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்: பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் " என திருமறை நமக்கு போதிக்கிறது ( வெளி 22 : 11). அநியாயஞ்செய்கிறவனுக்கும் பரிசுத்த மாயிருக்கிறவனுக்கும் ஒரே தீர்ப்பா? என்று அநேகர் இப்படிப்பட்ட அழிவைப் பார்த்து சிந்திக்கின்றனர். மரணம் என்பது யாவருக்கும் வரக்கூடிய ஒன்றுதான். நீதிமானும் மரிக்கிறான் துன்மார்க்கனும் மரிக்கிறான். இதில் வித்தியாசம் இல்லை. ஆனால், அவர வருக்கு தேவனால் கொடுக்கப்படும் நீதி என்றும் மாறாது. ஆகையால், நாம் அநியாயஞ் செய்கிறவர்களை நோக்கிப்பார்க்காமல், நாம் நீதியுள்ளவர்களாயிருந்தால் இன்னும் நீதி செய்யவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தால் இன்னும் பரிசுத்தமாயிருக்கவும் நாட வேண்டும். மேலும், பரிசுத்த வேதாகமம்: " நாம் அவபக்தியும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது " ( தீத்து 2 : 12,13 ). அநேகர் பக்தியின் வேஷமாகவே வாழ்கின்றனர்.

ஆபிரகாமுடைய நாட்களில் பத்து நீதிமான்கள் இருந்தால் கூட அந்தப் பட்டணத்தை அழிக்கமாட்டேன் என்று கர்த்தர் சொன்னார். சோதோம், கொமோரா பட்டணங்களில் பத்து நீதிமான்கள் கூட இல்லாதபடியால் அவைகள் இன்றும் துன்மார்க்கர்களுக்கு எச்சரிப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய துன்மார்க்கம் தேவசமுகத்தை எட்டினது. ஜனங் கள் தங்களை கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இச்செய்தியை வாசித்துக் கொண் டிருக்கும் அன்பான தேவஜனமே! நீங்கள் துன்மார்க்கத்தின் வழிநடவாமல் கர்த்தருடைய வேதத்தை நோக்கிப்பாருங்கள். லௌகிக இச்சைகளை வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ண முற்படுங்கள் கொர்நேலியு என்ற ஒரு தேவ மனிதனை குறித்து நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். "அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்கசை் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான் " ( அப். 10 : 2 ). இவனுடைய நாட்களிலும் பல இடங்களில் அழிவு ஏற்பட்டிருக்கும். ஆனாலும், இவன் அந்த அழிவை பார்த்து விசுவாசத்தை விட்டுவிடவில்லை. இத்தாலியா பட்டாளத்திலே பணிசெய்து கொண்டு தேவபக்தியுள்ளவனாய் இருந்திருக்கிறான். அநேகர் சொல்லுவார்கள். எங்க ளுடைய பணியில் பக்தியாக இருப்பது கூடாத காரியம், நல்லவர்களையும்

கெடுத்துவிடுவார்கள் என்று. அவர்களோடு ஒத்துப்போக வேண்டும் என்பார்கள். இங்கே கவனியுங்கள். கொர்நேலியு பட்டாளத்திலேயே பணிசெய்தபோதும் அவன் தன்னுடைய பக்தியிலிருந்து கடுகளவும் பிசகாமல் தன் குடும்பத்தாரோடு பயபக்தியுள்ளவனாயிருந் திருக்கிறான். ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்திருக்கிறான். இன்றைக்கு நீங்களும் நானும் இந்த கொர்நேலியுவைப்போல இருப்போமானால் அழிவிலிருந்து காக்கப்படுவோம்.

அழிவு நமக்கு மேலும் ஒரு பாடத்தை கற்றுக் கொடுக்கிறது: " தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள் அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம் " ( 2 பேது. 3 : 12 ). இப்படி இவை களெல்லாம் அழிந்துபோகிறபடியால் நாம் கர்த்தருடைய நாளை எதிர்நோக்க வேண்டும். அவைகளுக்கு நாம் ஆவலோடு காத்திருக்கவும், கர்த்தருடைய நாளை சந்திக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்! ஆயத்தமுள்ளவர்கள் ஆகாயத்தில் அவரோடே எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை அறிவீர்களா? அந்த நாளிலே நாம் பார்க்கிற வானங்களும் பூமியும் அதில் உள்ளவைகளும் வெந்து அழிந்து போகும். அதில் பேதுரு குறிப்பிடும்போது எரிந்து உருகிப்போம் என்கிறார். உருகிப்போன பொருள்களை பார்த்திருக்கிறீர்களா? அவைகளை வைத்து ஒன்றும் செய்யமுடியாது. ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே! நீ கர்த்தருடைய நாளுக்கு ஆயத்தப்படு. அழிந்துபோகும் பொருட்கள் மீது உன் கவனத்தை செலுத்தாதே. நித்தியமான வசனத்திற்கு செவிகொடு. வானமும் பூமியும் ஒழிந்துபோகும் என்வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆகையால் " தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள் " (யூதா 21).

இந்த உலகத்தில் உங்களைப் பாதுகாக்க உங்களுடைய முயற்சியால் முடியாது. தேவ னுடைய அன்பிலே தான் உங்களைக் காத்துக்கொள்ள முடியும். அப்படிப் பாதுகாத்துக் கொண்டு கர்த்தராகிய இயேசுவின் இரக்கத்தைப் பெறக் காத்திருக்க வேண்டும். நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதபடி எச்சரிக்கையாயிருக்ககடவன் என்ற வசனத்தின்படி கர்த்தருடைய இரக்கத்தைப் பெற காத்திருக்க வேண்டும். கானானிய ஸ்திரீ தன் மகளுக்காக ஆண்டவரிடம் மன்றாடினாள். பிள்ளைகள் சாப்பிடும்போது சிந்தும் துணிக்கைகளை நாய்க்குட்டிகள் தின்னுமே, அந்த ஆசீர்வாதத்தையாவது எனக்கு அருள

வேண்டும் என்று இயேசுவிடம் மன்றாடி பெற்றுக்கொண்டாள். ஆண்டவர் அவளுடைய விசுவாசத்தைப் பார்த்து உன் விசுவாசம் பெரிது என்றார். நாம் நன்மைகளைப் பெற தேவனுடைய அன்பினாலே நம்மை காத்துக்கொள்ள வேண்டும். சங்கீதக்காரன் சொல்லுகிறான்: “ எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப்பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்கு காத்திருக்கிறது ” என்கிறார் ( சங். 130: 6 ). ஜாமக்காரர்கள் தூங்கமாட்டார்கள். அவர்கள் விடியலை நோக்கி இருப்பார்கள். அதைப்போல தாவீது ஆண்டவரை நோக்கி காத்திருந்தார். இன்றைக்கு அநேகர் தேவனுடைய ஆலோசனைக்கு காத்திராமல், துரிதமாக முடிவெடுக்கிறார்கள் அல்லது மற்றவர்களுடைய ஆலோசனையை ஏற்று வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். அது நாளடைவில் அவர்களுடைய வாழ்க்கையில் வருத்தத்தைக் கொண்டுவரும். தாவீது தேவ சமூகத்தில் காத்திருந்தபடியால் அவனுடைய ராஜ்யபாரம் நிலைத்தது.

### கர்த்தர் வரும் வரை இவைகளைக் கைக்கொள்ள வேண்டுமா?

ஆம்,அவர் வரும்வரை கர்த்தருடைய வேதவசனங்களின்படி நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். “ உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக் கொண்டிருங்கள் ” என வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் படிக்கிறோம். ( வெளி. 2 : 25 ). நமக்குள்ளது என்ன? தேவபக்தி, தேவனுடைய நாளுக்குக் காத்திருப்பது, அவருடைய சந்நிதியில் குற்றமற்றவர்களாகவும் பிழையில்லாதவர்களாகவும் காணப்படுவது மற்றும் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும், அன்போடும் நாம் நிலைத்திருக்கும்போது, கர்த்தரால் வாடாத ஜீவகிரீடத்தைப் பெறுவோம், இவ்வுலக ஆஸ்திகளில் நம்முடைய கவனத்தை வைப்போமானால் தேவ சமூகத்திலிருந்து தள்ளப்படுவோம். ஆகையால் உனக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிரு எனச் சொல்லுகிறார். தனக்குள்ளதை இழந்த ஐந்து புத்தியற்ற கன்னிகைகள் மணவாளனோடு பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இழந்தார்கள். அவர்கள் எண்ணெய் வாங்கும்படி கடைக்கு சென்று இருக்கும்போது மணவாளன் வந்துவிட்டார். அதைப்போலதான் கர்த்தருடைய நாள் இருக்கும் . ஆகையால் உங்களுக்குள்ளதை அவர் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள். அவர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணிவிடாதிருங்கள். அவருடைய வருகை எதிர்பாராத நேரத்தில் அல்லது நாளில் இருக்கும். இன்றே ஆயத்தப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# ஒரு கிறிஸ்தவன் இரட்சிப்பை இழந்து விடும் அபாயம் உண்டா?

# IS THERE ANY DANGER FOR A CHRISTIAN TO LOSE HIS SALVATION

E.Z. Selvanayagam

உண்மையாகவே, இது ஒரு முக்கியமான, சிந்திக்க வேண்டிய கேள்வி. இதற்குப் பரிசுத்த வேதாகமத்திலிருந்த விடை காண முயலுவோம். அப்போஸ்தலனாகிய பவுலும், பேதுருவும், யோவானும், யாக்கோபும், யூதாவும் எழுதின நிருபங்கள் யாவுமே கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்ட அறிவுரைகள் மற்றும் எச்சரிப்புகளே. இந்தப் பரிசுத்த வேதகாம எழுத்தாளர்கள் ஒவ்வொருவருமே ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் கிறிஸ்தவர்கள் வீழ்ந்து போகும் அபாயத்தைக் குறித்து எச்சரித்து புத்தி சொல்லியிருக்கிறார்கள். இந்த எச்சரிப்புகள் சிலவற்றை வாசித்து தியானிப்போம்.

" மரணத்துக்குக்கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ அதற்குக் கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? " ( ரோமர் 6 : 16 ) இதில் பவுல் அப்போஸ்தலன் தெளிவாகச் சொல்லியிருப்பது என்னவெனில் : ஒரு கிறிஸ்தவன் மனப்பூர்வமாக பாவத்துக்கு அடிமையாகிவிட்டால் மரணம் என்று. இங்கே கூறப்படுவது சரீர மரணத்தையல்ல. தேவனிடத்திலிருந்து நம்மை சதாகாலத்துக்கும் பிரித்து வைக்கிற இரண்டாம் மரணத்தையே குறிக்கிறது. மேலும், ரோமர் 8 : 6 ல் " மாம்சசிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் " என்கிறார். அப்போஸ்தலன் பவுல் இந்த எச்சரிப்பை கொரிந்தியருக்கு விடுக்கும்போது இன்னும் கொஞ்சம் அதிகக் கடுமையைக் கூட்டியிருக்கிறார். " அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? " ( 1 கொரி 6 : 9 ) நினைவில் வையுங்கள், கொரிந்து பட்டணத்தில் இந்த நிருபத்தை பெற்றுக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள்.

ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர்கள் எந்த சூழ்நிலையிலும் மீண்டும் அதை இழந்து போவதில்லை என்று போதித்து, கிறிஸ்தவர்கள் தங்களுடைய எஞ்சிய வாழ்க்கையைக் கர்த்தருக்குப் பிரியமாய் வாழ வேண்டிய அவசியத்தை அலட்சியப்படுத்தத் தூண்டு

பவர்கள். அப்போஸ்தலன் யூதா சொல்வதை கவனித்துப் படிக்க வேண்டுகிறேன். " நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில் கர்த்தர் தமது ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார் ( யூதா 5 ) இதைக்குறித்து பவுல் அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்தாருக்கு எழுதிய நிருபத்தில், கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் செய்த மக்களை எவ்வாறு கர்த்தர் அழித்துப் போட்டார் என்று விளக்குகிறார். (1 கொரி 10 : 1–10 ) அந்த நிகழ்ச்சி எல்லா காலத்துக் கிறிஸ்தவர்களுக்கும் எச்சரிக்கையாக இருக்கும்படி அதை கீழ்க்காணும் எச்சரிப்போடு முடிக்கிறார் ". இப்படியிருக்க தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்ககடவன். ( 1 கொரி 10 : 12 ) என்று.

சுவிசேஷத்தைப் புரட்ட முயற்சி செய்கிற கிறிஸ்தவர்களின் கதி என்னவாயிருக்கும் என்பதைக் கலாத்தியர் நிருபத்தில் நாம் காண முடியும். " நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது,வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசிங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.

முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்கு பிரசிங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருப்பான். (கலா 1: 8,9) கவனித்தீர்களா? பவுலாகட்டும். வேறு எந்த அற்புதப் பிறவியாகட்டும், சுவிசேஷத்தைப் புரட்டினால் தேவனுடைய சாபத்துக்கு ஆளாவன் என்பது திண்ணம் என்று பவுல் அடித்துக் கூறுகிறார். தேவனால் சபிக்கப்பட்ட ஒருவன் இரட்சிப்பின் பலனை அடைய முடியும் என்று இன்னும் நம்புகிறீர்களா? மேலும், சுவிசேஷத்தைப் புரட்டுகிறவர்கள் மட்டும் அல்ல; தேவனுடைய சுத்தக் கிருபையால் ஒருமுறை இரட்சிப்பு அடைந்த மக்கள் மீண்டும் நியாயப்பிரமாணத்துக்குத் திரும்பிப் போக விரும்பினால் அவர்களும் கூட சபிக்கப்பட்டவர்களே என்கிறார். " நியாயப் பிராமணத்தினால் நீததிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் ( கலா 5 : 4 ) இப்பொழுது சொல்லுங்கள், கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து போனவர்கள் இரட்சிப்பை இழக்க மாட்டார்கள் என்றால் பின்னர் யார் தான் இரட்சிப்பை இழந்து போவார்கள்?

மேலும், தங்கள் உபதேசத்தாலும், வாழ்க்கையாலும் கிறிஸ்துவினிடத்தில் அன்பும் மதிப்பும் இல்லாமல் கிறிஸ்துவ அறத்துக்கு இழுக்குண்டாக்கிக் கொண்டிருப்பவர்களைக் குறித்து பிலிப்பி பட்டணத்திலுள்ள சபையாருக்கு பவுல் எழுதும்போது " சகோதரரே, நீங்கள்

என்னோட கூடப் பின்பற்றுகிறவர்களாகி நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்.

ஏனெனில், அநேகர் வேறு விதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவரென்று உங்களுக்கு அநேகதரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்கிறேன்.

அவர்களுடைய முடிவு அழிவு; அவர்களுடைய தேவன் வயிறு; அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே; அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் ( பிலி. 3 : 17–19 ) குறித்துக் கொள்ளுங்கள்; அவர்களுடைய முடிவு அழிவு.

எபிரேய நிருபமும் கிறிஸ்தவர்கள் பாவத்திற்கும், அவிசுவாசத்துக்கும் ஆளாகி இரட்சிப்பை இழந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கிறது. “சகோதரரே , ஜீவனள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக் குள்ளும் இராதபடி நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள் ” ( எபி 3 : 12 ) என்ன இப்படிச் சொல்கிறாரே, ஒரு கிறிஸ்தவன் ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான சாத்தியக் கூறுகள் உண்டாகுமா? என்று சந்தேகப்படுகிறவர்களுக்கு, கண்டிப்பாக அப்படி நடக்கும் என்று அடித்துக் கூறுவதுமின்றி அப்படிப்பட்டவர்களுடைய கதி என்னவாயிருக்கும் என்றும் கூறுகிறார். “ ஏனெனில் ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும் பரம ஈவை ருசி பார்த்தும் பரிசுத்த ஆவியைப் பெறும். தேவனுடைய நல்வார்த்தையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும். மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதலுக்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் ”. (எபி 6 : 4 – 6).

மேலும், அதே நிருபத்தில் “ சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் மனப்பூர்வமாய் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால் பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வரும் என்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமணத்தைத் தள்ளுகிறவர்கள் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவனாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள் ( எபி 10 : 26 – 29 ) என்று நம் சிந்தனையைத்

தூண்டுகிறார். அன்பர்களே, மேற்கூறிய வசனங்கள் கிறிஸ்துவை அறியாத அஞ்ஞானிகளுக்குச் சொல்லப்பட்டதல்ல. நாம் என்றிருப்பதால் இது கிறிஸ்தவர்களையே சுட்டுகிறது.

அப்போஸ்தலன் யாக்கோபு இந்த முக்கியமான விஷயத்தில் தன் நிலையை விளக்காமல் இல்லை. இப்படிப்பட்டவர்களை பார்த்து, " விபச்சாரரே, விபச்சாரிகளே உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறீயீர்களா? ஆகையால் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் " என்று சாடுகிறார் ( யான் 4 : 4 ) அப்படிப்பட்ட பகைவர்களை தேவன் தம்முடையவர்களாகக் கருதுவாரா? " சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது மற்றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவான் என்று அறியக்கடவன் " ( யாக் 5 : 19, 20 ) ஆம், சகோதரரே! தவறு செய்கிற ஒருவனை மீண்டும் சத்தியத்துக்குள் கொண்டு வராவிட்டால் அவன் ஆவியிலே மரித்த நிலையில் இருப்பான் என்று அறிவோமாக!

புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களிலேயே, தெரிந்தே பாவஞ்செய்கிற கிறிஸ்தவர்களைக் கடுமையாகச் சாடுபவர் அப்போஸ்தலன் பேதுரு என்று சொல்லலாம். " ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் ( அதாவது அதே அதிகாரம் 5 முதல் 9 வசனங்களில் சொல்லப்பட்டுள்ளவைகளைச் செய்தால் ) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜயத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" ( II பேதுரு 1 : 10,11 ). இவைகளைச் செய்தால் ஒருக்காலும் இடறி விழுவதில்லை என்பதை வேறுவிதமாகச் சொன்னால், இவைகளைச் செய்யாவிட்டால் நீங்கள் இடறி விழுவீர்கள் என்கிறதில்லையா? மறுதலித்துப் போகிற கிறிஸ்தவர்களை " கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள்

நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது. (II பேதுரு 2 : 20-22). அப்போஸ்தலன் தான் சொல்ல வந்த கருத்தை வலியுறுத்துவதற்காக அவர் சாதாரண சூழ்நிலையில் சொல்லக் கூச்சப்படக் கூடிய ஒரு பழமொழியை மேற்கோள் காட்டி, சத்தியத்தை அறிந்த பிறகு தவறு இழைக்கிற மக்களின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இது விஷயத்தில் அப்போஸ்தலன் யூதாவும் மௌனமாயிருக்கவில்லை. " வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சன்னிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை நிறுத்தவும் வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக, ஆமென்". ( யூதா 24, 25 ).

ஆம், சகோதரரே, நாம் அவருக்கு ஒப்புக் கொடுத்து வாழ்வோமானால் அவர் நம்மை வழுவாதபடி காத்துக் கொள்ள வல்லவராக இருக்கிறார்.

அப்போஸ்தலன் யோவானும் இது விஷயத்தில் இவர்களுடைய கருத்தை ஆமோதித்துக் கீழ்வருமாறு எழுதுகிறார். " அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான்; அவனுக்குள் சத்தியமில்லை ". ( I யோவா 2 : 4 ). அப்படிப் பொய் சொல்லித் திரிகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று அவர் வேறு ஒரு இடத்தில் கூறுகிறார், கேளுங்கள் " பயப்படுகிறவர்களும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளி 21:8).

சகோதரர்களே , மேலே எடுத்து ஆளப்பட்ட வேத வசனங்களையெல்லாம் வாசித்துச் சிந்தித்த பிறகு, கிறிஸ்துவை மறுதலித்து மீண்டும் அவரைச் சிலுவையில் அறைந்து அவரைப் பகிரங்கமாக வெட்கப்படுத்துகிற போலிக் கிறிஸ்தவர்கள் மீது தேவன் பிரியமாய் இருக்கமாட்டார் என்று ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஒப்புக் கொள்வதோடு நின்று விடாதீர்கள். உங்கள் வாழ்க்கையை செப்பனிடவும், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும், உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படவும் கிறிஸ்தவ அன்புடன் வேண்டி, மன்றாடிக் கொள்கிறேன். ✞

# நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமா?

## Are U Ready For The Judgment?

Benny Martin

இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த வகையில் நம்முடைய தேவன் நம்மை இந்தப் பூமியில் வைத்திருப்பதன் நோக்கம் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் ( ஏசாயா 43 : 7 ) இந்த உலகத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் நிச்சயமாகவே நாம் நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்குக் கொடுக்க வேண்டும். இந்த நீயாயத்தீர்ப்பின் நாள் இந்த உலகத்தில் தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்பவர்களுக்கு ஆசீர்வாதமான நாளாகவும், தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்பவர்களுக்கு பயங்கரமான நாளாகவும் காணப்படும். இப்போது அந்த நியாயத்தீர்ப்பின் நாளை எப்படி மகிழ்ச்சியின் நாளாக மாற்றுவது என்பது பற்றி சில காரியங்களை வேத வசனத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

வாலிபர்கள் மத்தியில், நிறைய பணத்தினால் தான் இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழ முடியும் என்கிற விதையை பிசாசு விதைத்திருக்கிறான். அது முளைத்து செடியாகி, கொடியாகி, மரமாகி வளர்ந்து கனிகளைத் தந்து கொண்டிருக்கிறது. பாவியின் கனிகளை தந்து கொண்டிருக்கிறது. ஆவியின் கனிகளைத் தரவேண்டிய வாலிப நெஞ்சங்கள் பிசாசுக்கு இடம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிசாசுக்கு நம்முடைய எண்ணங்கள் எல்லாம் தெரியாது. நம்முடைய எண்ணங்களை அறியக்கூடியவர் தேவன் ஒருவரே, ஆனால் பிசாசு, வாலிபர்கள் எந்தப் பகுதியில் நாட்டமுடையவர்களாய் இருக்கிறார்களோ அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புகளை அள்ளிக் கொடுப்பான். ஆனால், ஓர் ஆவிக்குரிய வாலிபன் பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறான். அப்பொழுது அவன் ஓடிப்போகிறான். ( யாக்கோபு 4:7).

நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது, இந்த உலகத்தில் நாம் செய்த செயல்களுக்காக

நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்குக் கணக்கு கொடுக்க வேண்டும் என்கின்ற உண்மையை விடத் தெளிவாக எந்த ஒரு உண்மையும் வேதாகமத்தில் போதிக்கப்பட வில்லை ( 2 கொரி. 5 : 10 ). ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லோரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாகப் வெளிப்பட வேண்டும். ஆனால், இன்றைய நாட்களில் அநேகர் வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்த்தால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்றுமே இல்லை. நாம் யாருக்கும் பதில் கொடுக்க வேண்டியதில்லை என்ற ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல் தெரிகிறது. பிரசங்கி 11 : 9 ல் சாலொமோன் ஞானி சொல்லும் போது, வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்: உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட : ஆனாலும், இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி என்று சொல்கிறார். இந்த உலகத்திலே எத்தனையோ நிகழ்வுகள் இருந்தாலும் நியாயத்தீர்ப்பு நாளைப் போல பயங்கரமான நாள் ஒன்றும் இல்லை. அந்த நாளை மனதில் கொண்டவர்களாய் நாம் இந்த உலகத்தில் வாழும் போது தீமையை விட்டு விலகிக் கர்த்தருக்குப் பிரியமான காரியங்களைச் செய்வோம். அப்போது அந்த நாளைக் குறித்து பயப்படாமல் சந்தோஷமான அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். நாம் வாழும் இந்த உலகத்தில் வேதத்தின்படி நடக்கவில்லையென்றால் நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும். நாம் வாழும் இந்த வாழ்கையிலேயே நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்பது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப்பட மாட்டாது. இப்போது வேதாகமத்திலிருந்து நாம் எதையாவது செய்யத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும் என்ற வேத வசனங்களின் துணை கொண்டு பார்ப்போம்.

## I தேவனுடைய வசனங்களை அறியாதிருந்தால்

ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தைகளை நாம் கற்றுக் கொள்ளத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? வேதாகமமானது மனிதனுக்கு தேவனுடைய வெளிப்பாடாகும். வேதாகமம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறது. ( எபேசியர் 3: 1–3 ). நீங்கள் தேவனுடைய சத்தியத்தின் அறியாமையிலே மரித்து நித்தியமாக இரட்சிக்கப்பட முடியாது. சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார் ( யோவான் 8 : 32 ). அந்தக் கடைசி மகாபெரிய நாளில் தேவனுடைய

வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் ( யோவான் 12 : 48 ). நம்முடைய நாட்களில் வேத வசனங்கள் பத்திரிக்கை, தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் மூலமாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனவே, நாங்கள் வேத வசனங்கள் கேட்டதே இல்லை என்று யாரும் சாக்கு போக்கு சொல்ல முடியாது. அப்படியே வேத வசனங்களைக் கேட்டிராவிட்டாலும், தேவனுடைய சிருஷ்டிப்புகளைப் பார்த்து இவைகளையெல்லாம் வடிவமைத்தவர், உருவாக்கியவர் ஒருவர் இருக்கிறார் என்று அவர்கள் முடிவுக்கு வர வேண்டும். யாருக்கும் போக்குச் சொல்ல இடமில்லை.

நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருக்க வேத வசனங்களை நாம் படிக்க வேண்டும். ( 2 தீமோத்தேயு 2 : 15 ). அதேபோல் நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்பட்டால், தவறாக நடத்தப்பட்டால், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்படுவதைக் குறித்து இயேசு எச்சரித்தார். ( மத். 7 : 15- 20 ). மேலும், இயேசு : குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்று எச்சரித்தார். ( மத்தேயு 15 : 14 ). அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய வாசகர்களுக்கு எழுதும்போது, " பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கத்தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் " என்றார்.( 1 யோவான் 4:1 ).

## II கிறிஸ்துவுக்குள் இல்லாதிருந்தால்...

சத்தியத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்புக்கு மேல் வாய்ப்பு இருந்தும் அதைத் தள்ளி கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் போது நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? ( ரோமர் 2 : 8 : 9 ). ( எபிரெயர் 2 : 1-3 ). கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பது மிக முக்கியமானது. ஒரு மனிதன் பெரிய வீட்டுக்குள் இருப்பது, அதிக ஆஸ்திகளுடன் இருப்பது, பெரிய அலுவலகத்தில் பணிபுரிவது எல்லாம் இரட்சிப்புக்கும், நித்திய ஜீவனுக்கும் உதவாது. ஆனால், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பது மிக முக்கியமானது. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் தான் கிறிஸ்துவும் அவனுக்குள் இருப்பார். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவுக்குள் தான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருக்கின்றன. (எபேசியர் 1: 3)

சரி, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவுக்குள் எப்படி இருப்பது என்பது பற்றி புதிய ஏற்பாட்டில் மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. ரோமர் 6 : 3 - 4 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும்

அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற் குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

மேற்கூறப்பட்ட வசனத்தில் நாம் பார்த்தபடி, ஒருவன் ஞானஸ்நானத்தினாலே தான் கிறிஸ்துவுக்குள் வர முடியும். புதிய ஏற்பாட்டில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப் பதற்கும், இரட்சிப்படைவதற்கும் இதைத் தவிர வேறு வழிகள் வெளிப்படுத்தப்படவில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறோம். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றிருந்தால் உலகத்திலே சண்டை களோ, சச்சரவுகளோ இராது, இந்த உலகம் ஒரு வித்தியாசமான உலகமாயிருக்கும். நாம் 2 கொரிந்தியர் 5 : 17 ல் வாசிக்கும்போது " ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் : பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின " என்று வாசிக்கிறோம். பிரியமானவர்களே! இதுவரை நாம் இந்த உலகப்பிரகாரமான காரியங் களில் நம்மை மூழ்கடித்திருந்தாலும் பரவாயில்லை. இனிமேல் நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து ஒரு புதிய மனிதனாக வாழ்ந்து, அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங்களைப் போல் பிரகாசிப்போம், தேவன் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமென்!

✝

---

## நியாயத் தீர்ப்பில் வந்து நிற்போர்

1. சோதோமின் ஜனங்கள் - மத்தேயு 11 : 23 : 24
2. தென் தேசத்து ராஜஸ்திரீ - மத்தேயு 12 : 42
3. நினிவேயின் ஜனங்கள் - மத்தேயு 12 : 41
4. தீரு. சீதோன் ஜனங்கள் - மத்தேயு 11 : 21 : 22
5. கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் - மத்தேயு 11 : 20
6. தெசலோனிக்கே பட்டணத்து மக்கள் - II தெச 1 : 7 - 10

# கிறிஸ்து ஏற்படுத்தின வித்தியாசம்

## *The Difference Christ Made*

Bobby Docker

Bret Hart என்பவர் ஒரு மகிழ்ச்சியான சிறுகதையின் ஆசிரியராயிருக்கிறார். அவருடைய சிறுகதை கரடுமுரடான பகுதியை உள்ளடக்கிய ஒரு சுரங்க நகரத்தில் பிறந்த ஓர் ஆண் குழந்தையைப் பற்றியது. அக்குழந்தை பிறந்தபோது, அதன் தாய் மரித்துப் போனாள். அங்கே சுரங்கத் தொழிலாளர்கள் தங்கியிருந்த முகாமில் பெண்கள் வேறு யாரும் இல்லாதபடியால் அக்குழந்தையைப் பராமரிக்கும் பணி அத்தொழிலாளர்கள் மேல் விழுந்தது. ஒரு காலகட்டத்தில் கலகம், குடிப்பழக்கம், சூதாட்டம் போன்றவைகளுக்குப் பேர் போன அப்பட்டணத்து கரடுமுரடான தொழிலாளர்களின் மனம் அக்குழந்தையின் நலனுக்காக மென்மையானது. ஒரு காலத்தில் வன்முறை, மற்றும் துன்மார்க்கத்திற்குப் பேர்போன அப்பட்டணம் ஒரு " மாதிரி " நகரமாகிவிட்டது. அச்சிறுபட்டணத்தாரின் வாழ்க்கையில் அச்சிறு குழந்தையின் வருகை ஆச்சரியமூட்டும் வித்தியாசத்தை ஏற்படுத்தியது.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் யூதேயாவின் ஒரு சிறு கிராமத்தில் இன்னொரு குழந்தை பிறந்தது. ஆனால், அக்குழந்தை பிறந்த நாளிலிருந்து உலகம் முன்பிருந்ததுபோல் இல்லை. கிறிஸ்துவின் பிறப்பு இவ்வுலகில் ஏற்படுத்திய தாக்கத்தை சிந்தித்துப் பாருங்கள்! கிறிஸ்துவின் வருகை எப்படிப்பட்ட வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று பாருங்கள்! மனித வரலாற்றில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்போது அவருடைய பிறப்பு ஏற்படுத்திய சில வித்தியாசங்களை நாம் காண்போம்.

### அவர் பெண்களின் நிலையை உயர்த்தினார்

கிறிஸ்துவுக்கு முன்பு பெண்களைச் சுரண்டுவதும், துஷ்பிரயோகம் செய்வதும் வழக்கமாயிருந்தது. பெண்களுக்கு அடிமைத்தனத்துக்கு இணையான கடினமான வேலைகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் ஆடுமாடுகளைப் போல் விலைகொடுத்து

வாங்கும் பொருளாகக் கருதப்பட்டார்கள். பெண்களின் நிலையை கிறிஸ்தவம் பொதுவான அளவில் ஏற்றுக்கொள்ளப்படாத உலகின் சில பகுதிகளில் அவர்கள் நடத்தப்படுகின்ற விதத்தை வைத்துப் புரிந்து கொள்ளலாம். பெண்களின் நிலை உயருகின்ற காரியத்தில் கிறிஸ்து மாபெரும் புரட்சியைச் செய்தார். மனித வரலாற்றில் கிறிஸ்தவம் பெண்களுக்கு செய்த நன்மை அளவுக்கு வேறெந்த இயக்கமும் செய்யவில்லை. நவீன பெண்கள் அமைப்புகள் எல்லாம் கிறிஸ்தவ மார்க்கத்தின் கொள்கைகளை மறுக்கிறபடியால் உண்மையில் அவர்கள் பழைய அடிமைத்தனத்திற்கே ஒரு வகையில் மீண்டும் சென்றுகொண்டிருக்கி றார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

## அவர் ஒழுக்க நிலையை உயர்த்தினார்

பாவத்தால் கொடூரமாகக் காணப்பட்ட உலகத்திற்கு இயேசு வந்தார். அப்போஸ்தலனாகிய பவுல் முதல் நூற்றாண்டு உலகின் கேடான தன்மையைப் பற்றிய திகிலூட்டும் சித்திரத்தை ( ரோமர் 1 : 24 – 31 ) வசனங்களில் தீட்டியிருக்கிறார். கொலை, சிற்றின்பம், ஒழுக்கக்கேடு போன்றவைகளில் மூழ்கிப்போயிருந்த இவ்வுலகத்திற்கு சிறந்த வழியை கிறிஸ்து கொண்டுவந்தார். ஒழுக்கவாதிகளும், தத்துவஞானிகளும் செய்ய முடியாததை அவர் செய்தார். நாமெல்லாரும் சுத்திகரிக்கப்படும்படி நம்முடைய பாவங்களுக்காக அவர் மரித்தார். ( II கொரிந்தியர் 5 : 21 ). ஆனால், பரிதாபமாக நவீன உலகம் பழங்கால சமுதாயத்தைச் சீரழித்த தேவனற்றவர்களின் துன்மார்க்கத்திற்கு மறுபடியும் திரும்புவது போல் தெரிகிறது. Batsell Barret Baxter என்னும் வேத வல்லுநர் இவ்விதமாகச் சொன்னார். " மனித இனத்திற்கு கிறிஸ்துதான் மிகச் சிறந்த நம்பிக்கை; அவரில்லையென்றால் நம் இல்லங்கள் சின்னாபின்னமாகிப் போகிறது, நம் தனிப்பட்ட வாழ்க்கை குழப்பமானதாகவும், வெறுமையானதாகவும், நம்பிக்கையற்றதாகவும் மாறிவிடுகிறது. கிறிஸ்து இல்லையென்றால் சமுதாயம் சீரழிந்துவிடுகிறது ".

அவர் மனித இனத்தின் நம்பிக்கையையும், ஆசைகளையும் உயர்த்தினார். மனிதர்கள் நம்பிக்கையற்ற நிலையிலும், ஆவியற்ற நிலையிலும் இருந்தபோது இயேசு கிறிஸ்து வந்தார். ( எபேசியர் 2 : 12; ரோமர் 5 : 6 ). மனிதர்கள் தாங்கள் பாவிகளென்பதை அறிந்திருந்தபோதும் அதற்காக ஒன்றுமே செய்ய முடியாத உதவியற்ற நிலையில் இருந்தார்கள். எனவே, தேவன் அதற்காக ஒன்று செய்தார். அவர் மனிதர்களை பாவத்திலிருந்து மீட்டெடுக்கும் மீட்கும் பொருளாக தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார் ( யோவான் 3 : 16 ). இயேசுகிறிஸ்து ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் என்னும் உண்மையில் தான் உலகின் நம்பிக்கை நிலைத்திருக்கிறது ( எபிரேயர் 5 : 89 ). இயேசு கிறிஸ்து மக்களை இணைத்து

வாழ்வதற்காக ஏதோ ஒன்றையும், மரிப்பதற்காக ஏதோ ஒன்றையும் ஏற்படுத்தி இவ்வுலகில் பெரிய மாற்றத்தை உண்டாக்கி விட்டார்.

ஆம், இயேசு கிறிஸ்து மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கிறார்! அவர் இன்னும் வித்தியாசத்தை ஏற்படுத்திக்கொண்டு தான் இருக்கிறார்! அவர் வெறுப்பு சீர்கேடு, இச்சை, பயம் மற்றும் நம்பிக்கையின்மை போன்றவைகளால் நிறைந்த இவ்வுலகிற்கு அன்பையும், மன்னிப்பையும், விசுவாசத்தையும் கொண்டு வந்தார். அவர் இவ்வுலகத்தை தலைகீழாக மாற்றினார். அவரை உங்கள் வாழ்க்கையில் பிரவேசிக்க அனுமதித்தால் அவரால் உங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும். ✞

## தனிப்பட்ட ஊழியத்தில் உங்களை எப்படி ஈடுபடுத்திக் கொள்ள முடியும்?

1. கிறிஸ்தவத்தைக் குறித்து நண்பர்களிடம் விவாதியுங்கள்.
2. யாருக்காவது ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் குறித்த கைப்பிரதியைக் கொடுங்கள்.
3. கிறிஸ்தவராயிருப்பதினால் உண்டாகும் சந்தோசத்தைப் பிறரிடம் சொல்லுங்கள்.
4. உங்களோடு ஆராதிக்க யாரையாவது அழையுங்கள்
5. சமுதாயத்தில் புதிதாய் வந்திருக்கிறவர்களைப் போய் சந்தித்து ஆராதனைக்கு அழையுங்கள்.
6. புதிய அங்கத்தினர்களை உற்சாகப்படுத்துங்கள்.
7. உங்களோடு வேதபாட வகுப்புக்கு ஒரு நண்பரை அழைத்து வாருங்கள்.
8. சபை செயல்பாடுகளில் சக கிறிஸ்தவர்கள் ஈடுபடும்படி அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.
9. குடும்பத்தில் மரணம் ஏற்பட்டாலோ, நோய்வாய்ப்பட்டாலோ போய் விசாரியுங்கள்.
10. பலவீனமான அங்கத்தினரிடம் உற்சாகமான வார்த்தைகளைப் பேசுங்கள்.

# எல்லா மனிதர்களையும் ஆசீர்வதிக்கும்படியான தேவனுடைய விருப்பம்

# GOD'S DESIRE TO BLESS ALL MEN

Waxne Barrier

சங்கீதம் 67 ஓர் அழகான வசனப் பகுதியாகும். அது மனிதனோடு தேவனுடைய உறவு சம்மந்தமான வல்லமையான வாக்குத்தத்தங்களை சுருக்கமாக அறிவிக்கிறது. இந்த அதிகாரத்தில் நாம் கீழ்கண்டவாறு வாசிக்கிறோம்.

" தேவனே பூமியில் உம்முடைய வழியும் எல்லா ஜாதிகளுக்குள்ளும் நம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணும். தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக. சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர். ஆதலால், ஜாதிகள் சந்தோஷித்து கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்.தேவனே ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக. பூமி தன் பலனைத் தரும் தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்".

தேவன் நம்மை நேசிக்கிறார். மேலும், நம்மை அன்பு, சமாதானம், இரக்கம், இரட்சிப்பு, அனுதின பராமரிப்பு மற்றும் அவரோடு பரலோகில் நித்திய ஜீவன் போன்றவற்றை நமக்குத் தந்தருள சித்தங்கொண்டிருக்கிறார். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதன் மூலமாக அவர் நம்மை ஆளுகை செய்ய நாம் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார். மேலும், நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவருடைய வழியும், சித்தமும் ஆதாரமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார். அப்போது நம்மை அவர் ஆசீர்வதிப்பதாகச் சொல்கிறார்.

தேவன் நம்மை நீதியாய் நியாயந்தீர்ப்பார்.

நாம் இவ்வுலகில் வாழத் தேவையான காரியங்களை இப்பூமி தொடர்ந்து தந்துகொண்டிருக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நாம் அவரை கனப்படுத்த வேண்டும், துதிக்க வேண்டும், ஆராதிக்க வேண்டும், அவருக்கு பயப்பட வேண்டும், அவருக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்று நம்மை தேவன் கேட்டுக் கொள்கிறார்.

நாம் தேவ ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தையை வாசிக்கும்போது வாழ்க்கையில் எழும்பும் ஒவ்வொரு கேள்விக்கும் நாம் எப்படி பதிலளிக்க முடியும் என்பதை நாம் கற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக, நாம் இவ்வுலகில் ஏன் இருக்கிறோம் நம்முடைய நோக்கம் என்ன? நாம் எங்கே போய் கொண்டிருக்கிறோம்? போன்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் இருக்கிறது. ஒவ்வொரு தேசத்தில் வாழும் ஒவ்வொரு நபருக்கும் தேவன் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். நம்மை நாம் அவரிடம் அர்ப்பணிக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார், அப்போது தேவன் நமமை ஆசீர்வதிப்பார்.

இன்று மனிதனுக்கு தேவனுடைய ஆசீர்வாதம் தேவை. இன்றைய உலகைப் பீடித்திருக்கும் பெரிய பிரச்சனைகளை தேவனுடைய வழி அகற்றிவிடும். தேவன் நம்மை ஆளவும், ஆசீர்வதிக்கவும் அனுமதி கொடுப்போம். நாம் அவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமா? அல்லது அவரை நிராகரிக்க வேண்டுமா என்று நாம் முடிவெடுக்க அவர் நமக்கு அனுமதியைக் கொடுக்கிறார். ஆனால், நம் முடிவின் பலனை நாம் நிச்சயமாகவே அறுப்போம்.

## லாபம் என்ன?

பாவமும்,வேதனையும், மரணமும் நிறைந்த
இந்நிலத்தின் வழியாக பயணிக்கும்போது, என்னைச்
சுற்றிலும் இருக்கும் ஜனங்கள் கிடைக்காத பொருள்களுக்காக ,
பாடுபடுவதை என்னால் காண முடிகிறது.
அப்போது நான் கிறிஸ்துவால் நீண்ட காலத்திற்கு முன்பாக
கேட்கப்பட்ட கேள்வியை நினைத்துப்பார்த்தேன்.
" மனுஷன் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன"? என்று

# தேவன் எப்படிப்பட்டவராயிருக்கிறார்?

# What is God Like?

Samuel A. Matthews

**தேவன் நித்தியமானவர்!**

தேவன் எப்போதுமே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார். அவர் எப்போதுமே வாழ்வார். வேதாகமம் தேவனைப் பற்றி இவ்விதமாகச் சொல்கிறது: " பர்வதங்கள் தோன்றும் முன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் " ( சங்கீதம் 90 : 2 ). இவ்வுலகில் வாழும் எல்லோருக்குமே வயதாகும், எல்லோரும் மரிப்பார்கள். வேதத்தின் வார்த்தையை கவனிப்போம்: " கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர் "; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போல பழைமையாய்ப்போம்; ஒரு சால்வையைப் போல அவைகளைச் சுருட்டுவீர்; அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது ".

**தேவன் சர்வவல்லமையுள்ளவர்!**

கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? ( ஆதியாகமம் 18 : 14 ). மனிதர்களாகிய நாம் பெலவீனமானவர்கள். பல காரியங்களைச் செய்வதற்கு நமக்குப் பெலனில்லை. ஆனால், தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அவரால் எல்லாவற்றையும் செய்ய முடியும். அவர் தம்முடைய வல்லமையால் மனிதனை உண்டாக்கினார். வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு தேவனுக்கு வல்லமை இருக்கிறபடியால் அவருடைய வாக்குத்தத்தங்களை நம்மால் நம்ப முடியும்.

**தேவன் சர்வஞானியாயிருக்கிறார்!**

தேவன் எல்லாவற்றையும் காண்கிறபடியால் அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். மனுஷருடைய கண்களிலிருந்து காரியங்களை மறைப்பது சாத்தியமே,

ஆனால், தேவனிடமிருந்து காரியங்களை மறைப்பது அசாத்தியமானது. " மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லா வற்றையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார் " ( நீதிமொழிகள் 5 : 21 ). என்று வேத வசனம் சொல்கிறது. மறுபடியும், " தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார் " என்று வாசிக்கிறோம் " (I யோவான் 3 : 20).



## தேவன் மாறாதவர்!

இவ்வுலகில் எல்லாமே மாறுகிறது. தேசங்கள் சுதந்தரமடையும்போது அரசாங்கங்கள் மாறுகிறது. பழைய தலைவர்கள் மாறி புதிய தலைவர்கள் வருகிறார்கள். வாழும் விதம் மாறுகிறது. மக்களின் பழக்க வழக்கங்கள் மாறுகின்றன. தட்பவெட்பநிலை மாறுகிறது. உடை, பாணி மாறுகிறது. நமக்கு வயதாகும்போது நம் சரீரம் மாற்றத்தை அடைகிறது. ஆனால், தேவன் ஒருபோதும் மாறுவதில்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாத வராயிருக்கிறார் (எபிரெயர் 13 : 8). " நான் கர்த்தர், நான் மாறாதவர் " (மல்கியா 3 : 6).

## தேவன் ஆவியாயிருக்கிறார்!

தேவன் உங்களையும், எங்களையும் போல ஒரு மனிதர் அல்ல. மார்மன் மார்க்க பிரிவைச் சேர்ந்தவர்கள் பிதாவாகிய தேவன் மகிமைப்படுத்தப்பட்ட பரிபூரணமான மனிதன் என்று போதித்து அதையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

✞

# அவர் வந்து சமாதானத்தை பிரசங்கித்தார்

## *He Came and Preached Peace*

G.F. Raines

**நாம்** வாழும் இவ்வுலகம் சமூக விரோதிகளையும், இனவெறி சொற்களையும், உள்நாட்டுச் சண்டைகளையும், போராட்டம் நிறைந்த வாழ்க்கை முறைகளையும் தவறாக பயன்படுத்தப்படும் சுதந்திரத்தால் வளர்க்கிறது. பெருகிவரும் குற்றங்கள் தொடர்பு படுத்துவதற்குப் பதிலாக பதிலடிக் கொடுக்கிறது. ஒத்துழைப்புக்குப் பதிலாக சண்டையை உண்டாக்குகிறது. ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்குப் பதிலாக அவதூறு பேசுகிறது அல்லது ஒருவரையொருவர் சுட்டுக் கொல்லுகிறது.

இத்தனை பிரச்சனைகளுடன் கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்ததற்கான பிரதான காரணங்களுள் ஒன்றை நாம் உறுதியாக வலியுறுத்துகிறோம் ; " அவர் வந்து உங்களுக்கு சமாதானத்தைப் சுவிசேஷமாக அறிவித்தார் " (எபே 2 : 17). இவ்வசனப்பகுதி இயேசு சமா தானத்தைப் பிரசங்கிக்க மட்டுமல்ல அதை உண்டாக்கினார் என்பதைக் காட்டுகிறது. நம் தலைமுறையினர் இழந்து கொண்டிருக்கிற சமாதானத்தை அவர் எல்லா பகுதியிலும் உண்டாக்கினார்.

எபே 2 : 11 ல், பவுல் சமாதானத்திற்குப் பதிலாக எல்லாவகையான போராட்டங்களும் கலகங்களும் தலைதூக்கிய அந்தக் குறிப்பிட்ட நாளை நினைத்துப்பாருங்கள் என்று வலியு றுத்துகிறார். இங்கே பவுல் வலியுறுத்தும் கருத்து என்னவென்றால், கிறிஸ்து அவர் களுடைய இருதயத்திற்குள் வந்தபோது எல்லாமே மாறிவிட்டது. அந்த நாள் ஆசீர்வதிக்கப் பட்டும். மேலும், சண்டைகளும், சச்சரவுக்கும் காணப்பட்ட இடத்தில் சமாதானம் நிலவுகிற படியால் தேவனுக்கு துதிகள் செலுத்தப்படவேண்டும். நாம் மறுபடியும் இயேசுவால் என்ன செய்ய முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இன ( யூகர் மற்றும் புறஜாதிகள் ) மற்றும் கலாச்சார

(விருத்தசேனம் பண்ணப்பட்ட, விருத்தசேதனம் பண்ணப்படாத) காரணங்களால் அந்நிய தன்மை யாரிடம் மேலோங்கி நின்றதோ அவர்களிடம் " முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் " என்று சொன்னார் (எபே 2 : 13). கிறிஸ்துவின் இரத்தம் தொடர்பு படுத்தப்படும்போது இன மற்றும் கலாச்சார வேறுபாடுகள் மறைந்து போகின்றன.

" பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தபடியால் " கிறிஸ்து சமூக வேறுபாடுகளையும் களைந்தார். அவர் இருதிறத்தாரையும் ஒன்றாக்கினபடியால் அந்த தடுப்புச்சுவர் எதற்காக அங்கே இருக்க வேண்டும்? ( எபே 2 : 14 ) ஜெர்மனி நாட்டின் பெர்லின்சுவர் இடிக்கப்பட்டதை களிப்பாக ஒலிபரப்பு செய்த, ஒளிபரப்பு செய்த ஊடகங்கள் கிறிஸ்துவை எல்லோருக்கும் ஒலிபரப்பு வேண்டும், ஒளிபரப்ப வேண்டும். ஏனென்றால் அவரால் நம்மை சர்வதேச அளவில் கொண்டு செல்ல முடியும்.

கிறிஸ்து உபதேச வேறுபாடுகளையும் நீக்கிப் போட்டார். சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படிச் சமாதானம் பண்ணினார். (எபே 2 : 15).

கிறிஸ்து சபை வேறுபாடுகளைக்கூட நீக்கிப் போட்டார். அவர் சிலுவை மூலமாக ஒரே சரீரமாகிய சபையில் அந்த வேறுபாடுகளை எடுத்துப் போட்டார் ( கொலோ 1 : 18 ). ஒவ்வொரு பிரசங்கியாரும், பாஸ்டர் என்றழைக்கப்படுபவர்களும், மதகுருக்களும் இந்த விஷயத்தில் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும் அளவுக்கு நேர்மையாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது அப்போது சபைப் பிரிவுகள் எல்லாவற்றிக்கும் முற்றுப்புள்ளி வைத்து கிறிஸ்து கட்டின ஒரே சரீரமாகிய ஒரே சபையில் நாமெல்லோரும் அங்கம் வகிக்க முடியும் (எபே 2 : 16 ; மத்தேயு 16 : 18 ; எபே 2 ; 19 – 22).

எல்லாவற்றையும் விட மகிமையாக அவர் மனித – தெய்வீக வேறுபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். " அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம் " (எபே 2 : 18 : I தீமோ 3 : 15).

கிறிஸ்து இன கலாச்சார சமூக உபதேசம் மற்றும் சபை சம்மந்தமான சமாதானத்தை உண்டு பண்ணியிருக்கிறார் – என்ன ஒரு சந்தோஷமான விஷயம் இது! கிறிஸ்துவால் இதைச் செய்ய முடியும். அவர் செய்தார். இன்னும் செய்ய விரும்புகிறார்! நாம் அவரை கர்த்தாவே, கர்த்தாவே என்று அழைத்து அவர் சொல்கிறபடி செய்வோம் (லூக் 6 : 46 ; யோ 10 : 16 ; கொரி 1 ; 10). ✞

# நான் யார்?

## Who Am I

### Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா? கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். என் பெயரை நீங்கள் முதல் குறிப்பிலேயே யூகித்து விட்டால் 100 மதிப்பெண்கள் உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். ஐந்தாவது குறிப்பிற்கு பிறகு நான் யாரென்பதை கண்டு பிடித்தால் உங்கள் மதிப்பென் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதி செய்து விட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்க வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. என் பெயரின் அர்த்தம் " நகைப்பு "
2. எனக்கு ஒரு மூத்த சகோதரன் உண்டு
3. பயத்தில் நான் என் மனைவியை சகோதரி என்று பொய் சொன்னேன்
4. நான் இரட்டைக் குழந்தைகளின் தகப்பனாயிருக்கிறேன்
5. என் சந்ததியார் மிகப்பெரிய தேசமானார்கள், என் சகோதரரின் சந்ததியாரும் அப்படியே ஆனார்கள்.
6. என் பெற்றோர் வயது சென்றவர்களாயிருந்தபோது நான் அவர்களுக்குப் பிறந்தேன்.
7. நான் வாக்குத்தத்தத்தின் குமாரனாயிருக்கிறேன்.
8. என் தகப்பன் என்னை பலி செலுத்த விருப்பமுள்ளவராயிருந்தார்.
9. என் தாயார் சாராள்
10. நான் ரெபேக்காள் என்னும் பேர்கொண்ட ஒரு பெண்ணை திருமணம் செய்தேன்

# சுவிசேஷ ஊழியம் பற்றி சில சிந்தனைகள்

# Thoughts about Evangelism

Charles Box

இழந்து போனவர்களை தேவன் நேசிக்கிறார். நேசிப்பது மட்டுமல்லாமல் அவர்களை சுவிசேஷத்தின் மூலமாக இரட்சிப்பதற்கு திட்டங்களையும் தீட்டியிருக்கிறார் (1 கொரிந்தியர் 15 ; 1 – 4). நாம் சுவிசேஷ ஊழியத்தை செய்யத்தவறினால் மற்றவர்களுடைய இரத்தப்பழியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நாம் நினைக்க வேண்டும். " சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்தில் சாவான்; அவன் இரத்தப் பழிையயோ உன் கையிலே கேட்பேன். நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற் போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான். நீயோ வென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய். அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதி கேடு செய்யும்போதும், நான் அவன் முன் இடறலை வைக்கும்போதும், அவன் சாவான். நீ அவனை எச்சரிக்காதபடியினாலே, அவன் தன் பாவத்திலே சாவான்; அவர் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். (எசேக்கியேல் 3 : 18 – 21 ).

1. கிறிஸ்துவின் அன்பு ஊழியஞ் செய்யும்படி நம்மை நெருக்கி ஏவுகிறது. " கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், (11 கொரித்தியர் 5 : 14) .
2. இழந்து போனவர்களைத் தேடுவதும் அவர்களை இரட்சிப்பதுமே சபையின் பணியாயிருக்கிறது. " இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுசகுமாரன் வந்திருக்கிறார் " ( லூக்கா 19 : 10 ).

3. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கனி கொடுக்க வேண்டும். " என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதை சுத்தம் பண்ணுகிறார் " (யோவான் 15 : 2 ).

4. முழு உலகத்தை விட ஓர் ஆத்துமாவின்மதிப்பு விலையேறப் பெற்றது. " தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான் " (மத்தேயு 16 : 26).

5. கிறிஸ்தவம் ஒரு போதிக்கப்படும் மார்க்கமாகும். " என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன், எல்லோரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப் பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே. ஆகையால், பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான் " (யோவான் 6 : 44,45).

6. நாம் சுவிசேஷ ஊழியத்தைச் செய்தே ஆக வேண்டும். ஏனென்றால், பாவிகள் நம்மிடத்தில் வரமாட்டார்கள். நாம்தான் அவர்களிடம் சென்று சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். " நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் " (மாற்கு 16 : 15 , 16).

இழந்து போனவர்களை முக முகமாகச் சந்தித்து, அவர்களிடத்தில் சுவிசேஷ ஊழியத்தைச் செய்யாவிட்டால் விட சபையை ஒன்றும் பெரிதாக கட்டிவிட முடியாது. நாம் எழுந்து இயேசுவுக்காய் பலரைப்போய் சந்திப்போம்.

## கோபம்

கோபமானது சரியான முறையில்
பயன்படுத்தப்படும் போது அது பயனுள்ளதாயிருக்கும்;
உண்மையில், அது ஒரு நல்ல விஷயம்.
ஆனால், அது ஒரு போதும் நம் கைமீறிப் போகக்கூடாது.
கோபங் கொண்டாலும் பாவம் செய்யக் கூடாது.

# தீர்மானத்தின் பள்ளத்தாக்கு
# The Valley of Decision

David Deffenbaugh

மனிதன் தேவனைச் சேவிப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது செயல்படுகின்ற மற்றும் ஜாக்கிரதையுள்ள மனவிருப்பத்தின் நோக்கமாயிருக்கிறது. , இக்கருத்து யோசுவா புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய ஜனங்களை யோர்தான் நதிக்குக் கொண்டு வந்து அவர் அவர்களை அற்புதவிதமாகக் கடக்கும்படி செய்தார். ஆயினும், அவர்களுக்கு உடனே ஒரு தடை அங்கே காத்திருந்தது. அதாவது, எரிகோ அவர்களுக்கு எதிராக இருந்தது. " நான் எரிகோவை உங்கள் கையில் ஒப்புகொடுத்தேன் '' என்று தேவன் சொன்னார். ஜனங்கள் தேவனுடைய பிராமணங்களுக்குக் கீழ்ப்படிந்தபடியால் தேவன் அற்புதவிதமாக எரிகோவை அவர்களுக்குக் கொடுத்தார். விசுவாசத்தினாலே எரிகோவின் மதில்கள் விழுந்தன.

அதற்குப் பிறகு, ஆயி பட்டணம் அவர்களுக்கு முன்பாக இருந்தது. இஸ்ரவேலர்களின் கூடாரத்தில் பாவம் இருந்தபடியால் அவர்களுடைய சேனை தோற்கடிக்கப்பட்டது. ஆகான் என்பவன் தேவனுக்கு எதிர்த்து நின்று சாபத்தீடானதிலே சிலதை எடுத்துக் கொண்டான். இஸ்ரவேல் பெருமை மற்றும் அதீத நம்பிக்கை போன்றவற்றால் பாவம் செய்தது.

யோசுவா 8 : 30 – 35 வசனங்களில் யோசுவா ஜனங்களை சீகேம் பள்ளத்தாக்கினிடத்தில் கொண்டுவந்தான். அங்கே தேவனுக்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனுக்கு சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தி சமாதான பலிகளையும் செலுத்தினான். அங்கே தேவனுடைய மலைக்கு எதிர்புறமாகவும் மீதி ஆறுகோத்திரத்தாரை ஏபால் மலைக்கு எதிர்புறமாகவும் நிறுத்தி வைத்தான்.

இது இஸ்ரவேல் ஒருபோதும் மறக்காத அளவுக்கு ஓர் உதாரணப் பாடமாக இருந்தது. இயற்கையாக அமைந்த ஒரு கலையரங்கப் பின்னணியில் யோசுவா நியாயப்பிரமாணத்தில் சொல்லிய ஆசீர்வாதமும், சாபமுமாகிய சகல வார்த்தைகளையும் வாசித்தான். மோசே கட்டளையிட்ட எல்லாவற்றிலும் யோசுவா இஸ்ரவேலின் முழுச்சபைக்கும் ஸ்தீரிகளுக்கும், பிள்ளைகளுக்கும் ஒரு வார்த்தையும் விடாமல் வாசித்தான்.

ஆகவே, இங்கே இஸ்ரவேலர்கள் தீர்மானம் எடுக்கும்படியாக அழைக்கப் பட்டார்கள். அது துக்கம், தோல்வி, சாபம் மற்றும் மரணத்தை அடையாளப்படுத்தும் ஏபால் மலையாக இருக்குமா? அல்லது ஆசீர்வாதம்,இரக்கம் மற்றும் ஜீவனை அடையாளப்படுத்தும் கெர்சீம் மலையாக இருக்குமா?

இன்னும் நாம் தீர்மானம் எடுக்கும் படியாகவே அழைக்கப்படுகிறோம். தேவனுடைய சமூகத்திலும் அவருடைய வார்த்தைக்கு முன்பாகவும் கீழ்ப்படி தலையும், ஆசீர்வாதத்தையும் தெரிந்து கொள்ளுகிறோமோ? அல்லது கீழ்ப்படியா மையையும் சாபத்தையும் தெரிந்துகொள்ளுகிறோமோ? நீங்கள் தீர்மானத்தின் பள்ளத்தாக்கிலே இருந்தால் இன்றே ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்! ✞

## நீங்கள் எதை விதைக்கிறீர்கள்?

- நேர்மையை விதைத்தால் நம்பிக்கையை அறுவடை செய்யலாம்
- நற்தன்மையை விதைத்தால் நண்பர்களை அறுவடை செய்யலாம்
- விடாமுயற்சியை விதைத்தால் திருப்தியை அறுவடை செய்யலாம்
- கடின உழைப்பை விதைத்தால் வெற்றியை அறுவடை செய்யலாம்
- மன்னிப்பை விதைத்தால் ஒப்புரவாகுதலை அறுவடை செய்யலாம்
- தாழ்மையை விதைத்தால் உயர்வை அறுவடை செய்யலாம்
- ஒற்றுமையை விதைத்தால் வெற்றியை அறுவடை செய்யலாம்
- ஒழுக்கத்தை விதைத்தால் நற்பெயரை அறுவடை செய்யலாம்
- பாசத்தை விதைத்தால் ஆதரவை அறுவடை செய்யலாம்
- சகிப்புத்தன்மையை விதைத்தால் பாராட்டை அறுவடை செய்யலாம்

# நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கான பவுலின் தேவை

## Paul's Need To Preach the Gospel

Gary C. Hampton

அப்போஸ்தனாகிய பவுல் தன்னை என்றென்றும் கடனாளியாகத்தான் பார்க்கிறார். அவர் தன்னை சுவிசேஷம் ஒப்புகொடுக்கப்பட்ட உக்கிராணக்காரனாகப் பாவித்து, சுவி சேஷத்தை எல்லோருக்கும் பிரசங்கிக்க கடமைப்பட்டிருப்பதாக உணர்ந்தார். அவர் யூதரல்லாத கிரேக்கருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கத் தன்னை கடனாளியாகக் கருதினார். கிறிஸ்துவுக்குள் தனக்கிருந்த சுதந்திரம் மற்ற வர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிற காரியத்தில் தன்னை கட்டுப்படுத்துவதாகக் கருதினார். (I கொரி. 4:1; 9: 16, 17 ) பவுல் ரோமாபுரியில் இருந்தவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கத் தான் கடமைப்பட்டிருப்பதாக உணர்ந்தபடியால் அதைத் தவிர்க்க அவர் விரும்பாமல் இரட்சிக்கும் சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவிக்க ஆயத்தமாக இருந்தார். (ரோமா 1: 14, 15).

சிலர் ரோமாபுரி மாநகரில் பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வெட்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அவர் வெட்கப்படவில்லை. ஏனென்றால், பாவத்தில் மரித்துப்போன ஒரு மனித னை உயிர்ப்பிக்கும் வல்லமை சுவிசேஷத்திற்கு உண்டு (எபேசியர் 2:1 – 6). இந்த சுவிசேஷந்தான் கிறிஸ்தவர்களை உண்டாக்கும் வித்தாயிருக்கிறது. பவுல் வெட்கப்பட வில்லை. ஏனென்றால், சுவிசேஷம் கிறிஸ்துவினுடையது அல்லது தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய செய்தியாயிருக்கிறது. ( யோவான் 1 : 1 – 18 ). மேலும், இது எல் லோருக்குமான செய்தியாயிருக்கிறது ( அப்போஸ்தலர் 1 : 8 ). சுவிசேஷம் தேவவநீதியை வெளிப்படுத்தி தேவனுடைய பார்வையில் ஒரு மனிதனை நீதியுள்ளவனாகக் காண்பிக்கும் வழியைக் காட்டுகிறது. இரட்சிக்கப்படுகிறவர்கள். விசுவாசத்தினால் தேவநீதியை ஏற்றுக்

கொண்டு அந்த விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள். இது ஆபகூக் தீர்க்கதரிசன புத்தகத்தின் மேற்கோளாகும். ( ஆபகூக் 2 : 4; ரோமர் 1 : 16, 17 ).

நாமெல்லோரும் பவுலின் மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டும் என்பது ஜெபமாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் இரத்தம் இல்லாமல் நம்மில் ஒருவரும் இரட்சிக் கப்பட முடியாது. நாமும் கூட இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கடனாளிகளாக இருக்கிறோம். எனவே, நாம் தேவனுக்கான தூதுவர்களாக இருந்து கல்வாரி மலையில் கிறிஸ்து செய்த மாபெரும் தியாகத்தினால் உண்டான பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ளும்படி அவர்களிடம் மன்றாட வேண்டும். நாம் தொடர்ந்து சுவிசேஷத்தை போதிக்க வாய்ப்புகளைத் தேடி, சத்தியத்தை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக தேவன் இருதயங்களைத் திறக்கும்படியாக ஜெபிக்க வேண்டும்.

" கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் ; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது ". (ரோமர் 1 : 16 ). ✝

---

## கர்த்தர் என்...

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | – | நான் போதிக்கப்படுகிறேன் |
| செட்டை | – | நான் மூடப்படுகிறேன் |
| கன்மலை | – | நான் பாதுகாப்பாக இருக்கிறேன் |
| மேய்ப்பர் | – | நான் போஷிக்கப்படுகிறேன் |
| தலைவர் | – | நான் பெருமைப்படுகிறேன் |
| இரட்சிப்பு | – | நான் விடுதலையாக்கப்படுகிறேன் |
| வழிகாட்டி | – | நான் வழிநடத்தப்படுகிறேன் |
| நம்பிக்கை | – | நான் தைரியமாக இருக்கிறேன் |
| சிருஷ்டிகர் | – | நான் நேசிக்கப்படுகிறேன் |
| தகப்பன் | – | நான் ஏற்றுக்கொள்ளப்படுகிறேன் |

# “பழங்கால” வேதாகம பிரசங்கத்திற்காக பசியாயிருத்தல்

# Hungering for 'Old Time' Bible Preaching

Gary C. Hamptond

கேளிக்கை விளையாட்டு மற்றும் மந்திர ஜாலங்கள் சிறிது காலமே நிலைத்திருக்கும். சில நாட்களிலேயே ஜனங்கள் அதில் சலிப்படைந்து விடுவார்கள். அதன் பிறகு அவர்கள் மெய்யான ஒன்றிற்காக ஏங்க ஆரம்பித்து விடுவார்கள். அவர்கள் நிச்சயமாக அப்படிச் செய்தே ஆக வேண்டும்! கிறிஸ்துவின் சபையிலுள்ள சகோதரர்கள் சபையில் புதிதாய் தோன்றியுள்ள தாராளக் கொள்கை இயக்கங்கள் ஏற்படுத்திய தாக்கத்தினால் வெறுப்படைந்து ஆரோக்கியமான உபதேசத்திற்கு திரும்ப வந்து கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து “ நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள் ” ( மத். 5 : 6 ) என்று போதித்தார். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களிடத்தில் பேசும்போது “ இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன் ” என்று சொன்னார் ( அப்போஸ்தலர் 20 : 32 ). பல சகோதரர்கள் பழங்காலத்து வேதாகம பிரசங்கத்திற்காக உண்மையாகவே பசிதாகமாக உள்ளார்கள். அவர்கள் அப்படிப்பட்ட பிரசங்கங்களை மாற்றத்திற்கு இடங்கொடாத கர்த்தருடைய சபைகளில் காண்கிறார்கள்.

நான் அடிக்கடி கவனிக்கிற காரியம் என்னவென்றால், நம் தேசத்தில் நடக்கும் காரியங்களுக்கும், கிறிஸ்துவின் சபைகளில் நடக்கும் காரியங்களுக்குமிடையே

ஓர் ஒருமித்ததன்மை காணப்படுகிறது. கடந்த இருபது ஆண்டுகளாக நம் தேசத்தில் பலர் வேதாகம அளவு கோலையும், ஒழுக்க ரீதியான பொறுப் புணர்வையும் விட்டுவிட்டு " எதையும் செய்யலாம் " என்னும் மனப்பான்மையை பெற்றிருப்பது அதிக கவலையளிக்கிறது. இதேபோல, இக்காலகட்டத்தில் சபையில் பலர் வேதாகமப் பிரசங்கங்களையும் ஆரோக்கியமான உபதேசத்தையும் விட்டு சுய இஷ்டமான ஆராதனையை தழுவிக் கொண்டார்கள். அதன் விளைவு தேசத் திற்கும், சபைக்கும் மாபெரும் அழிவை வந்தது.

இருந்தபோதிலும், இப்போது பலர் விழித்துக்கொண்டு சமூக ரீதியான தாராளக்கொள்கை தேசத்திற்கும், சபைக்கும் ஆபத்தானது என்பதை உணர்ந்து, நாம் தேவனிடத்திற்கும் வேதாகம அளவுகோலினிடத்திற்கும் திரும்ப வேண்டும். இல்லையென்றால்; பாழாய்ப் போவோம் என்று எண்ணுவதை அறிந்து தேவனுக்கு நன்றி செலுத் துகிறேன். அதுபோலவே, சபையில் பெரும்பாலானோர் விழித்துக்கொண்டு புதுமையான கொள்கைகள் எல்லாம் சபைக்கு கேடானதாயிருக்கிறபடியால் அவைகளை விட்டு தேவனுடைய வழி யாக ஆரோக்கியமான உபதேசத்திற்கும் பூர்வ பாதைக்கும் திரும்புவோம் என்று திரும்புவது உற்சாகமூட்டும் அறிகுறி யாயிருக்கிறது (எரேமியா 6 : 16).

## இயேசுவுக்கு முதலிடம் கொடுப்பேன்

என்னைச் சுற்றி இருக்கும் உலகத்தின் மீது எனக்கு இப்போது ஈர்ப்பு இல்லை:
அதன் சந்தோஷம் வேதனையைக் கொண்டு வருகிறது. அதன் ஞானம் வீணானது;
உறுதியான, நிச்சயமான ஓர் அஸ்திபாரத்தை நான் தேடுகிறேன்
நான் என் வாழ்வில் இயேசுவுக்கு முதலிடம் கொடுப்பேன்.

எனக்கு இரட்சிப்பை உண்டுபண்ணுவதற்காக கர்த்தராகிய இயேசு மரித்தார்
எனக்கு பதிலாக அவர் கல்வாரிக்குச் சென்று இரத்தம் சிந்தினார்:
மீட்பு என்னை எல்லாப் பாவத்தையும் விட்டு விட தூண்டுகிறது
நான் என் வாழ்வில் இயேசுவுக்கு முதலிடம் கொடுப்பேன்

# ஆச்சரியம் மற்றும் கண்டு கொள்ளப்படாதவர்

## *Strange And Stranger Still*

Dalton Key

**ஆச்சரியம்:**

அமெரிக்க தேசத்தில் ஒருவர் 1977 ஆம் ஆண்டில் தன் மனைவியை காணவில்லை என்று காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். எத்தனை நாட்களாக உங்கள் மனைவியைக் காணவில்லை என்று அவரிடம் கேட்கப்பட்டபோது 1968 லிருந்து காணவில்லை என்று பதிலளித்தார். மேலும், அவரிடம் புகார் கொடுக்க ஏன் இத்தனை வருடங்கள் காத்திருந்தீர்கள் என்று கேட்கப்பட்டபோது, அந்த மனிதன் இப்பொழுதுதான் பொறுமையை இழந்துவிட்டதாகச் சொன்னாராம்.

அதே போல், ஜெர்மனியிலிருந்து வரும் தகவல்கள், தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் ஓர் இருக்கையில் பாதுகாத்து வைக்கப்பட்ட ஒரு மனிதனுடைய சடலத்தைப் பற்றியது.

இச்சடலத்தை ஆராய்ந்த அதிகாரிகளின் கூற்றுப்படி, அந்த நபர் நான்கு வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார். ஆனால், அந்த மனிதன் மின்சாரக் கட்டணத்தை செலுத்தாதபடியால், அவன் வீட்டு மின்சாரமும் துண்டிக்கப்பட்டுவிட்டது. அந்த 51 வயது மனிதன் காணாமல் போனதை யாரும் காவல்துறைக்கு தெரிவிக்கவும் இல்லை. அவனுடைய வீட்டிற்கும் போய் யாரும் அவனை பார்க்கவும் இல்லை.

**இன்னும் கண்டு கொள்ளப்படாதவர்:**

கர்த்தரிடமிருந்தும், அவருடைய சபையிலிருந்தும் விழுந்துபோனவர்கள் உண்மையுள்ள சகோதரர்களால் அக்கறைப்படாமலும் கண்டுகொள்ளப்படாமலும் இருந்தால் அவர்கள் இன்னும் சபையாராய் அறியப்படாதவர்களாகவே இருக்கிறார்கள். காணாமல் போன ஆடு கண்டுபிடிக்கப்படும்வரை தேடப்பட வேண்டும். அதே போல் காணாமல் போன காசும் உடனடியாக கவனத்துடன் தேடப்பட வேண்டும். ஆனால், இழந்துபோன ஆத்துமாக்களோ சபையில் ஏற்பட்ட பிரிவினாலே விழுந்து கொண்டிருப்பது போல் தெரிகிறது.

சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு (கலாந்தியர் 6 : 1). ✝

# நரகத்தின் அஸ்திபாரங்கள் ஒற்றுமையின் சத்தத்தினால் நடுங்குகின்றன!

# Hell's Foundations Quiver at the Shout of Unity!

Paul Holland

## தேவன் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்

எண்ணாகமம் 32 ஆம் அதிகாரத்தில் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தார் யோர்தான் நதிக்கு கிழக்கிலிருந்த கீலேயாத்தில் குடியேற விரும்பினார்கள். அப்பொழுது மோசே காத் புத்திரரையும், ரூபன் புத்திராரையும் நோக்கி, " உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில், நீங்கள் இங்கே இருப்பீர்களோ? " என்று கேட்டார். நிச்சயமாகவே பிரிவினை சோர்வை அளிக்கிறது (7 – 15).

புதிய ஏற்பாட்டிலும், ஒற்றுமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து ஊழியத்தின் ஆரம்பநாட்களில் ராஜ்ஜியத்தில் அங்கம் வகிக்க ஜனங்கள் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வந்ததாக நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம் (மத். 8 : 11). யோவான் புத்தகத்தின் மையப் பகுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து " இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும் " என்றார் (யோவான் 10 : 16).

நிச்சயமாகவே, எண்ணிக்கையில் பெலன் உண்டு. ஒற்றுமையில் வல்லமை உண்டு. ஒற்றுமை நம்மை உறுதிப்படுத்தி நம் செயல்திறனை அதிகப்படுத்துகிறது. அதனால்தான் நரகத்தின் அஸ்திபாரங்கள் ஒற்றுமையின் சத்தத்தினால் நடுங்குகின்றன!

## சாத்தான் செயல்படும் முறை பிரிவினைதான்

சாத்தான் ஒற்றுமை என்னும் பேரில் தேவனிடமிருந்து மனிதனை பிரித்துவிடுகிறான். இதுதான் பாபேல் கோபுரம் கட்டும்போது நடந்தது. ஆதியாகமம் 11 ஆம் அதிகாரத்தில் ஜனங்கள் ஒற்றுமையாக இருந்தார்கள். அவர்கள் தேவனுடைய நோக்கத்தை

நிறைவேற்றவில்லை ; அவர்கள் தேவனுடைய திட்டங்களைக் குறித்து கவலைப்பட வில்லை. தேவன் மனிதனை பலுகிப் பெருகி பூமியை நிரப்பும்படியாய் கட்டளையிட்டார் ( ஆதி 1 : 28). ஆனால், அதைச் செய்யவில்லை.

ஆதியாகமம் 11 ஆம் அதிகாரத்தின் மைய நோக்கம் ஒற்றுமைதான். ஆனால், அது ஒரு தவறான ஒற்றுமையாகும். அது தேவனோடு உள்ள ஒற்றுமைக்கு உலை வைத்து மனிதர்கள் மத்தியில் ஏற்படும் ஒற்றுமையாகும் (11 : 1). அவர்கள் வானத்தை எட்டுவதற்கு ஒரு நகரத்தையும், ஒரு கோபுரத்தையும் கட்டும் பணியில் இணைந்து செயல்பட்டார்கள் (11 : 4 ). அவர்கள் பெயர் எடுக்க விரும்பினார்கள். தேவன் அவர்கள் பாஷைகளைத் தாறு மாறாக்கின போது, அவர்கள் உலகமெங்கும் சிதறிப்போகும்படி செய்தார் (8).

எனவே, நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்றால், அந்த ஒற்றுமை தேவனு டைய நிபந்நனைகளின்படி இருக்க வேண்டும். பெயரளவில் ஒற்றுமை இருக்கக்கூடாது. சாத்தான் பெரும்பாலும் பிரிவினைகளை உண்டாக்கிதான் செயல்படுகிறான். கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்துவின் சபை பிரிவினைக்குள் ளானது. சிலர் தன்னை பவுலைச் சேர்ந்தவனென்றும், அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், கேபாவைச் சேர்ந்தவனென்றும் சொல்லிக்கொண்டார்கள், அவர்கள், உபதேச காரியங்களில் பிரிந்தார்கள், பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பிரி வினை ஏற்பட்டது. பவுல் அவர்களுடைய பிரச்சனையின் மையம் சுவிசேஷத்தின் மீதான அவர்களுடைய உலகத்தன்மைதான் என்று அவர்களை எச்சரித்தார் ( II கொரி 3 : 3).

பிரிவினை பெலவீனமானது. பிரிவினையில் குழப்பமுண்டு. பிரிவினையில் நிச்சய மற்ற தன்மை தான் காணப்படும். பிரிவினையில் தோல்விதான் உண்டு. யோவான் 17 : 20 – 21. வசனங்களில் இயேசு கிறிஸ்து ஒற்றுமைக்காக ஜெபித்த ஜெபத்தை வைத்துப் பார்த்தால் ஒற்றுமைக்காக இவ்வுலகம் இயேசு கிறிஸ்து மேல் விசுவாசம் வைக்கும். ஆனால், இவ்வுலகில் அநேக அவிவாசிகள் இருப்பதற்கு பாதி காரணம் கிறிஸ்துவை விசு வாசிக்கிறோம் என்று சொல்லிக் கொள்பவர்கள் மத்தியில் காணப்படும் பிரிவினை தான். அதனால்தான் நரகத்தின் அஸ்திபாரங்கள் ஒற்றுமையின் சத்தத்தினால் நடுங்குகின்றன!

### நாம் எப்படி ஒற்றுமையாயிருக்க முடியும்?

இக்கருத்துக்கள் நம் எல்லா உறவுகளுக்கும் பொருந்தும்.

நம் பணியில், நம் குடும்பங்களில், சபைகளில் ஒட்டு மொத்தமாக கிறிஸ்தவத்தில் தேவனோடு ஒற்றுமையாயிருக்கிறோம். ஒற்றுமை பெலனைக் கொண்டு வருகிறது.

# சபையைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?

## *What Is Your Estimate Of The Church?*

John R. Vaughan

சபையைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?அப்போஸ்தலனாகிய பவுல் சபை பற்றிப் பேசும்போது அதை " மகிமையான சபை" என்று குறிப்பிடுகிறார் (எபேசியர் 5 : 22 – 27). சபையை மகிமையான சபை என்று அழைப்பதன் பொருள் அது துதிக்கும், கனத்துக்கும் பாத்திரமாயிருக்கிறது. என்பதுதான். அது ஏன் மகிமையான சபை என்றழைக்கப் படுகிறது? அதற்கு பல காரணங்கள் உண்டு.

### சபைக்கு மகிமையான ஸ்தாபகர் இருக்கிறார்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து " இந்தக் கல்லின் மேல் நான் என் சபையைக் கட்டுவேன் " என்று சொன்னார். இயேசு கிறிஸ்துதான் சபையின் ஸ்தாபகராயிருக்கிறார்.

### சபைக்கு மகிமையான தலைவர் இருக்கிறார்

" கிறிஸ்துவே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர் " ( கொலோ 1 : 16 ) கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல, புருஷனும், மனைவிக்குத் தலையாயிருக்கிறான் (எபே. 5 : 23 ). இதன் பொருள், நாம் சபையில் எல்லா அதிகாரத்திற்கும் கிறிஸ்துவையே நோக்கிப் பார்க்க வேண்டும் என்பதாயிருக்கிறது. ( மத்தேயு 28 : 18 ; கொலோ 3 : 17 ; II யோவான் 9 ).

### சபை கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டது

கிறிஸ்து தம்முடைய இரத்தத்தினால் வாங்கின ஒன்றே ஒன்று சபைதான். நாம் ஒரு பொருளை அதன் விலையை வைத்தே மதிக்கிறோம். பரலோகம் சபையை அதிகமாக மதித்தபடியினால்தான் கிறிஸ்துவின் இரத்தத்தையே கிரயமாக செலுத்தியது.

### சபைக்கு மகிமையான நாமம் இருக்கிறது

சபை கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருத்திருக்கிறது. பழங்கால அமைப்புகள் மனிதர்களுடைய பெயரைத் தரித்திருந்தன, ஆனால், சபை கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருக்கிறது. ( ரோமர் 16 : 16 ).

## சபைக்கு மகிமையான ஊழியம் இருக்கிறது

சபையின் ஊழியம் தேவனை மகிமைப்படுத்துவதாகும். சபையில் தேவனுக்கு தலைமுறைதோறும் மகிமை உண்டாக வேண்டும். சபையின் பணி கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசிங்கிப்பதாயிருக்கிறது. (மாற்கு 16 : 15,16 ; ரோமர் 1 ; 16 ; I கொரிந்தியர் 1 ; 21 ; I தீமோத்தேயு 3 ; 14 ). சபையின் பணி ஆத்துமாக்களை இரட்சிப்பதாயிருக்கிறது. (மாற்கு 16 ; 15, 16 ) இரட்சிக்கப்படுகிறவர்கள் சபையில் சேர்க்கப்படுகிறார்கள் (அப். 2 ; 47 ).

## சபை மற்றொரு இடத்திற்கு மகிமையாகச் செல்கிறது

சபை பரலோகத்தில் நித்தியத்திற்குள் கடந்து செல்கிறது. " கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் " (எபெசியர் 5 : 27 ).

பூமிக்குரிய ராஜ்ஜியங்கள் செழித்தோங்கும். பின்பு காணாமல் போய்விடும். பூமிக்குரிய அமைப்புகள் சில காலத்திற்குப் பிறகு ஓய்ந்து போடும். ஆயினும், நம் கர்த்தருடைய சபை நித்தியத்திற்கும் தொடர்ந்து இருக்கும். அது உண்மையாகவே மகிமையானது தான்! ✞

---

# கர்த்தருடைய வார்த்தையின் நன்மைகள்

### (சங்கீதம் 119)

1. நமது வழிகளை சுத்தப்படுத்துகிறது (9, 101 )
2. பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது (11, 101 )
3. ஊக்கப்படுத்துகிறது (14, 16, 25 )
4. தேவ பயத்தை தருகிறது (38 )
5. நம்பிக்கை அளிக்கிறது (43, 49 - 50 )
6. நன்றியுணர்வைத் தருகிறது (62 )
7. ஞானத்தைக் கொடுக்கிறது (98, 100 )
8. வழி நடத்துகிறது (24, 105 )
9. ஜீவனைக் கொடுக்கிறது (25, 37, 40 )

# மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்

# In the Holy of Holies

Doyle kee

**நாம்** மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருந்துகொண்டு அதே நேரத்தில் நாம் தேவாலயத்திற்கு புறம்பேயும் இருக்க முடி யாது. அதுபோலவே, நாம் கிறிஸ்து வுக்குள் இருக்கும் போது உலகத்தின் வழி யில் நடக்க முடி யாது. நாம் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறோம் அல்லது இருளின் ராஜ்ஜியத்தில் இருக்கிறோம் பரிசுத்த வேத வாக்கியங்கள் இதற்கு இடைப்பட்ட உறவைப் பற்றி ஒரு போதும் பேசுவதில்லை. தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு அதிக தூரத்தில் இல்லாத ஒருவரைப்பற்றி நம் கர்த்தர் பேசியி ருந்தாலும், அவர் ராஜ்ஜியத்திற்குள் இருப்பதாக அறிவிக்க முடியாது.

ஒருவரிடத்தில் கிறிஸ்துவின் ஆவி இல்லையென்றால், அவர் கிறிஸ்துவை உடையவராக இருக்க முடியாது (ரோம 8: 9 ). நாம் பாவங்கள் மன்னிக்கப் பட்டவர்களாக இருக்கிறோம் அல்லது தாங்க முடியாத பாவப் பாரத்தை சுமந்து திரிகிறோம்.

ஆவிக்குரிய நிலையிலோ அல்லது உறவிலோ காணப்படும் இந்த வேறுபாடு பலர் மத்தியில் அதிக முக்கியத்துவத் தைப் பெறவில்லை. இப்படிக் கருப்பும், வெள்ளையும் கலந்த எண்ணம் அன்பற்ற தன்மையைத் தான் காட்டுகிறது. இது பிரிவினை ஆவியாகக் கருதப்படுகிறது. இயேசு பேசின இடுக்கமான வழி பலரால் அதன் எண்ணத்திலும், உண்மையிலும் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை. தேவன் யாரை அந்த நித்திய பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஏற்றுக் கொள்வார் என்கிற விவாதம் தொடர்ந்து கொண்டே இருக்கும். அந்த விவாதத்திற்கு தனிப் பட்ட முறையில் நாம் முற்றுப்புள்ளி வைத்தால் சமாதானமும், சந்தோஷமும் நமக்குக் கிடைக்கும்.நிச்சயம் இயேசுவின் இரத்தத்தினாலே நாம் தேவனுடைய சமூகத்திற்குள் பிரவேசித்து விட்டோம் என்பது தான், நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்போது நாம் தேவ சமூகத்திலிருந்து ஒருபோதும்

பிரிக்கப்படுவதில்லை என்பதற்கு உத்திரவாதம் அளிக்கிறது, ஆனால், பலருக்கு காரியங்கள் இப்படியிராது என்று வேத வசனங்கள் அறிவிக்கிறது. இருந்த போதிலும் " தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று வேதவாக்கியங்கள் எச்சரிக்கின்றன (II தெச 1:7, 8).

நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருப்போம் அல்லது அதற்கு வெளியே இருப்போம். நாம் அவருடைய குமாரன் என்கிற வாசல் மூலமாக உள்ளே இருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். அப்படியே வெளியே இருப்பவர்களை அந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுவர முயற்சி எடுப்போம்.

✞

# தேவனுடைய வார்த்தையை

1. பிரசங்க மேடை வேகத்தில் வாசித்து முடிக்க 70 மணி நேரம் 40 நிமிடங்கள் ஆகும்.
2. பழைய ஏற்பாட்டை வாசிக்க 52 மணி நேரம் 20 நிமிடங்கள் ஆகும்.
3. புதிய ஏற்பாட்டை வாசிக்க 18 மணி நேரம் 20 நிமிடங்கள் ஆகும்.
4. பழைய ஏற்பாட்டில் நீண்ட அதிகாரங்களை உடைய சங்கீதப் புத்தகத்தை வாசிக்க 4 மணிநேரம் 28 நிமிடங்கள் ஆகும்.
5. புதிய ஏற்பாட்டில் அதிகமான அதிகாரங்களை உடைய லூக்கா நற்செய்தி நூலை வாசிக்க 2 மணிநேரம் 43 நிமிடங்கள் ஆகும்.

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதை விட உங்கள் நேரத்தை செலவு செய்ய சிறந்த வழி உங்களிடம் உண்மையாகவே இருக்கிறதா?

# சூதாட்டம் ஒரு தவறான செயலாகும்

# The Wrong Of Gambling

Hershel Dyer

கிறிஸ்துவைத் தீவிரமாகப் பின்பற்றுபவர்கள் கூட சில வேளைகளில் சூதாட்டத்தில் என்ன தவறு இருக்கிறது? என்று கேட்கிறார்கள். முன்பெல்லாம் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்கவே மாட்டார்கள். சூதாட்டம் நம் முன்னோர்களால் தவறான ஒன்றாகக் கருதப்பட்டது. அதற்கு பின்னால் உள்ள காரணங்கள் என்ன?

முதலாவது, சூதாட்டம் " உன்னைப்போல் பிறனையும் நேசி " என்னும் பிரமாண அளவில் அழிவுக்குரியது. ( மத்தேயு 22 : 39 ). எல்லா விளையாட்டுகளிலும் அதில் பங்கேற்பவர்கள் வெற்றி பெறவே ஆசைப்படுவார்கள். இவ்விளையாட்டில் எல்லோருமே பணத்தை முதலீடாக வைத்து விளையாடுகிறார்கள். பணத்தை இழக்கவோ அல்லது விளையாட்டில் தோற்கவோ யாரும் விரும்புவதில்லை. ஒரு லாட்டரியிலோ, குதிரைப் பந்தயத்திலோ ஒரு சீட்டாட்டத்திலோ வெற்றி பெற்று பணத்தை வீட்டுக்கு எடுத்து செல்பவர்கள் தோற்றுப்போனவர்களுடைய வயிற்றெரிச்சலுடன் அப்பணத்தை எடுத்துச் செல்கிறார்கள்.

அடுத்து இந்தச் சூதாட்டம் வியாபார நடவடிக்கையிலிருந்து எப்படி வித்தியாசமாகிறது? ஒரு வியாபாரி தன்னுடைய பொருளைச் சந்தையில் அல்லது கடையில் விற்பனைக்கு வைக்கிறார். பொருள் தேவைப்படுகிற வாடிக்கையாளர் அதைப் பணம் கொடுத்து வாங்குகிறார். இங்கே இணக்கமான பரிவர்த்தனை நடக்கிறது. அதாவது, விற்பவரும் மகிழ்ச்சி அடைகிறார், வாங்குபவரும் மகிழ்ச்சி அடைகிறார்.

கேளிக்கை விடுதிகள், குதிரைபந்தய அரங்குகள், புகை மண்டலத்தால் நிரம்பிய சீட்டாட்ட கிளப்புகள், சூதாட்ட மையங்கள் பணத்தையும், மானத்தையும் தொலைத்தவர்

களுக்கு சான்றுகளாக உள்ளன. மேற்சொல்லப்பட்ட மையங்களில் அதிர்ஷ்டக் காற்று அடிக்கும் என்னும் நம்பிக்கையில் பணத்தை முதலீடு செய்வது தினசரி கூத்தாகும்.

சூதாட்டத்தில் ஈடுபட்டு பணத்தைத் தொலைப்பவர்களின் மனரீதியான பிரச்சனைகள் எண்ணற்றவை என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். மேலும், இப்படிப்பட்ட பழக்கத்தில் ஒருமுறை ஈடுபடுபவர்கள் அதற்கு முழுமையாகத் தங்களை அடிமையாக்கிக் கொள்வதாக புள்ளி விவரங்கள் கூறுகிறது.

கடைசியாக, இத்தகைய ஒழுக்கக் கேடான காரியங்களை தேசத்தில் அனுமதிக்கும் அரசாங்கங்கள் குடிமக்களால் அருவருக்கப்பட வேண்டும்.

" திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப் படக்கடவன்" (எபேசியர் 4:28).

✝

# கிறிஸ்தவக் கணவன் தன் மனைவியை எப்படிக் காண வேண்டும் ?

1. தன்னுடைய வாழ்நாள் கால கூட்டாளியாக
2. தன்னுடைய மிக முக்கியமான முதலீடாக
3. உலகிலேயே மிக முக்கியமான பெண்ணாக
4. கவனமாகக் கையாளப்பட வேண்டிய மென்மையான பாத்திரமாக
5. கர்த்தருக்குள் ஒரு சகோதரியாக
6. நேசத்திற்கும், பாசத்திற்கும் உரியவளாக
7. அன்பிற்கும், கனத்திற்கும் ஏற்றவளாக

# தேவனுடைய முழுமையான ஆலோசனை

# "The Whole Counsel Of God"

Steve Vice

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20 : 26 ல் அப்போஸ்தலனாகிய பவுல் " தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் நான் உங்களுக்கு அறிவித்தபடியினாலே எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையதினம் சாட்சிகளாக வைக்கிறேன் " என்று சொல்கிறார். பவுல், ஜனங்கள் தேவனுடைய சித்தத்தைப் பற்றிய முழுமையான புரிந்துகொள்ளுதலைப் பெற்றிருக்க வேண்டுமென்று விரும்பினார். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர்களிடத்தில் அனுப்புவதற்கான இரண்டு காரணங்களாவன: 1. கிறிஸ்து அப்போஸ்தலர்களிடத்தில் சொன்ன எல்லாக் காரியங்களையும் நினைப்பூட்டும்படியாகவும் ( யோவான் 14 : 26 ; 2 ). 2. சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும்படியாகவுமே (யோவான் 16 : 13).

நம் தேசத்தின் நீதிமன்றங்களில் குற்றவாளியிடம், திரும்பத் திரும்ப " நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத்தவிர வேறொன்றுமில்லை " என்று வாக்கு மொழியைக் பெற்றுகொள்கிறார்கள். பாதி உண்மை பொய்க்கு சமமானது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள்: எனவே, நீதி நிலை நாட்டப்பட வேண்டுமென்றால், ஒட்டுமொத்த உண்மையும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

" நீ செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவை உன் இருதயத்தில் ஏற்றுக் கொள்; நீ இரட்சிக்கப்படுவாய் " என்று சாதாரண மக்களைப் பார்த்து மதத் தலைவர்கள் சொல்வது சகஜமாகிவிட்டது. இது கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், வேதாகமம் இப்படிப் போதிப்பதில்லையே. யோவான் 1 : 12 இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதைக் குறித்துப் பேசுகிறது. ஆனால், இவ்வசனம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்பவர் இரட்சிக்கப்படுவார் என்று சொல்வதில்லையே. இது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்

கொண்டவர்களுக்கு தேவனுடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரம் கொடுக்கப்படும் என்று தான் சொல்கிறது.

ஒருவர் இரட்சிப்புப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியதெல்லாம் ரோமர் 10 : 9, 10 வசனங்களில் இடம்பெற்றிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ரோமர் 2 : 4 ல் தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் மனந்திரும்புதலைப் பற்றிப் பேசினார். மனந் திரும்புதல் இல்லாமல் இரட்சிப்பு இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம் ( லூக்கா 13 : 3 ). ஆனால், ரோமர் பத்தாம் அதிகாரம் மனந்திரும்புதலைப் பற்றி எதுவும் சொல்ல வில்லை. எனவே, ரோமர் 10 : 9, 10 இரட்சிப்பு என்பதற்கு தேவனுடைய முழுமையான ஆலோசனையாக இல்லை.

இன்னும் சிலர், எபேசியர் 2 : 8, 9 வசனங்கள் இரட்சிப்பு சம்மந்தமாக அதிகாரப் பூர்வமான இறுதியான வசனங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், இது எபேசு பட்டணத் திலிருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் தங்களுக்கிருந்த விசுவாசத்தை அறிக்கை செய்ததை வியர்த்தமாக்குகிறது ( அப்போஸ்தலர் 19 : 19 ). மேலும், நாம் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றதையும் மறந்துவிடக்கூடாது ( அப்போஸ்தவர் 19:5 : எபே. 4 : 5 ) இப்படிப்பட்ட காரியங்களில் ஒருவர் தேவனுடைய முழுமையான ஆலோச னையை அறிந்து கொள்ள வேண்டுமென்றால், காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று வேதவசனங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ( அப்போஸ்தலர் 17 : 11 ).

நம்மில் பலருக்கு வேதாகமத்தின் முக்கிய வசனமாகிய யோவான் 3 : 16 யை மேற் கோள் காட்ட முடியும். ஆனால், நீங்கள் அதை மேற்கோள் காட்டும்போது கெட்டுப்போகமல் என்பதற்கு பதிலாக “ கெட்டுப்போகமாட்டான் ” என்றும் வார்த்தையை உட்புகுத்துகி றீர்களா? ஒருவர் அப்படிச் செய்தால் அந்த நபர் இயேசு கிறிஸ்துவைப் பொய்யராக்கு கிறார். ஏனென்றால், இதே புத்தகத்தில் 8 : 31 – 52 மற்றும் 12 : 42 ஆகிய வசனங்களில், அநேகர் கிறிஸ்துவின் பேரில் விசுவாசம் வைத்தார்கள். ஆனால், அவர்கள் இரட்சிக்கப் படவில்லை. யோவான் 3 : 16 தெளிவாக ஒருவர் கெட்டுப்போகமல் என்று சொல்கிறது. வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் கெட்டுப்போவதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. அப்படி நடக்கக் கூடாது. ஆனால், அப்படி நடக்க வாய்ப்பு இருக்கிறது. ஒருவர் இரட்சிப்பைப் பற்றி எவைகளை அறிந்து கொள்ள வேண்டு மோ அவைகளை யோவான் 3 : 16 போதிக்கிறதா? அப்படி போதிப்பவர்கள் தேவனுடைய முழுமையான ஆலோசனையை போதிக்கத் தவறிவிட்டார்கள் என்று தான் தெரிகிறது.

இயேசு தாமே ஒருவர் தம்மை விசுவாசிக்க வேண்டும் என்று சொல்லியிருந்தால்

அறிக்கையிடுவதும் இரட்சிப்புக்கு அவசியமான ஒன்றாகும் ( மத்தேயு 10:32,33 ) நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் " என்று வெளிப்படையாகவே இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் ( லூக்கா 13 : 3 ). அது போலவே, அவர் மாற்கு 16 : 16 ல் " விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் " என்றும் சொல்லியிருக்கிறார். இந்தக் காரியத்தில் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் முழுமையான ஆலோசனையை நிராகரிக்கலாமா? பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாக தேவனுடைய ஆலோசனையை நிராகரிப்பது மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தும். அவைகளில் மிக முக்கியமானது இரட்சிப்பாகும். ✞

## இயேசுவின் போதனை ஏன் வல்லமையாக இருந்தது?

1. அவர் ஜனங்களை மரியாதையோடு நடத்தினார்
   - (மாற்கு 10:46,52)
2. அவர் வெளிப்படையாகப் பேசினார்
   - (யோவான் 3 : 1, 3; மத். 13; மத். 4 : 19; யோவான் 4 : 1, 4)
3. அவர் இரக்கம் நிறைந்தவராய் பேசினார்
   - (மாற்கு 8:2; லூக்கா 13:34 )
4. அவர் பட்சபாதமில்லாதவராக இருந்தார்
   - (மத். 8:2,3; மத். 19:14; மாற்கு 10:21 )
5. அவர் மனிதத் தேவைகளை சந்தித்தார்
   - (யோவான் 9:1,38)
6. அவர் அதிகாரம் உடையவராகப் பேசினார்
   - (மத் 7:28,29; 4:4,10 )
7. அவருடைய போதனையும், வாழ்க்கையும் ஒரே மாதிரியாக இருந்தது
   - (எபி 4:15; யோவான் 8:29,46; 1பேதுரு 1:19 )
8. ஜனங்கள் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாகப் போதித்தார்.
   - (மாற்கு 4:33 )

## மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியா?

## *Is Conscience a safe guide?*

Basil Overton

“ மனுஷருக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள் ” ( நீதி. 16 : 25 ). ஒருவர் மத சம்மந்தமான காரியங்களில் எதை விசுவாசிக்கிறார் அல்லது எதைச் செய்கிறார் என்பது ஒரு பிரச்சனையே அல்ல. அவர் தன் மனச்சாட்சி யின்படி நடக்கிறாரா என்பது தான் கேள்வி என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால், இந்த தத்துவ ஞானம் ஒருவருடைய மனச்சாட்சியை தேவனுடைய வார்த்தைக்கு மேல் உயர்த்துகிறது. இந்த தத்துவஞானம் ஒருவருடைய மனச்சாட்சியை வேதாகமத்திற்குப் பதிலாக வழிகாட்டியாக ஆக்குகிறது. இது தவறு. ஒருவருக்கு மனசாட்சி பாதுகாப்பான வழிகாட்டியாக இருப்பதற்குப் பதிலாக, மனசாட்சியானது தேவனுடைய வார்த்தையால் பாதுகாப்பாக வழிநடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மனசாட்சி எப்படி போதிக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி அது நம் செயல்களை சில வேளைகளில் அங்கீகரிக்கிறது, சில வேளைகளில் நிராகரிக்கிறது. மனச்சாட்சியானது தவறாகப் போதிக்கப்பட்டிருந்தால், தவறான காரியங்களைக்கூட அது அங்கீகரிக்கும் அல்லது சில வேளைகளில் சரியானவைகளைக்கூட நிராகரிக்கும். தவறாக வழிநடத்தப் பட்ட மனசாட்சி நம்மைத் தவறாக வழிநடத்தலாம், பெரும்பாலும் காரியம் இப்படியாகத் தான் இருக்கிறது.

நிச்சயமாகவே, நாமெல்லோரும் நம் வாழ்க்கைப் பயணத்தில் தவறான பாதையை தெரிந்தெடுக்கும் அனுபவத்தைப் பெற்றிருப்போம், பல மைல்கள் பயணித்தும் நாம் இன்னும் சரியான பாதையில் தான் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்று நினைத்து கடைசியில் ஏமாற்றமடைகிறோம். பக்தி ரீதியான காரியங்களில் நாம் சரியாக இருக்கிறோம் என்று உணர்வது மாத்திரம் நம்மை சரியானவர்களாக மாற்றி விடாது. நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வரைபடத்தை, எது உண்மையாகவே சரியான பாதை என்பதை கண்டுபிடிப்பதற்காக நாம் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். நாம் அப்படிச் செய்யாமல் அதற்குப் பதிலாக மனச்சாட்சியின்படி நடக்கிறவர்களாயிருந்தால், தேவனுடைய வார்த்தைக்கு மேலாக நம் மனச்சாட்சியை உயர்த்துகிறவர்களாயிருப்போம்.

மனசாட்சியானது அது சரியாக வழிகாட்டுவதற்கு முன்பாக தேவனுடைய வார்த்தையால் சரியாக போதிக்கப்படவேண்டும். ஒருவர் தவறான பாதையில் பயணித்துக் கொண்டிருந்தல், தன்னுடைய தவறை அவர் கண்டறியும்போது அந்தப் பாதையிலிருந்து திரும்பி சரியான பாதையைக் கண்டறியும்படி கடந்துபோகிறார். அந்த நபர், தான் தவறான பாதையில் சென்றுகொண்டிருந்ததை சுட்டிக்காட்டிய நபரிடம் நிச்சயமாக கோபம் கொள்ளமாட்டார். மாறாக, அவருக்கு நன்றியுள்ளவராகத்தான் இருப்பார்.

நண்பர்களே, உங்கள் உணர்வுகளின் வழிகாட்டுதலை சார்ந்திருக்க வேண்டாம்; தேவனுடைய வரைபடமாகிய வேதாகமத்தை உற்றுப்பார்த்து, நீங்கள் சரியான பாதையில் இருக்கிறீர்களா என்பதை யோசியுங்கள். வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்" (மத் 7 : 13, 14)

✝

---

# சந்தேகமானதாக இருந்தால் அது அழுக்கானதாயிருக்கும்

ஒரு காலை வேளையில் ஒரு மனிதன் கணிசமான நேரத்தைத் தான் முந்தின நாள் போட்ட சட்டையை இரண்டாவது நாள் போடலாமா? வேண்டாமா? என்பதை நினைத்து குழம்புவதில் செலவழித்தான். அந்த மனிதனுடைய விஷயத்தில் சிக்கனத்தை நாம் கீழான கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது, இருந்தபோதிலும், அந்த அழுக்கான துணியை அணிய அவன் விரும்பவில்லை. அவன் மனைவி கடைசியாக, " சந்தேகமானதாக இருந்தல் அது அழுக்கானதாயிருக்கும் " என்று சொல்லி அவனுடைய குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

எப்போதும், சந்தேகமாக இருக்கும் காரியத்தை தவிர்த்து விடுங்கள். அப்போது நீங்கள் பாதுகாப்பான பக்கத்தில் இருப்பீர்கள்.

# ஜெபத்தின் மனித பக்கம்?

## The Human Side of Prayer

Ancil Jenkins



" News week " என்கிற ஆங்கிலப் பத்திரிக்கையின் சமீபத்திய தகவல்கள் என்னைக் கிட்டத்தட்ட கீழே விழச் செய்துவிட்டது. ஜெபத்தைப் பற்றிய செய்தி அப்பத்திரிக் கையின் முதல் பக்கத்திலேயே வந்தது நான் எதிர்பாராத ஒன்றாக இருந்தது. அக்கட்டுரை சில சுவாரஸ்யமான உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. அப் பத்திரிக்கையில் எழுதப்பட்டிருந்த காரியங்கள் ஆச்சரி யமாக இருந்தன. ஜெபம் என்பது அமெரிக்காவில் பிரபல மான செயல்பாடுகளில் ஒன்றென்றும், மக்கள் தொகை யில் 78% மக்கள் வாரத்தல் ஒருமுறை ஜெபிக்கிறார் களென்றும், 54% மக்கள் தினமும் ஜெபிக்கிறார்க வெளிவந்தன. அதில் மேலும் ஆச்சரியம் என்னவென்றால், நாத்திகர்களில் ஐந்தில் ஒருவர் ஜெபிப்பதாக தகவல் வெளியானது தான். அந்தப் பத்திரிகை எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தது

அது ஜெபத்தைப் பற்றிய தகவல்கள் போன்றே, ஜெபத்திற்கான காரணங்களும் சுவாரசியமாக இருந்தது. சிலர் தேவன் இருப்பதை மனப்பூர்வமாக விசுவாசித்து, அவர் ஜெபத்திற்கு பதிலளிப்பார் என்று நம்புகிறார்கள். மற்றவர்கள் துன்பம் மற்றும் ஆபத்துக் காலங்களில் ஜெபிக்கிறார்கள் சிலருக்கு ஜெபம் என்பது வாழ்க்கையில் அர்த்தத்தையும், அமைதியையும் கொண்டு வரும் உளவியல் உடற்பயிற்சியாயிருக்கிறது என்றும் அந்த ஆய்வறிக்கைத் தெரிவிக்கிறது. நம் நாட்டின் ஆவிக்குரிய நிலை பற்றி கவலைப்படும் நமக்கு பலர் அநேகமாக பெரும்பாலானோர் தங்கள் தவறாக வாழ்க்கையினால் உண்டான காயங்களைக் குணப்படுத்த தேவனை நோக்கிப் பார்ப்பது உற்சாகமளிக்கிறது.

அக்கட்டுரையில் கண்டுகொள்ளாமல் விடப்பட்டிருந்தது ஜெபத்தின் மனிதப் பக்கம் தான். தேவனுடைய வல்லமையையும், இறையாண்மையையும் ஒருவர் ஏற்றுக் கொண்டாலும் கூட ஜெபத்தில் மனிதனுக்கு இன்னும் பொறுப்பு இருக்கிறது. அவற்றுள் சிலவற்றை யாக்கோபு சுட்டிக்காட்டுகிறார்.

**ஜெபம் விசுவாசத்தில் வேரூன்றியிருக்கிறது**

ஒருவர் ஜெபிக்கும்போது விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும் ( யாக். 1 : 6 ). ஜெபம் மேலெழுந்தவாரியாக இருக்கக்கூடாது. நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பதற்கு நமக்குப் பிதாவாகிய தேவன் இருக்கிறபடியால் பிள்ளைகளாகிய நாம் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும். நாம் இதை விசுவாசிக்க வேண்டும். " மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார் " (2கொரி. 9 : 8)

ஜெபம் தேவனுடைய சித்தத்திற்கு ஒட்டுமொத்தமாக ஒப்புக்கொடுப்பதாக இருக்க வேண்டும். தேவன் எப்படி சித்தம் கொள்கிறாரோ அப்படி அவரால் செய்ய முடியும் என்பது நமது விசுவாசமாயிருக்க வேண்டும். ஜெபம் என்பது நாம் அவரிடம் சரண் அடைவதும், அவர் எதைத் தருகிறாரோ அதை ஏற்றுக் கொள்வதுமாகும். அவர் யார் என்பதை நாம் அறிந்திருக்கிறபடியால் நாம் அவரிடம் கேட்க முடியும்.

**ஜெபம் சந்தேகத்துடன் கூடியதாக இருக்கக் கூடாது**

" ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் " ( யாக். 1 : 6 ). சிலர் தேவனால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று ஒத்துக் கொள்கிறார் என்பதை மறுக்கிறார்கள். ஆனால், அவர் செய்ய விரும்புகிறார் என்பதை மறுக்கிறார்கள். நம் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பதற்கு நமக்கு தகப்பன் இருக்கிறபடியால், அவருடைய பிள்ளைகளாகிய நாம் எவ்வளவு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். " என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை யெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் " ( பிலிப். 4 : 19 ). சந்தேகம் கலந்த ஜெபத்தை ஏறெடுப்பவர்கள் கர்த்தரிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் (யாக். 1:7).

**நம் இருதயத்திலும், நோக்கத்திலும் சுத்தம் இருக்க வேண்டும்**

யாக்கோபு தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். " நீங்கள் விண்ணப்பம் பண்ணி

யும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள் " ( யாக். 4 : 3 ). தேவன் தம்முடைய பிள்ளைகளைக் குறித்து கரிசனை உடையவராயிருக்கிறார். இதுவும் நோக்கத்தில் ஒருமைத்தன்மை காணப்பட்டு பரிசுத்த ஜீவியம் மனிதனுடைய பங்கிலிருந்து எதிர் பார்க்கப்படுகிறது. மனிதன் கலகமுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு பிதாவின் ஆசீர்வாதங்களை எதிர்பார்க்க முடியாது.

என்ன ஓர் வல்லமை நமக்குக் கிடைத்திருக்கிறது! நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற தேவ வல்லமையை நாம் பெற்றிருக்கிறோம் ( எபே. 3 : 20 ). இந்த வல்லமையோடு மனித விசுவாசமும், நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் இணையும்போது மனித எல்லைக்கு அப்பாற்பட்ட வல்லமை நமக்குக் கிடைக்கிறது.

✞

---

## மனித மீட்புக்கான தேவனுடைய திட்டத்தில் மனிதனுடைய பங்கு

## Mans Part Of Gods Scheme For Human Redemption

Louis Rushmore

மனிதக் கொள்கைகளிடத்தில் திரும்புவதற்கு பதிலாக தேவனுடைய வார்த்தையை மாத்திரம் கேட்க வேண்டும். (ரோமர் 10 : 17 ; மத்தேயு 15 : 9)

இயேசுவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும். (யோ. 8 : 24) கடந்த கால பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13 : 3 ; ரோமர் 3 : 25 ) இயேசு தேவனுடைய குமாரனென்று வெளிப்படையாக அறிக்கையிட வேண்டும். (ரோமர் 10 ; 9 – 10).

கிறிஸ்துவின் இரத்தத்தினாலே (வெளி 2 : 10) பாவங்கள் கழுவப்பட (அப். 22: 16 ) கீழ்ப்படிந்து முழுக்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் (கொலோ 2 ; 12 )

மரணபரியந்தம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் உண்மையாயிருக்க வேண்டும் (வெளிப்படுத்தின விசேஷம் 2 : 10 )

ஒரு கிறிஸ்துவனுடைய வாழ்க்கையில் பாவம் புகுந்துவிட்டால், அவர் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும் (அப்போஸ்தலர் 8 ; 22; யோவான் 1; 9 ).

செயலில் கிறிஸ்தவம்

# கூட்டாண்மையின் வல்லமை

# *The Power of Partnership*

Bill Mcfarland

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஐக்கியம் என்பது மாபெரும் மதிப்புடையதாயிருக் கிறது. ஏனென்றால் " ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் " ; சாலொமோன் ஞானி இந்த உண்மையை பிரசங்கி 4 : 9 – 18 வசனங்களில் வலியுத்துகிறார்; அந்த வசனங்களில் அவர் ஐக்கியத்தின் நான்கு அவசியமான நன்மைகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

## நிறைவேற்றுதல்

" ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் ; அவர்களுடைய பிரயாசத் தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும் " (வசனம் 9 ). இருவர் இணைந்து வேலை செய்யும் போது அதிக வேலை நடக்கும். அதிகமான வேலைகள் செய்து முடிக்கப்பட்டு அதிக கனி கொடுக்க முடியும். நாம் தனியாக வேலை செய்யும்போது அதிகமாக கனி கொடுக்கவோ, பலன் கொடுக்கவோ முடியாது.

## உற்சாகம்

" ஒருவர் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான் ; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே (வசனம் 10 ). நாம் விழும்போது நம்மைத் தூக்கிவிடவும், நம் வாழ்க்கைப் பாதையில் நம்மை உற்சாகப்படுத் தவும் நமக்கொருவர் இருப்பது எவ்வளவு ஆசீர்வாதமானது!

## பிழைப்பு

இரண்டு பேராய் படுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்கு சூடுண்டாகும் ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி ? கிறிஸ்தவ வாழ்க்கையின் தேவைகள் மற்றும் சவால்களின்படி நாம் தனியாக எதையும் செய்ய முடியாது. நம் விசுவாசம்

தணிந்துபோகாமலும், மரித்துப்போகாமலும் இருக்க நாம் ஒருவரையொருவர் சார்ந்து ஐக்கியமாக இருக்க வேண்டியதாயிருக்கிறது.

பெலன்

" ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம் ; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது " ( பிரசங்கி 4 : 12 ). முப்பரிநூல் எப்படி உறுதியாயிருக்கிறதோ அதேபோல் கிறிஸ்தவனுடைய வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் தன்னுடைய சகோதர சகோதரிகளோடு பின்னி பிணையைப்பட்டிருந்தால் அவன் உறுதியாயிருப்பான்.

கிறிஸ்துவுக்குள் காணப்படும் ஐக்கியத்திற்கு நம் வாழ்க்கையை ஆசீர்வதிக்கும் வல்லமை உண்டு. அதற்கு ஈடுஇணையே இல்லை. நாம் ஐக்கியத்தில் உறுதியாயிருக்கத் தக்கதாக நிச்சயித்துக் கொள்வோம் ( அப் 2 : 48 ). ✞

---

## நீங்கள் கேட்கும் பிரசங்கங்கள் எப்படி?

இது ஒரு பரிச்சயமான கேள்வி. எந்த வழிமுறைகளை வைத்து நாம் ஒரு நல்ல பிரங்கத்தைத் தீர்மானிக்கிறோம்? ஒரு பிரசங்கம் கீழ்கண்டவாறு இருந்தால் வெற்றிகரமான பிரசங்கமாயிருக்குமென்று நாம் சொல்ல முடியும்.

1. தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக இருந்தால்
2. அன்புடன் பிரசங்கிக்கப்பட்டால்
3. தேவையை சந்திக்கும் விதத்தில் ஆயத்தமாக்கப்பட்டிருந்தால்
4. எல்லோரும் புரிந்து கொள்ளும்படி பேசப்பட்டால்
5. தேவனை மகிமைப்படுத்துவதாக இருந்தால்
6. மக்கள் சிந்திக்கத்தக்கத் தூண்டினால்

பிரசங்கங்கள் மக்களின் மகிழ்ச்சி மற்றும் ஏற்றுக்கொள்ளுதலை அடிப்படையாக வைத்து அளவிடப்படக்கூடாது. மாறாக, அவர்களுடைய பரிசுத்த ஜீவியம், தேவ பக்தியுள்ள செயல்பாடு, உண்மையான கிறிஸ்தவ அர்ப்பனிப்பு போன்றவற்றால் அவர்கள் அளிக்கும் பதிலை அடிப்படையாக வைத்து அளவிடப்பட வேண்டும்.

# கர்த்தருடைய பணத்தைக் கையாளுதல்

# Taking Care Of The Lord's Money

Royce Frederick

பவுல் கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக இருந்தார். ஒருவர் நம்பத்தகுந்தவர்களின் வரிசையில் பவுல் நிச்சயமாக முதலிடத்தைப் பிடிப்பார்.

ஓர் அப்போஸ்தலன்கூட சோதனைக்குட்பட முடியும் என்பதை பவுல் அறிந்திருந்தார். ஏனென்றால், ஏற்கனவே யூதாஸ் காரியோத்து பேராசையால் பாவத்தில் விழுந்து விட்டான்: ...அவன் திருடனானபடியினாலும் பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் " பேராசையால் பாவத்தில் விழுந்து போனான் " (யோவான் 12 : 4-6: மத்தேயு 26 : 114 – 16).

அப்போஸ்தலனாகிய பவுல் பேராசை உட்பட எல்லாவகையான பாவங்களிலிருந்தும் தன்னை விலக்கிக் காத்துக்கொள்ள மிகவும் கவனமாக இருந்தார் : மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்றார் ( I கொரிந்தியர் 9 : 27 ). பவுல் குறிப்பாக கர்த்தருடைய பணத்தைக் கையாளுகிற காரியத்தில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவராக இருந்தார். இரண்டு சந்தர்ப்பங்களில், கர்த்தருடைய வேலைக்காக பெருந்தொகையை கொடுக்கிற நிகழ்வில் கலந்து கொண்டார், இரண்டு சந்தர்ப்பங்களிலும், மற்றவர்களோடு அவரோடு இணைந்து வேலை செய்தார்.

முதல் சம்பவம் அப்போஸ்தலர் 11 ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிறது " அந் நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான்: அது அப்படியே கிலவுதியு ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாகப் பணம் சேகரித்து அனுப்ப வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள்.

அப்படியே அவர்கள் சேகரித்து பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள் ( அப்போஸ்தவர் 11 : 27–30 ). இங்கே முப்பதாம் வசனத்தில் பணம் சேகரிக்கப்பட்டு இரண்டு சகோதரர்களிடத்திலே கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை மூப்பர்களிடத்தில் ஒப்படைத்தார்கள். இந்த மூப்பர்கள் எருசலேம் சபையின் மூப்பர்களாக இருந்தார்கள். (அப்போஸ்தவர் 15 : ச; 21; 17,18).

பின்பு, ஒரு சமயம் பவுல் எருசலேமிலிருந்த ஏழை கிறிஸ்தவர்களுக்கு தர்மபணத்தை சேகரித்த போது, தனக்கு பணம் கொடுத்தவர்களிடம் பணத்தை கையாளுகிற காரியத்தில் வேறு சிலர் தங்களுக்கு உதவி செய்வதாகச் சொன்னார். " சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சி பெற்ற ஒரு சகோதரனை அவனோடே கூட அனுப்பியிருக்கிறோம். அதுமாத்திரமல்ல, கர்த்தருக்கு மகிமையுண்டாகவும், உங்கள் மன விருப்பம் விளங்கவும் எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் கொண்டுபோகையில் எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படி அவன் சபைகளில் தெரிந்து ஏற்படுத்தப் பட்டவனாயும் இருக்கிறான். எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கை யாயிருந்து கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கிய மானவைகளைச் செய்ய நாடுகிறோம். (II கொரிந்தியர்: 18, 21 ).

சபைக் காணிக்கை என்பது பிரசங்கியாருடையதோ அல்லது சபை முன்னோடிகளுடையதோ அல்ல. கர்த்தருடைய பணம் கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமாகக் கையாளப்பட வேண்டும் (II கொரி 8 : 21) நாம் நேர்மையாக பணத்தைக் கையாண்டால், கர்த்தர் அதைப் பார்ப்பார். ஏனென்றால், அவர் எல்லாவற்றையும் பார்க்கிறார். அது மாத்திரமல்ல, நாம் பணத்தை நேர்மையாகக் கையாளுகிறோம் என்பது கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் வெளிப்படையாகத் தெரிய வேண்டும்.

பிராந்திய சபையின் காணிக்கை சரியாகக் கையாளப்பட சில ஆலோசனைகள்;

1. ஞாயிறு ஆராதனை முடிந்த பிறகு காணிக்கைப் பணத்தை எண்ணுவதற்கு நம்பகமான கிறிஸ்தவர்களை தெரிந்தெடுக்க வேண்டும். சுழற்சி முறையில் பல விசுவாசிகள் இதில் பங்கெடுப்பது நல்லது.
2. காணிக்கைப் பணத்தைக் குறித்த கணக்குகளை சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.
3. காணிக்கை பணத்தை வங்கிக் கணக்கில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட

விசுவாசிகளுடைய பெயர்களோடு இணைந்து சேமிக்க வேண்டும்.

4. காணிக்கையை எப்படியெல்லாம் பயன்படுத்த முடியும் என்று சபை அங்கத்தினர் களிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

5. காணிக்கை எப்படி செலவழிக்கப்பட்டது என்பதைக்குறித்த கணக்கு ஒழுங்காக பராமரிக்கப்பட வேண்டும்.

6. காணிக்கை எப்படி செலவழிக்கப்படுகிறது என்பதை அங்கத்தினர்களிடம் அறிவித்து விட்டு, அவர்களை கணக்கு வழக்குகளை எந்நேரத்திலும் ஆராய அனுமதிக்க வேண்டும்.

கர்த்தருடைய பணத்தைக் கையாளுகிற காரியத்தில் நாம் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்மிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட காணிக்கைப் பணத்தை நாம் தவறாகப் பயன்படுத்தினால் நாம் நமக்கும் நம் குடும்பத்திற்கும், கர்த்தருடைய சபைக்கும் பெரிய அவமானத்தை ஏற்படுத்திவிடுவோம்.

இளம் பிரசங்கியாராகிய தீமோத்தேயுவை அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எச்சரித்தார். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக்கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது, சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவ குத்திக் கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே " இவைகளை விட்டோடி, நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடு " ( I தீமோத்தேயு 6: 9–11).

" திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும் நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப் படத்தக்கது. பொன் வெள்ளியைப் பார்க்கிலும் தயையே நலம் " (நீதி மொழிகள் 22 : 1).

---

**சத்தியமானது ஏற்றுக்கொள்ளப்படும் சூழ்நிலை வரும்வரை அறிவிக்காமல் காத்திருப்பதைக் காட்டிலும், ஏற்றுக்கொள்ளப் படாமல் தள்ளப்பட்டாலும் அறிவிப்பது நல்லது.**

# உங்கள் விசுவாசத்தைக் குறித்து பொய் சொல்லாதீர்கள்

## Don't Lie About Your Faith

Jimmy Jividen

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் அநேகமாக அவர் வேதபாரகர்களைப் பார்த்துத்தான் கடுமையாகச் சாடியிருக்கிறார். இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அவர்கள் மதத் தலைவர்களாக இருந்தது தான். வேதபாரகர்கள் நியாயப்பிரமாணத்தை கரைத்துக் குடித்தவர்கள். பரிசேயர்கள் நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு எழுத்தையும் தவறாமல் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் பக்திமான்கள். ஆனால், அவர்களுடைய பாவம் மாய்மாலம் செய்வதாயிருந்தது. அவர்கள் தங்களை நீதிமான்களாகக் காட்டிக் கொண்டார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் அப்படியாயிருக்கவில்லை. இயேசுகிறிஸ்து " ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக் கொண்டு செய்யுங்கள். அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள் : ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள். சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள் (மத்தேயு 23 : 3) என்றார்.

ஒருவர் தான் பிரசங்கிப்பதை நடைமுறைப்படுத்தவில்லையென்றால், அவர் மாய்மாலம் செய்கிறவராயிருக்கிறார். அவர் தன் வாயின் வார்த்தையினால் ஒன்றை நம்புவதாகச் சொல்கிறார். தன் பக்தி, வாழ்க்கையில் முரண்படுகிறார்.

அப்போஸ்தலனாகிய யோவான் பரிசேயர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு கூட்டத்தாரைப் பற்றி பேசுகிறார், அவர்கள் தங்கள் விசுவாசத்தில் நேர்மையாயிருக்கவில்லை. அவர்கள் தாங்கள் இயேசுகிறிஸ்துவை அறிவதாகச் சொல்லிக் கொண்டார்கள். ஆனால், அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மறுத்தார்கள். அக்கூட்டத்தார் எப்படி இயேசு கிறிஸ்துவை அறிந்திருப்பதாக சொன்னார்கள் என்பது வசனப்பகுதியிலிருந்து தெளிவாகத் தெரியவில்லை. அநேகமாக, அது உணர்வுப்பூர்வமான அனுபவங்கள் மூலமாக இருக்கலாம். இல்லையென்றால், ஏதாவது இரகசியமான அறிவு மூலமாக இருக்

கலாம். அது அவர்களுடைய பரிதாபகரமான எண்ணமாக இருக்கலாம். அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம் ஆனால், அது செல்லுபடியாகாது. மேலும், அப்போஸ்தலனாகிய யோவான் " அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை " என்று சொல்கிறார்.

கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அவருடைய போதனைகளுக்கு கீழ்ப்படியாதவன் மாய்மாலக்காரனாயிருக்கிறான். மேலும் ஒருவன் தான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அவருடைய போதனை களுக்குக் கீழ்ப்படியவில்லையென்றால் அவன் பொய்யனாயிருக்கிறான்.

" உங்கள் விசுவாசத்தைக் குறித்துப் பொய் சொல்லாதிருங்கள் " ✞

## சங்கீதப் புத்தகத்தின் ஆசிரியர்கள்

சங்கீதம் என்றாலே தாமிது அரசன் தான் எழுதினார் என்று நினைப்போம். ஆனால், மொத்தம் 7 ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு சங்கீதங்களை எழுதியிருக்கிறார்கள்.

1. தாவீது ( 74 )
2. ஆசாப் ( 12 )
3. கோராகின் புத்திரர்கள் ( 11 )
4. சாலொமோன் ( 2 )
5. மோசே ( 1 )
6. எஸ்ராகியனாகிய ஏமான் ( 1 )
7. எஸ்ராகியனாகிய ஏத்தான் ( 1 )
8. பெயரில்லாதவை ( 48 )

# ஒளியை நோக்கி வளர்தல்

# Growing Toward The Light

Bonnie Rushmore



எங்கள் வீட்டைச் சுற்றியுள்ள முற்றத்தை ஒருவர் பார்வையிட்டால் அதில் உள்ள பூந்தோட்டத்தின் ஒரு பகுதியில் மூன்று அல்லது நான்கு செடிகள் வளர்வதைக் காண முடியும். நானும், என் கணவரும் அவைகளை கடந்த வருடம் அமைத்த வேலி அருகே கொண்டு போக முடிவெடுத்தோம். அதில் நான் நட்டிருந்த ரோஜா செடிக்கு போதுமான அளவு வெளிச்சம் அதாவது சூரிய ஒளி கிடைக்கவில்லை. காரணம் அதைச் சுற்றிலிருந்த மரங்கள் வெளிச்சத்தை மறைத்தன. நாங்கள் மிகவும் சிரமப்பட்டு அந்த ரோஜா செடியை சூரிய ஒளி படும் இடத்திற்கு மாற்றி வைத்தோம். நாங்கள் ரோஜா செடியை பிடுங்கிய இடம் காலியாயிருந்தபடியால் அதில் வேறு செடிகளை வைக்க வேண்டியதாயிற்று.

நான் சில லில்லி மலர் செடிகளை ரோஜா செடிக்கும் என் வீட்டு படிகளுக்கும் இடையே நட்டேன். ஆனால், வீட்டு கூரையின் நிழல் காரணமாக போதுமான அளவு சூரிய ஒளியை அவைகள் பெற முடியவில்லை. சில வாரங்களுக்குப் பிறகு அந்தச் செடிகள் வளரத்

தொடங்கின. ஆனால், வளரவளர அச்செடிகள் எல்லாம் அந்த ரோஜா செடியை நோக்கி சாயத் தொடங்கின. காரணம் என்னவென்று பார்க்கும்போது, அந்த ரோஜா செடி இருந்த இடத்தில் தான் சூரிய ஒளி அதிகமாக இருந்தது.

இந்நிகழ்வு என் மனதில் ஓர் எண்ணத்தை ஏற்படுத்தியது. நாம் ஒளியாகிய கிறிஸ்துவை நோக்கி வளர்கிறோமா? " நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் " என்று இயேசு கிறிஸ்து சொன்னார் ( யோவான் 8 : 10 ) நாம் கிறிஸ்துவை நோக்கி வளரு கிறவராயிருந்தால், நாம் தீமை என்னும் இருளில் நடவாமல், நீதி என்னும் ஒளியில் நடக்கிறவர்களாயிருப்போம் ( I யோவான் 1: 6,7)

எப்படி நான் நட்ட லில்லி செடிகளின் மீது எங்கள் வீட்டு கூரை நிழலிட்டு, சூரிய ஒளியைத் தடுத்ததோ, அப்படியே இவ்வுலகக் கவலைகள் கிறிஸ்துவின் ஒளி நம்மீது படாதபடி தடுக்க நாம் அனுமதித்து விடுகிறோம். மத்தேயு 6 : 33 " முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும் " என்று சொல்கிறது. மத்தேயு 6 : 25 – 30 வசனங்களை உள்ளடக்கிய வசனப்பகுதி கவலையைப் பற்றிய வசனப்பகுதியாகும். இங்கே இயேசு கிறிஸ்து தேவன் எப்படி காட்டுப் புஷ்பங்களையும், பறவைகளையும் பராமரிக்கிறாரோ அப்படியே நம்மையும் பராமரிப்பார் என்று சொல்கிறார். நாம் வாழ்க்கையில் தேவனுக்கு முதலி டத்தைக் கொடுத்து, கிறிஸ்துவின் ஒளியிலே நடக்கப் பாடுபட்டால் வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவைகளை நிச்சயமாக சந்திப்பார்.

மேலும், நான் அந்த லில்லி செடிகளிடம் கண்ட மற்றுமொரு காரியம், அவைகளுக்கு சூரிய ஒளி நேரடியாக கிடைக்காவிட்டாலும் கூட அவைகள் வளர்ந்து பூக்களை கொடுத்தன. அதற்கான காரணம், அச்செடிகள் சூரிய ஒளியை நோக்கி வளர்ந்ததுதான். கிறிஸ்தவர்களாக நாம் உலக இருள் நம்மீது நிழலிடும்படியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கலாம். நாம் சில நற்கிரியைகளைச் செய்யலாம். ஆனாலும், நாம் நேரடியாகக் கிறிஸ்துவின் ஒளியில் வளராமல் சற்று வளைந்து கொடுத்து அரை குறையாக கிறிஸ்துவின் ஒளியில் வாழ்வதால் நம்மால் மிகுந்த கனிகளை கொடுக்க முடிவதில்லை. அதனால் நம் பரமப் பிதாவை நோக்கிய பயணத்தில் மேல் நோக்கி வளருகிறவர்களாயிருப்போம். ✞

---

நம் வாழ்வில் உலகத் தன்மை என்னும் நிழலை நீக்கிப் போட்டு கிறிஸ்து என்னும் ஒளியை நோக்கி நாம் வளர வேண்டும். இப்பூமியில் நாம் வாழும்போது அப்படி வளர்ந்து அவருடைய ராஜ்ஜியத்தில் செழித்தோங்க வேண்டும்.

# நாம் மூச்சாயிருக்கிறோம்!

## *We Are A Breath!*

Marilyn LaStrape



**ப**க்தனாகிய யோபு தான் மிகுந்த பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்த போது நீதிக்காகவும், இரக்கத்திற்காகவும் மன்றாடினார். யோபு 7 : 1 – 7 வசனங்களில் அவர் " பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவோ? அவன் நாட்கள் ஒரு கூலிக்காரன் நாட்களைப்போல் இருக்கிறதல்லவோ? ஒரு வேலையாள் நிழலை வாஞ்சித்து, ஒரு கூலிக்காரன் தன் கூலியை வரப் பார்த்திருக்கிறது போல, மாயையான மாதங்கள் என்னுடைய சுதந்திரமாகி, சஞ்சலமான ராத்திரிகள் எனக்குக் குறிக்கப்பட்டது. நான் படுத்துகொள்ளுகிறபோது, எப்பொழுது எழுந்திருப்பேன்? இராக்காலம் எப்போது முடியும்

என்று சொல்லி, கிழக்கு வெளுக்கு மட்டும் அரண்டு புரளுகிறதினால் எனக்குப் போது மென்று போகிறது. என் மாம்சம் பூச்சிகளினாலும்: அதைப் பற்றின புழுதியினாலும் மூடப்பட்டிருக்கிறது; என் தோல் வெடித்து அருவருப்பாயிற்று. என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது : அவைகள் நம்பிக்கையில்லாமல் முடிந்து போகும். என் பிராணன் காற்றைப் போலிருக்கிறதென்றும், என் கண்கள் இனி நன்மைகள் காணப்போகிறதில்லையென்றும் நினைத்தருளும் என்று புலம்புகிறார். இதையே யோபு மறுபடியும் 16 ஆம் வசனத்தில் சொல்கிறார். " இப்படியிருக்கிறதை அரோசிக்கிறேன் " " எந்நாளும் உயிரோடிருக்க விரும்பேன், என்னை விட்டு விடும் என் நாட்கள் மாயைதானே " மூச்சு விடுவதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? நித்தியத்தோடு ஒப்பிடும்போது இப்பூலோக வாழ்க்கை மூச்சு விடுவதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ அவ்வளவு சிறிய கால அளவைக் கொண்டதாயிருக்கிறது!

யோபு தேவன் சகல ஜீவராசிகளுக்கும் சுவாசத்தைக் கொடுத்தார் என்றும், அவைகளின் மீது முழுக்கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பதையும் முற்றிலுமாக ஒப்புக்கொள்கிறார். அதன் பின்பு, அவர் சிந்தனையைத் தூண்டும் கேள்வி ஒன்றைக் கேட்கிறார் " கர்த்தருடைய கரம் இதைச் செய்ததென்று இவைகளெல்லாவற்றினாலும் அறியாதவான் யார்? சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது " (யோபு 12 : 9,10).

யோபுவையும் அவருடைய நண்பர்களையும் கடிந்துகொண்ட எலிகூ 34 : 14 – 15 வசனங்களில் இவ்விதமாகச் சொல்கிறார். " அவர் தம்முடைய இருதயத்தை அவனுக்கு விரோதமாகத் திருப்பினாராகில் அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்வார் ". அப்படியே மாம்சமான யாவும் ஏகமாய் ஜீவித்துப்போம். மனுஷன் தூளுக்கு திரும்புவான் ". இது எவ்வளவு உண்மையாயிருக்கிறது அருமையானவர்களே!

சங்கீதம் 78 இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தைப் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையா யிருக்கிறது. அந்த அதிகாரம் தேவனுடைய ஆச்சரியமான கிருபை பற்றிப் பேசுகிறது. அதே நேரத்தில், அவர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த பிறகும் அவர்கள் செய்த கலகம் பற்றிய சோகச் சம்பவங்களையும் பதிவு செய்திருக்கிறது. அவர்கள் தொடர்ந்து தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருந்த போதிலும்

அவர்களை உயிரோடு இருக்கச் செய்ததைக் குறித்து மறுபடியும் மறுபடியும் நினைவுபடுத்துகிறது. மேலும், இவ்வதிகாரம் தேவன் கிருபையுள்ளவர், நீடிய பொறுமையுள்ளவர் என்பதைத் திரும்ப திரும்ப நினைவுப்படுத்துகிறது. தேவன் நம்மை நேசிக்கிறார். அவரோடு நாம் பரலோகத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்!

சங்கீதம் 78 : 17, 18 வசனங்கள் " என்றாலும் அவர்கள் பின்னும் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து வறண்ட வெளியிலே உன்னதமானவருக்குக் கோபம் மூட்டினார்கள். தங்கள் இச்சைக்கேற்ற போஜனத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் தேவனை பரீட்சை பார்த்தார்கள். 21, 22 வசனங்கள் தேவன் இவைகளைக் கேட்டு இன்னும் உணராதவர்களாய் இருந்தபடியால் அவர்கள் மேல் கடுங்கோபங் கொண்டார். இருந்தபோதிலும், அவருடைய இரக்கம் மறுபடியும் 38 ஆம் வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. " அவரோ அவர்களை அழிக்காமல், இரக்கமுள்ளவராய் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்தார்: அவர் தமது உக்கிரம் முழுவதையும் எழுப்பாமல், அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார் ".

நமக்கு கிடைக்கும் தேவனுடைய கிருபையும், இரக்கமும் இவ்வுலகின் அதிபுத்திசாலியின் அறிவுக்கும் அப்பாற்பட்டதாகும் ! சங்கீதம் 78 : 39 இதை வெளிப்படுத்துகிறது. " அவர்கள் மாம்சமென்றும், திரும்பிவராமல் அகலுகிற காற்றென்றும் நினைவு கூர்ந்தார் " சங்கீதம் 89 : 47, 48 வசனங்கள் இவ்விதமாகச் செல்கிறது. " என் ஜீவன் எவ்வளவு நிலையற்றது என்பதை நினைத்தருளும் : மனுபுத்திரர் யாவரையும் வீணாகச் சிருஷ்டிக்க வேண்டியதென்ன?

ஆகவே, வாழ்க்கையைப் பற்றிய நம் கண்ணோட்டம் எப்படியாக இருக்க வேண்டும்? பாவத்தால் சபிக்கப்பட்டு விழுந்து போன இவ்வுலகில் தேவன் மீது நம் முழு நம்பிக்கையும் வைத்து அவர் நம் வாழ்வை வழி நடத்த நாம் அனுமதிக்க வேண்டும்! சாலொமோன் ஞானி பிரசங்கி 5 : 19, 20 ல் மிக அருமையாகச் சொல்லியிருக்கிறார். " தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும் தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அனுக்கிரகம். அவனுடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் அவனுக்கு அனுக்கிரகம் பண்ணுகிறபடியினால் அவன் தன் ஜீவனுள்ள நாட்களை அதிகமாய் நினையான் " ( பிரசங்கி 5 : 19,20).

# சாத்தான் எங்களைத் தடை பண்ணினான்

# Satan Hindered Us

Loy Mitchell

" சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து சரீரத்தின்படி கொஞ்சக் காலம் உங்களை விட்டுப் பிரிந்திருந்தபடியினாலே உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய் பிரயத்தனம் பண்ணினோம். ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்: சாத்தானோ எங்களைத் தடை பண்ணினான் " (I தெச 2 : 17, 18).

அப்போஸ்தலனாகிய பவுலுக்கு தெசலோனிக்கே கிறிஸ்தவர்களைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசை இருந்தது. இது எவ்விதமான தடையாக இருந்தது என்று நமக்கு தெரியாது. ஆனால், பவுல் இது சாத்தானின் கிரியை என்பதை அறிந்து கொண்டார்.

தேவனுடைய ஊழியக்காரர்களை ராஜ்ஜியத்தின் கிரியை செய்ய விடாமல் தடுக்கும் எந்தச் செயலும் சாத்தானின் கிரியையாகத்தான் பார்க்கப்படும். ( Raymond Kelcy ).

உலகக் காரியங்களின் மீதான நம்முடைய அன்பு நம்மை தடை செய்யும். "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால்,அவனும் பலனற்றுப் போவான் "(மத்தேயு 13 : 22)

" போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்" (I தீமோத்தேயு 6 : 6, 8)

## சிற்றின்பத்தின் மீதான நம்முடைய அன்பு நம்மைத் தடை செய்யும்

" உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்: ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்: தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (I யோவான் 2 : 15, 17).

## நம்மில் நாமே அன்பு கூருவது நம்மைத் தடை செய்யும்

"அப்பொழுது, இயேசு தம்முடைய சீடர்களை நோக்கி : ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்: என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்" (மத்தேயு 16 : 24,25).

நண்பர்களே, சாத்தான் இன்னும் கிரியை செய்து கொண்டுதான் இருக்கிறான். நாம் தேவனுடைய வேலையைச் செய்யாதபடி எல்லாவிதத்திலும் நம்மை, தடுக்கவே விரும்புகிறான்.

அருமையானவர்களே, உலகச் சிற்றின்பம், உடைமைகள் மற்றும் சுயவிருப்பங்களின் மீதான நம்முடைய அன்பு போன்றவற்றை சாத்தான் நாம் தேவனுடைய வேலையைச் செய்யாதபடி தடுக்க ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. ✝

---

### இன்றே இயேசுவை நோக்கிப் பாருங்கள்

அவருடைய கண்களில், ஜீவ ஒளியிருக்கிறது...

அவருடைய குரலில் சத்திய வாக்கிருக்கிறது...

அவருடைய பாதத்தில் சமாதானப் பாதைகள் இருக்கிறது...

அவருடைய கரங்களில் ராஜ்யத்தின் வேலையிருக்கிறது...

அவருடைய இருதயத்தில் பிதாவின் அன்பிருக்கிறது!

# பெற்றோர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்

## PARENTS ARE THE KEY

Ferman Carpenter

" **அ**ப்பொழுது, இயேசு தம்முடைய சீடர்களை நோக்கி : ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்: என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான் " (மத்தேயு 16 : 24,25).

அவர்கள் தங்கள் குமாரனை ஆராதனைக்கு அழைத்துச் சென்றார்கள் (லூக்கா 2 :41) ஆராதனை முடிந்த பிறகு வந்து உன்னை கூட்டிக் கொண்டு போகிறோம் என்று ஆராதனை கூடுமிடத்திற்கு இயேசுவை அவர்கள் விட்டு வரவில்லை. ஒன்றாக சேர்த்து தேவனை ஆராதிக்கும் குடும்பங்கள் சேர்ந்தே வாழ்கின்றன. ஆவிக்குரிய காரியங்கள்தான் அதிக முக்கியத்துவத்துக்குத் தகுதியுள்ளவைகள்.

அவர்கள் இயேசு பெற்றோர்களுக்கு கீழ்ப்படியக் கற்றுக் கொடுத்தார்கள் (லூக்கா 2 : 51).

பிள்ளைகள் தேவனுடைய அதிகாரச் சட்டத்தை மதிக்க வேண்டும். பெற்றோர்களை மதிக்காமலிருப்பது பாவமாகும் ( எபேசியர் 6 : 1, 3 ). அவர்கள் கடின உழைப்பின் முக்கியத்துவத்தை தங்கள் குமாரனுடைய மனதிற்குள் ஊட்டினார்கள்.

தச்சனாகிய யோசேப்பு இயேசு கிறிஸ்துவுக்கு தச்சுத் தொழிலை கற்றுக் கொடுத்தார் ( மாற்கு 6 : 3 ) குழந்தைகளுக்கு வேலை செய்யக் கற்றுக் கொடுக்காமலிருப்பது, அவனுக்கு திருடக் கற்றுக் கொடுப்பதற்கு சமமாகும்.

அவர்கள் இயேசுவை அன்பும், தயையும் மற்றவைகளைக் குறித்து சிந்திக்கிற பிள்ளையாகவும் வளர்த்தார்கள். இத்தன்மைகளைப் பலரும் அங்கீகரித்து அதிசயப் பட்டார்கள் (லூக்கா 2: 52) – நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஆவிக்குரிய காரியங்களில் நாட்டமுள்ள பிள்ளைகளாக வளர்க்கிறீர்களா? இவ்வாரமே உங்கள் குடும்பத்தை ஆராதனைக்கு அழைத்துச் செல்லுங்கள் . அதுவே செய்யத்தக்க சரியான காரியமாகும்.

# கூட இருக்கும் தகப்பன்மார்கள்

## Fathers That Stay

Jack W. Carter

என் தகப்பன் பத்து ருபாய்க்காக ஒரு நாள் முழுவதும் வேலை பார்த்த நாட்கள் எனக்கு நினைவில் இருக்கின்றது. அவர் 50 பைசாவை மிச்சப்படுத்துவதற்காக வீட்டிலிருந்து வேலை செய்யும் இடத்திற்கு நடந்து போன நாட்களையும் நான் நினைத்து பார்க்கிறேன். அவருக்கு வேலை செய்யும் போது காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட்களில் அவரை பார்க்க வருபவர்கள் கொண்டு வரும் பழங்களை அவர் சாப்பிடாமல் எங்களுக்கு தந்த நாட்கள் இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. பொருளாதார காரியங்களை பொறுத்தவரை அவர் எங்களுக்கு கொடுப்பதற்கு அவர் கையில் மிகவும் குறைவாகவே இருந்தன. ஆனால், பொருளாதார மந்த நிலையின் போது மற்ற பல தகப்பன்மார்கள் செய்யாத ஒன்றை அவர் எங்களுக்குச் செய்தார் – ஆம் அவர் எங்களுடைய எல்லா நிலைகளிலும் எங்களோடு இருந்தார்!

அவர் உணவு வேளையின்போது ஜெபத்தில் வழி நடத்தும்படி எங்களோடு இருந்தார். கிரிக்கெட், திருடன்- போலீஸ் போன்ற விளையாட்டுகளை எங்களோடு சேர்ந்து விளையாடினார். எங்கள் விளையாட்டு சாமான்கள் உடைந்து போனபோது அவைகளை சரிசெய்து தந்தார். மேலும், உடைந்து போன உலோகங்கள், மரக்கட்டைகள் போன்ற வற்றிலிருந்து விளையாட்டு சாமான்களை உருவாக்கிக் கொடுத்தார். எங்களுக்கு முடிவெட்டிவிட்டு, தேவைப்பட்ட போது எங்களை ஒழுங்குபடுத்தினார். பணி ஒழுக்க நெறிகளை நாங்கள் மேம்படுத்த அவர் எங்களுக்கு உதவி செய்தார். மேலும், பொறுப்பு, நம்பகத்தன்மை, போன்றவற்றின் அர்த்தத்தை எங்களுக்கு அவர் கற்றுத் தந்தார். அவர் எங்களுக்கு ஒரு பூரணமான தகப்பன் என்று சொல்ல முடியாது. இருந்த போதிலும், அவருடைய காரியங்கள் எங்களுக்கு விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுத்தரத்தக்கதாக அவர் எங்களோடு நிலைத்திருந்தார்.

பொருளாதார மந்த காலத்தில் குடும்பத்தோடு நிலைத்திருந்த தகப்பன்மார்

களைவிட இக்காலகட்டத்தில் கூட இருக்கும் தகப்பன்மார்கள் மிகக்குறைவாகவே இருக்கிறார்கள். இன்றைய நாட்களில் பல குடும்பங்கள் ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, சிற்றின்பங்களில் தங்களை திருப்திபடுத்திக் கொள்ள தீவிரிக்கிறார்கள். பல தகப்பான்மார்கள் தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதால் பல வீடுகள் சீரழிந்து விட்டன என்று தேசிய மகளிர் அமைப்பின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. குடும்ப அறநெறிகள் மறுசீரமைக்கப்பட வேண்டுமென்று தேசிய அளவில் குரல் எழுப்பப்பட்டுள்ளது. ஆனால், ஆரம்பத்தில் ஒரு தவறு ஏற்பட்டுவிட்டால், எதிர்பார்க்கப்படும் பலன் சிறப்பாக இருக்கும் என்று எப்படி நம்பிக்கையாக இருக்க முடியும்? ✞

---

## அலட்சியம்

### G. A. Studdert - Kennedy

பல ஆண்டுகளுக்கு முன்பு இயேசு வந்தபோது
அவர்கள் அவரை மரத்தில் தொங்க விட்டார்கள்.
அவருடைய கைகளிலும், கால்களிலும் ஆணிகளைக் கடாவினார்கள்.
அவருடைய சிரசில் முட்களாலான கிரீடத்தை சூட்டினார்கள்.
அவருடைய காயங்களெல்லாம் சிவப்பாகவும், ஆழமாகவும் இருந்தன.
அந்நாட்கள் கொடூரமானவைகளாகவும், கொடுமையானவைகளாகவும் இருந்தன.
அந்நாட்களில் அவர் சரீரம் எவ்வளவு கீழ்த்தரமாக பாவிக்கப்பட்டதென்று
சற்று சிந்தித்து பார்ப்பீர்.

இருந்தபோதிலும் இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று கதறினார்.
இதைப் பார்த்துக் கொண்டு பலர் அந்நாட்களில் தெருக்களில் நடந்தார்கள்
ஆனால் அக்கறையில்லாமல் அலட்சியமாக நடந்தார்கள்
அவர் சிலுவையில் அறையப்பட்டபோது இவ்வுலகத்தை அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.
அவர் பாடுபட்டபோது பலர் வெறுமனே வேடிக்கை பார்த்தார்கள்.
வேடிக்கை பார்த்தவர்கள் அவரைத் துன்பபடுத்தவில்லை.
ஆனால், அவர்கள் அவரை சாகவிட்டுவிட்டார்கள். ✞

# உங்கள் குழந்தைகள் பற்றி எப்படி ?

## *What about Your Children?*


Max Patterson

ஏலியின் குமாரர்களான ஓப்னியும், பினெகாசும் கர்த்தரை அறியவில்லை. (I சாமு 2 : 12 ), அவர்கள் தேவனுடைய ஆராதனையை மதிக்கவில்லை (I சாமு 2 : 17 ), அவர்கள் ஒழுக்கக்கேடாய் நடந்துகொண்டார்கள் ( I சாமு 2 : 22 ). இந்தக் கீழ்ப்படியாமையின் விளைவாக தேவன் ஏலியின் வீட்டைத் தள்ளி, அதை முடிவுக்குக் கொண்டு வந்தார். மேலும், ஆசாரியத்துவத்தில் ஏற்பட்ட இந்த சீர்கேடு ஜனங்கள் தேவனுக்கு விரோதமாகத் திரும்பி, தங்களைச் சுற்றிலும் இருந்த தேசங்களைப் போல் தங்களுக்கும் ராஜா வேண்டும் என்று கேட்ட காரணங்களுள் ஒன்றாக அமைந்தது.

இஸ்ரவேலர்கள் பெலிஸ்தரோடு செய்த யுத்தத்தில் ஏலியின் குமாரர்களை ஓப்னியும், பினெகாசும் கொல்லப்பட்டார்கள். 98 வயதான ஏலிக்கு இது அறிவிக்கப்பட்டது, தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டதும் அறிவிக்கப்பட்டது. ஏலி தேவனுடைய பெட்டி பிடிக்கப் பட்டதைக் கேள்விப்பட்டவுடனே ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்காக விழுந்தான்; அவன் கிழவனும் ஸ்தூலித்தவனுமாயிருந்தபடியால் பிடறி முறிந்து செத்துப் போனான் ( I சாமு 4 : 18 ). ஏலியின் மருமகள் அதாவது பினெகாசின் மனைவி நிறை கர்ப்பிணியாயிருந்தாள். அவள் கர்ப்பவேதனைப்பட்டுக் குனிந்து பிரசவித்தாள். அவன் இக்கபோத்தைப் பெற்று மரித்தாள். ( I சாமு 4 : 21)

கர்த்தர் ஏலியின் குமாரரைத் தள்ளியதற்கு அவர்களுடைய ஒழுக்கக்கேடான, துன்மார்க்கமான வாழ்க்கை ஒரு காரணமாக இருந்தது, " இருந்தபோதிலும் ஏலி அவர் களை அடக்காமல் போன காரணத்தால் பாவம் செய்தார் " ( I சாமு 3 : 13 ). ஏலி என்ன நடக்கப்போகிறதென்பதை முழுமையாக உணர்ந்திருந்தால் அவர் தன்னுடைய குமாரர்களை அடக்கியிருப்பார்.

இன்று நமக்கு அனுபவத்திலிருந்தும், வேத வாக்கியங்களிலிருந்தும் நம் பிள்ளை களை அடக்காவிட்டால் என்ன நடக்கும் என்பது தெரிகிறது. ஆகையால், கிறிஸ்தவப் பொற்றோர்களாக நாம் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்க நம்மால் முடிந்தவைகளைச் செய்ய வேண்டும் (எபே 6 : 1 – 4).




# என் குடும்பத்திற்கு நான் எதைக் கொடுப்பேன்

# What Shall I Give My Family?

Ken Tyler

**நோக்கம்:**

ஒவ்வொரு குடும்பத்திற்கும் எது தேவை என்பதை வலியுறுத்துவது.

**I வேதாகமம்** (உபாகமம் : 6 :12: சங். 19 : 7 ; ரோ. 1:16; யோ. 12:48; யாக். 2:12

**A.** குடும்பங்கள் வேதாகமம் இல்லாதபடியால் வழிகாட்டுதல் இல்லாமல் இருக்கின்றன ( சங். 119 :105 ).

1. காலம் கடந்து போவதற்கு முன்பாக நாம் விழித்துக் கொள்ள வேண்டும்.

2. உங்கள் குடும்பத்திற்கு வேதாகமம் எவ்வளவு முக்கியமானது?

**II சபை** (மத்தேயு 6: 33; 1 கொரி. 14:12)

**A.** நல்மனதுள்ளவர்கள் தங்களுக்கு சபை அதிக முக்கியமானதல்ல என்று சொல்ல முடியாது.

1. தேவன் உலகத்தை இரட்சிப்பதற்கு சபை ஒரு வழியாக இருக்கிறது. ( எபே. 5:23: அப், 8: 4)

## III நேரம்

### நான் என் மகனுக்கு என்னத்தைக் கொடுப்பேன்?

ஒரு சிறு பையனுக்கு நீங்கள் எதைக் கொடுப்பீர்கள்?

கவர்ச்சிகரமான விளையாட்டையா ? பளபளப்பான பொம்மையையா ?

விளையாட்டுக் கத்தியையா, குறுக்கெழுத்துப் பெட்டகத்தையா ? வளைவு தடத்தில் ஓடும் ரயிலையா?

படங்கள் நிறைந்த புத்தகத்தையா? செல்லப் பிராணியையா?

இல்லை, இப்படிப்பட்ட காரியங்களுக்கு இன்னும் அதிக காலம் இருக்கிறது.

அவனுக்கென்று ஒரு நாளைக் கொடுங்கள்

அந்த சிறு விளையாட்டுகள் அதிகமாகி விட்டன. பொம்மைகள் அழிந்து போகின்றன ஆனால், உங்கள் மகனுக்கு ஒரு நாளை நீங்கள் கொடுத்தால் அவன் ஒருபோதும் உங்களை மறக்க மாட்டான்.

**A.** குடும்பம் கவனக்குறைவால் அழிக்கப்படுகிறது

1. சரியான குடும்பத்தைக் கட்டுவதற்கு நேரம் எடுக்கும் (உபா. 6: 6, 7)

2. உங்கள் குடும்பம் ஒன்றாகச் சேர்ந்து எவ்வளவு நேரத்தை செலவு செய்கிறது?

## IV உண்மைத் தன்மை (எபே. 5:22 25,33 : எபே, 6: 14)

**A.** குடும்பத்தில் உண்மைத் தன்மை என்பது சமுதாயத்தில் மறக்கப்பட்ட நற்பண்பாயிருக்கிறது.

1. நாம் குடும்பத்திற்கு கொடுக்க வேண்டிய அர்ப்பணிப்பை, நம்முடைய சூழ்நிலை அழிக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

2. உங்கள் குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்பட நேரத்தை செலவு செய்கிறீர்களா?

**முடிவுரை:**

ஒவ்வொரு குடும்பமும் உபா, 6: 10, 12 க்கு செவிகொடுக்க வேண்டும். உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் எதைக் கொடுக்கிறீர்கள்?

# நேரம்


## Time

Spc Alex Gibson

உங்களில் யாருக்காவது விஷம் எப்படி வேலை செய்கிறது என்று தெரியுமா? அது கேளிக்கைகளில் காட்டப்படுவதுபோல் செயல்படுவதில்லை. ஏனென்றால், விஷம் குடித்தவர் மீது யாரோ ஒருவர் விழுந்து விஷத்தை முறிப்பதற்கு முயற்சி செய்வதை அங்கே காட்டுவார்கள். விஷம் குடித்தவர்களுடைய முகம் வேறுபட்டு அவர்கள் சாகிறதற்கு முன்பு நீண்ட நேரம் அப்படியே அதே நிலையிலேயே இருப்பார்கள்.

அருமையானவர்களே, அந்த விஷத்தைப் பற்றிய விஷயத்தைத் தான் இக்கட்டுரையில் நான் பேச ஆசைப்படுகிறேன். ஆனாலும், நான் சரீரப் பிரகாரமான விஷத்தைப் பற்றி இங்கே பேசவில்லை. வாழ்க்கையில் நாம் தெரிந்துகொள்ளும் காரியங்களினாலும், வாழ்க்கையில் நமக்கு முக்கியமாகத் தோன்றும் காரியங்களினாலும் நம் ஆத்துமாக்களுக்கு நாம் ஆவிக்குரிய வாழ்வில் விஷத்தை ஊற்றுகிறவர்களாகிறோம்.

பழங்கால நாகரீகங்கள் பற்றி உங்கள் வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள்.



அப்பழங்கால சிதைவுகளிலிருந்து, அக்கால மக்களின் கல்லறைகளையும், கோயில்களையும் கண்டுகொள்கிறோம். எகிப்தில் இப்போதும் நாம் பிரமிடுகளைக் காண முடியும். கிரேக்க நாட்டில் இன்னும் பல கோவில்கள் உண்டு. அவர்களுடைய

தேவர்கள் மற்றும் தேவிகளுடைய சிலைகளும் அங்கே அதிகமாக உள்ளன. இன்னும், ஐரோப்பாவில் தேவாலயங்களையும், மாதா கோயில்களையும், நிலத்தடி சமாதிகளையும் காணலாம்.

அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் பழங்கால சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் அவர்களுடைய தெய்வங்கள் அவர்களுக்கு எவ்வளவு முக்கியமானவைகளாயிருந்திருக் கின்றன என்பது தெரியும். என் கேள்வி என்னவென்றால், நம் தேவன் நமக்கு எவ்வளவு முக்கியமாக இருக்கிறார்? நாம் அவருக்காக மரிக்கும் அளவுக்கு அவர் தகுதியுள்ளவரா? நான் அப்படித்தான் நம்புகிறேன். ஆயினும், இன்றைய உலகில் ஜனங்கள் அர்த்தமுள்ள காரியங்களிலிருந்து பொழுது போக்கான காரியங்களுக்கு ஈர்க்கப்படுகிறார்கள்.

அடிப்படையாகவே நான் நேரத்தைக் கேளிக்கையாகக் கழிக்கும் பழக்கத்தை உடையவனல்ல. ஒவ்வொரு நாளையும் ஒருவன் வீணாகவும், கேளிக்கையாகவும் கழித்து வேலை செய்யாமல் சோம்பலாக இருந்தால் எனக்கு அதிகம் கொழுப்பு ஏறி, மருத்துவ செலவுகள் அதிகமாகிவிடும்.

ஒருவேளை நான், வேலையையும், விளையாட்டையும் சமமாக வைத்து பாவித்தால் கூட, தேவனுக்கு நேரத்தை ஒதுக்கவில்லையென்றால் என்னவாகும்? நான் உலகத்தின் பக்கம் அதிகமாக இழுக்கப்பட்டு, தேவனோடு செலவு செய்யும் நேரம் சுருங்கி விடுகிறது. நாம் இப்படிச் செய்யும்போது ஆவிக்குரிய வாழ்வில் விஷத்தை எடுத்துக் கொள்கிறோம். அப்போது நாம் நம் தரத்திலிருந்து இறங்கி எளிதாகக் கோபப்பட்டு, கெட்ட வார்த்தைகள் நம் வாயிலிருந்து வரவும், சோதனை வலையில் விழுந்துவிடவும் அனுமதித்து விடுகிறோம். இப்படியாக நாம் கொஞ்சம் கொஞ்சமாக விலகி ஆவிக்குரிய வாழ்வில் நோய்வாய்ப்பட்டு விடுகிறோம். ஆவிக்குரிய வாழ்வில் விஷம் கடைசியாக ஆவிக்குரிய மரணத்திற்கு வழிவகுத்து விடுகிறது.

இன்று உலகில் இவைகள் தான் நடந்து கொண்டிருக்கின்றன? இதற்கு ஆதாரம் வேண்டுமா? உலகத்தின் மக்கள் Harry potter போன்ற புத்தகங்களை வாசிப்பதிலும், அதைத் திரைப்படமாகக் காண்பதிலும் நேரத்தைச் செலவு செய்கிறார்கள். இந்த Harry potter வீடியோக்களை U Tube ல் கோடிக் கணக்கானோர் பார்க்கிறார்கள். அடுத்ததாக, பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து மக்கள் தங்கள் நேரத்தை வீணடிக்கிறார்கள். தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் எல்லா நிகழ்ச்சிகளும் மோசமான நிகழ்ச்சிகளல்ல. ஆயினும், அவைகள் நாம் தேவனுக்கு செலவழிக்க வேண்டிய நேரத்தை நம்மிடமிருந்து பறித்துக் கொள்கின்றன.

இப்போது நான் ஒரு கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். நம்முடைய பொழுதுபோக்கு பெரும்பாலான நேரத்தை எடுத்துக் கொள்வதால், நான் குற்ற உணர்வு உள்ளவனாகக் காணப்படுகிறேன். நான் இசையைக் கேட்பதில் சுமார் மூன்று மணிநேரம் ஒரே நாளில் செலவழித்துவிட்டு, வெறும் ஒரு மணி நேரம் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதில் செலவழித்தேன். நான் இங்கே செலவழித்த நேரம் இசைக்கு மட்டுமே, வேலை முடிந்தபிறகு இணையதளத்தில் செலவு செய்த நேரத்தையும், வாகனம் ஓட்டிய நேரத்தையும் இதில் சேர்க்கவில்லை.

ஆகவே, இங்கே பிரச்சனை என்னவென்று பாருங்கள். இந்த சமமற்ற நிலை என்ன செய்கிறது? இது நமக்கும், தேவனுக்குமிடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்தி விடுகிறது. நம் நல்ல தேவன், பெரும்பாலும் நம்மோடு மெல்லிய குரலில் ( வேதவசனம் ) பேசுகிறார். அந்தக் குரலை, பாடலைக் கேட்க நாம் பயன்படுத்தும் I - pad மூலமாகக் கூட கேட்க முடியாது. இங்கே முக்கிய கருத்து என்னவென்றால், பொழுதுபோக்கு என்னும் விஷத்தால் ஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைச் சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இவ்வுலகத்திற்குரிய காரியங்களில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தி தேவன் கொடுத்த நேரத்தை அவருக்குத் திருப்பிக் கொடுக்கத்தக்கதாக அதைக் குறித்து நின்று யோசிப்பது கூட இல்லை.

தேவனுக்கு திரும்பக் கொடுங்கள் என்னும் சொற்றொடர் பெரும்பாலான நேரங்களில் பணத்தை குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நான் இங்கே அதை நேரத்திற்குப் பயன்படுத்துகிறேன். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்கிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது ( யாக்.1:27 ). சுத்தமான பக்தி என்பது, மற்றவர்களிடம் அன்பு காட்டுவதாகும். அதற்கு நேரம் என்னும் விலையை நாம் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஜனங்களுக்கு பணத்தை வாரி இறைப்பது மட்டும் அவர்களுடைய தேவைகளைச் சந்திக்காது. சுத்தமான பக்தி என்பது தேவனோடு நேரத்தைச் செலவழித்து அதற்குப் பிறகு வெளியே போய் உங்களைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு ஏதாவது நன்மை செய்வதாகும்.

நிச்சயமாகவே, நீங்கள் ஆவிக்குரிய அல்லது சரீரப்பிரகாரமான தேவையில் இருப்பவர்களுக்கு அருகில் தான் வசிக்கிறீர்கள். அவர்களைப் பற்றி அறிந்துகொள்ள

நேரத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால், தேவனுடைய அன்பை அவர்களிடம் காட்டுவதற்கு இது வாய்ப்பாக இருக்கும். மேலும், யாரோ ஒருவருக்கு உதவி செய்யும்போது நீங்கள் தேவனோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள அது ஏதுவாயிருக்கும். இதை முயற்சி செய்து பாருங்கள். இதைக்குறித்து வெட்கப்படாதீர்கள். தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத் திருக்கிறார் " ( II தீமோ.1 : 7 ). பலவீனமும், கோழைத்தனமும் கிறிஸ்தவர்களின் சிறந்த பண்புகள் அல்ல. தேவன் நமக்கு அன்பு, பலம் மற்றும் இச்சையடக்கத்தைத் தந்திருக்கிறார். இவை, ஆவிக்குரிய வாழ்வின் விஷத்தை முறிக்கும் அல்லது முறியடிக்கும் காரியங்களாயிருக்கின்றன.

இது சம்பந்தமாக, நீங்கள் சுதந்திரமாக உங்கள் எண்ணங்களை, கருத்துக்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ✝

## சபை என்பது என்ன?

## *What Is The Church*

கிறிஸ்துவின் சபை என்பது ஒரு கட்டடமல்ல (ரோமர் 16 : 16), இது ஒரு மார்க்கப் பிரிவினைக் கூட்டமுமல்ல, ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளை உள்ளடக்கிய கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. ( I கொரிந்தியர் 12 : 27 ; அப்போஸ்தவர் 4 : 12 ).


இச்சபை, இயேசு கிறிஸ்து எந்த சபைக்காக மரித்தாரோ அந்த சபையாகவும் ( அப்போஸ்தவர் 20 : 28 ). பெந்தகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்ட சபையாகவும் ( அப்போஸ்தவர் 2 : 4 : 42 ) ; முதல் நூற்றாண்டை போல மூப்பர்கள் மற்றும் உதவிக் காரர்களால் ஒழுங்குபடுத்தப் பட்ட சபையாகவும் ( தீமோத் 3 ) புதிய ஏற்பாடு மாதிரியின்படி தேவனை ஆராதிக்கும் சபையாகவும் (அப்போஸ்தவர் 2 : 42 , 46 : கொரிந்தியர் 11 , 22-26 : 16 : 2 : அப்போஸ்தவர் 20 : 7 : கொரித்தியர் 8 , 9) தேவனுடைய குடும்பமாகவும் ( கலாத்தியர் 4 : 4 - 7 ) கிறிஸ்துவின் மனசாட்சியாகவும் இருக்கிறது. (எபேசியர் 5 : 23- 33 ).

இந்த குடும்பத்தில் நீங்கள் பிறந்திருக்கிறீர்களா?

# பிலேயாமைப் பற்றிச் சொல்லுங்கள்

## Tell Me About Balaam

Rex Banks



**பி**லேயாம் நற்செயல்களுக்குப் பெயர் பெற்றவனல்ல. பிலேயாமின் பெயர் வெளி. 2 : 14ல் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதில் அவனுடைய மாதிரி யின்படி நடப்பதை நாம் தவிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிலே யாமைப் பற்றி அறிந்து கொள்வதற்கு நாம் பழைய ஏற்பாட்டிலுள்ள எண்ணாகமம் 22 – 24 அதிகாரங்களுக்குச் செல்ல வேண்டும்.

பிலேயாம் கனம், ஐசுவரியம், பலன் ஆகியவைகளை மனதில் சுமந்து கொண்டு கழுதையின் மீது தன் பயணத்தை தொடங்கினான். மோசேயையும், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த தேவனுடைய ஜனங்களையும் சபித்தால் அவைகளைக் கொடுப்பதாக ராஜா வாக்களித்தான்.

எப்படிப் பார்த்தாலும், பிலேயாமின் கழுதை நன்கு பயிற்சி பெற்ற மிருகமாக இருந்துள்ளது. ஆனால், அது வழியை விட்டு வயலிலே விலகிப் போனதற்கான வெளிப்படையான காரணம் எதுவும் தெரியவில்லை. பிலேயாம் கழுதையை அடித்தான். மறுபடியும் அது விலகிச் சென்றது. அங்கே, பிலேயாம் வந்த பாதையிலே கழுதையை வழி

நடத்த முயற்சித்தான். பின்பு அவர்கள் பாதையில் குறுகலான இடத்திற்கு வந்தார்கள், அப்போது கழுதை பயந்து பாதையை விட்டு வெளியேற முயற்சித்தது. அத்தோடு பிலேயாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று, அவன் திரும்பவும் அதை அடித்தான்.

அதன்பின்பு, தீடீரென பிலேயாம் கழுதையை எது தடுத்தது என்பதைக் கண்டு கொண்டான். கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக் கொண்டு வழியின் நடுவிலே நின்றார். கழுதை தூதனைப் பார்த்து, வழியை விட்டு விலகாதிருந்திருக்குமானால், பிலேயாம் ஒரு செத்த மனிதனாகத் தான் இருந்திருப்பான்.

ஆனால், ஒரு ராஜாவைப் பார்க்கப் பயணித்த பிலேயாமுக்கு ஏன் இத்தனை எதிர்ப் புகள்? 2 பேதுரு 2 : 15, 16 வசனங்கள் இதற்கான பதிலைக் கொடுக்கிறது. " செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனார்கள்: **அவன் அநீதத்தின் கூலியை விரும்பி**, தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான்: பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்து. " பிலேயாமின் பிரச்சனை பேராசையாக இருந்தது. தேவ தூதனுடைய வார்த்தையின்படி, பிலேயாமின் வழி கர்த்தருக்கு முன்பாக மாறுபாடாக இருந்தது (எண் . 22 : 32).

" பிலேயாமின் வழிமுறையை " நாம் எல்லாவிதத்திலும் தவிர்ப்போம், நாம் பேராசை உள்ளவர்களாய் நடந்து, நம்முடைய வாழ்க்கையைச் சாபமாக்காமல், " ஆசீர்வாதத்தின் வழிகளாக்க " முயற்சிப்போம். பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று நம் ஆண்டவர் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள் (லூக்கா 12 : 15). ✞

## என்ன இருக்கிறது

சம்காரிடம் ஒரு தாற்றுக்கோல் இருந்தது
தாவீதிடம் கவண் இருந்தது
தொற்காளிடம் ஊசிநூல் இருந்தது
ராகாபிடம் கயிறு இருந்தது
மரியாளிடம் தைலம் இருந்தது
மோசேயிடம் கோல் இருந்தது
உங்களிடமிருப்பதைத் தேவன் பயன்படுத்தும்படியாக
ஏதாவது ஒன்று உங்களிடம் இருக்கிறதா?

# ஆபிரகாம் : தேவனால் அறியப்பட்ட மனுஷன் ( ஆதி 18:18,19 )

# Abraham : A Man know of God

## Jimmy Young

ஆபிரகாம் எல்லோருக்கும் நன்கு பரிச்சயமான தேவ மனிதன் என்பது கேள்விக்கிடமில்லாத ஒன்று. காலங்காலமாக வேதவல்லுனர்கள் தேவன் எப்படி ஆபிரகாமைத் தெரிந்து கொண்டார் என்பது பற்றி விவரமாக விளக்கியுள்ளார்கள். தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். மேலும் தேவன் அவரை 1. நில வாக்குத் தத்தம் 2. தேசவாக்குத்தத்தம் மற்றும் 3. மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தினால் ஆசீர்வதித்தார் (ஆதி.12:1 – 3).

தேவன் ஏன் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டார் ? அந்நாட்களில் வாழ்ந்த மனிதர்களில் தேவன் ஏன் ஆபிரகாமை மட்டும் தெரிந்து கொண்டார்? அது ஆபிரகாமின் விசுவாசத்தினால் தான் என்பதை நாமனைவரும் அறிவோம். ஆதி 15:6 ல் " ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான் அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் " என்று நாம் வாசிக்கிறோம். தேவன் ஆபிரகாமைத் தெரிந்து கொண்டதற்கு காரணம் அவருடைய கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் தான் (ஆதி.22:15 – 18 ). ஆபிரகாம் எப்படிப்பட்ட மனிதனாக இருந்தார் என்பதை தேவன் அறிந்திருந்தபடியால் தான் அவரை தெரிந்துகொண்டார் ( ஆதி.18:18,19 ).

ஆபிரகாமைப் பற்றி மிக நெருக்கமாகப் படிப்பது மிக அவசியமானது. ஏனென்றால் நாமோ அல்லது நம் பிள்ளைகளோ பரலோகம் போகும் காரியத்தில் அது மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். " கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் " என்றார். ( ஆதி.18:19 ) இதை நினைவில் கொள்வது மிக முக்கியமாகும். தேவன் சர்வஞானியாயிருக்கிறபடியால் ஆபிரகாமை அவர் நன்றாக அறிந்திருந்தார் ( சங்.139:1– 6 ). தேவனுக்கு நம்மைப் பற்றித் தெரியாது என்று ஒரு நிமிடம் கூட நினைக்க வேண்டாம் (மத்.10:30; I தீமோ.5:24,25).

ஆபிரகாம், தன் பிள்ளைகளுக்குத் தம்முடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதைத் தேவன் அறிந்திருந்தார் ( ஆதி.18:19 ). ஆபிரகாமின்

வீட்டாருக்குத் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதை விட வேறு வழியில்லாதிருந்தது. இன்றைய நாட்களில் பலர் தங்கள் பிள்ளைகள் கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கவேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிடுவதில்லை.

கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதில் கொடுங்கள் :

1. நம்முடைய மகனோ அல்லது மகளோ விஷத்தோடு விளையாடினால் நாம் அஜாக்கிரதையாக இருப்போமா ?

2. ஜன நெருக்கடி மிக்க தெருவில் நம் பிள்ளைகளை விளையாட விடுவோமா ?

3. பள்ளிக்குப் போகிற காரியத்தில் நம் பிள்ளைகள் போக வேண்டுமா அல்லது போக வேண்டாமா என்பதை அவர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும் என்று நாம் அனுமதித்து விடுவோமா?

4. ஆபிரகாம் தன் வீட்டாருக்குக் கட்டளையிட்டான் என்று வேதாகமம் சொல்லுகிறது. இன்று அதில் ஏதாவது தவறு இருக்கிறதா?

உண்மையைச் சொல்லப்போனால் இந்த விஷயத்தில் ஆபிரகாம் இன்றும் மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார். சாலொமோன் ஞானி " மெய்சாட்சி சொல்லுகிறவன் உயிர்களை இரட்சிக்கிறான்; வஞ்சனைக்காரனோ பொய்களை ஊதுகிறான் " (நீதி.14:25) என்று சொல்லுகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்.7:13,14 ம் வசனங்களில் சரியான தெரிந்துகொள்ளுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

ஆபிரகாமின் சரியான தெரிந்துகொள்ளுதல் காரணமாகத் தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தார் ( ஆதி.18:18,19 ). ஆனால், அந்த ஆசீர்வாதங்க ளெல்லாம் ஆபிரகாமின் உண்மைத்தன்மையைச் சார்ந்திருந்தது. ஆபிரகாமின் வாழ்க்கை முடிவு அவர் தன்னுடைய பிள்ளைகளுக்குக் கட்டளையிட்டவைகள் போன்றவைகளெல்லாம் அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் பொக்கிஷங்களாகும். அவருடைய பிள்ளைகளான ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, தாவீது போன்றோரின் பெயர்கள் மனித இனத்தின் வரலாற்றுச் செவிகளில் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

நாம் கர்த்தருக்காக எதைக் கட்டிக்கொண்டிருக்கிறோம்? உண்மையுள்ள சந்ததியை நாம் பெற்றுக் கொள்வோமா? நாமும் நம்முடைய வீட்டாரும் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக நாமும் நம் பிள்ளைகளைக் கர்த்தருடைய வழியில் நடக்கக் கட்டளையிடவேண்டும். தன் வீட்டாரை நீதியையும், நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிட்ட ஆபிரகாமைப் போல் அநேகரைத் தேவன் எழுப்புவராக! அந்த அநேகரில் ஒருவராக நாமும் எழும்புவோம், தேவனின் நாமம் உயர்த்துவோம்! ஆமென்!! ✠

# வசன ஆராய்ச்சி

## ரோமர் II : 11- 36

### Jerry Bates

( முதலில் வசனத்தை படிக்கவும் )

11. இப்படியிருக்க, விழுந்து போகும்படிக்கா இடறினர்கள் என்று கேட்கிறேன், அப்படியல்லவே: அவர்களுக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக அவர்களுடைய தவறுதலினாலே புற ஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது.

12. அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புய ஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும்.

13. புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன்: புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே என் இனத்தாருக்குள்ளே நான் வைராக்கியத்தை எழுப்பி, அவர்களில் சிலரை இரட்சிக்க வேண்டுமென்று.

14. என் ஊழியத்தை மேன்மைப் படுத்துகிறேன்.

15. அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கிகரித்துக் கொள்ளுதல் என்னமாயிராது: மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போலிருக்குமல்லவோ?

16. மேலும், முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்: வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும்.

17. சில கிளைகள் முறித்துப் போடப்பட்டிருக்க, காட்டொலிவ மரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்ட வைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன் பங்காளியாயிருந்தாயானால்.

18. நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானல், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக் கொள்.

19. நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப் போடப்பட்டதென்று சொல்லுகிறாயே.

20. நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப் போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு.

21. சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.

22. ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்தில் கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையையும் காண்பித்தார்: அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்கு தயவு கிடைக்கும்: நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டு போவாய்.

23. அன்றியும், அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்ட வைக்கப்படுவார்கள்: அவர்களை மறுபடியும் ஒட்ட வைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே.

24. சுபாவத்தின்படி காட்டொலிவமரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவ மரத்ததிலே ஒட்டவைக்கப்பட்டிருந்தால் சுபாவக் கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிகநிச்சயமல்லவா?

25. மேலும், சகோதரரே , நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஓர் இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன்: அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.

26. இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும் .

27. நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன் படிக்கை என்றும் எழுதியிருக்கிறது.

28. சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைவராயிருங்கள். தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களிமித்தம் அன்பு கூரப்பட்டவர் களாயிருந்தால்.

29. தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே

30. ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றிருக்கிறது போல,

31. அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்.

32. எல்லார் மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக் குள்ளே அடைத்துப் போட்டார்.

33. ஆ ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவா யிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!

34. கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனா யிருந்தவன் யார்?

35. தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றை கொடுத்தவன் யார்?

36. சகலமும் அவராலும், அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

---

(கேள்வி)

1. யூதர்களுடைய கீழ்ப்படியாமையின் விளைவாக புற ஜாதிகளுக்கு எது வந்தது? (வ 11)

2. புற ஜாதிகளுக்கு இரட்சிப்பு வந்ததன் காரணமாக யூதர்களுக்கு என்ன ஏற்படும் என்று பவுல் எதிர்பார்த்தார் ? (வ 14)

3. பவுல் காட்டொலிவமரத்தோடே கிளைகள் ஒட்டப்படுவதைப்பற்றி பேசும் போது அவர் கிளைகள் என்று யாரைக் குறிப்பிடுகிறார்? (வ 17)

4. புற ஜாதிகள் தங்கள் இரட்சிப்பைக் குறித்து பெருமை பாராட்ட ஏன் எந்த காரணமு மில்லை? (வ 18)

5. எப்படி புற ஜாதிகள் அந்த மரத்தில் பங்காளிகளானார்கள்? (வ 20)

6. புற ஜாதிகள் பயப்படவில்லையென்றால் அவர்களுக்கு என்ன நடக்கும்?

7. தேவனுக்கு இரு பக்கங்கள் உண்டு. யாரிடத்தில் அவர் கடுமையாக நடந்து கொள்கிறார். யாரிடத்தில் அவர் தயவை காட்டுகிறார்? (வ 22)

8. புற ஜாதிகள் தேவனுடைய தயவில் நிலைத்திராவிட்டால் அவர்களுக்கு என்ன நடக்கும்? (வ 22)

9. யூதர்கள் தங்கள் அவிசுவாசத்தில் நிலைத்திராவிட்டால் அவர்களுக்கு என்ன நடக்கும்? (வ 23)

10. எந்தப் பழைய ஏற்பாட்டு வசனங்கள் ரோமர் 11 : 26, 27 வசனங்களில் மேற்கோள்காட்டப்பட்டிருக்கிறது ?

11. தேவன் புற ஜாதிகளிடத்தில் காட்டின இரக்கத்தினால் என்ன நடக்கும் என்று பவுல் எதிர்பார்த்தார்? (வ 31)

12. தேவனுடைய ஐசுவரியம் ஞானம் ,அறிவு போன்றவைகள் எவ்வளவு பெரியதாயிருக்கிறது? (வ 33)

13. எந்தப் பழைய ஏற்பாட்டு வசனங்கள் ரோமர் ( 4 : 34, 35 ) வசனங்களில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது?

14. தேவனுடைய வழிகளை உண்மையாகவே மனிதனால் புரிந்து கொள்ள முடியும். ✝

## ஸ்தேவானின் மரணம்

- பயமுறுத்தும் கூட்டத்தின் நடுவே எத்தனை வைராக்கியமான முகம்
- கர்த்தரின் மேல் எத்தனை அன்பு, எவ்வளவு விசுவாசம்
- அவனுக்கு நியமிக்கப்பட்டதில் எத்தனை பொறுப்பும், அர்ப்பணிப்பும்
- எந்த நிலையிலும் உண்மையைப் பேசக்கூடிய தைரியம்
- கர்த்தருக்குள் மரிப்பதில் எத்தனை சந்தோஷம், சமாதானம்
- உண்மையாகவே ஸ்தேவானின் வைராக்கியமுள்ள வாழ்க்கையிலும், மரணத்திலும் கிறிஸ்து மகிமைப்பட்டார் (பிலி. 1 : 21, 28).

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்?

## I பேதுரு 1 : 16 - 25

16. ஆகையால் நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதுதே.

17. அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாக தொழுது கொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்து கொள்ளுங்கள்.

18. உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்.

19. குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்கள்

20. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்த கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்.

21. உங்கள் விசுவாசமும், நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி அவருக்கு மகிமையைக் கொடுத்தார்.

22. ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்.

23. அழியுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெபிக்கப்பட்டிருக்கிறீர்கள்

24. மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது: புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது.

25. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்: உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே.

# ஒரு பாவி

## நித்திய காலத்திற்கும் இழந்துபோன நிலையில் இருக்கிறார்

**ஒரு பாவி செய்ய வேண்டியவைகள் : -**

**சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும் :**

அவரைக்குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள் ? (ரோமர் 10 : 14).

**சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டும் :**

" கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமதுபாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் " (I கொரி 15 : 1 - 4).

**கடந்த கால பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்:**

" நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லோரும் அப்படியே கெட்டுபோவீர்கள் " ( லூக்கா 13 : 3).

**கிறிஸ்துவை இரட்சகராக அறிக்கையிட வேண்டும் :**

" மனுசர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் " (மத்தேயு 10 : 32).

**ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட வேண்டும் :**


" மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் " ( ரோமர் 6 : 34 ).

---

நீங்கலெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்து வுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்து கொண்டீர்களே ( ரோமர் 6 : 34 ).

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 மணி |

### அஞ்சல் வழி வேதாகமக் கல்வி


வேதாகமஅஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு : இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்


E.Z.S. ராஜநாயகம் : 98427 30382
P.R. சுவாமி : 098440 70763
P.C. பிலேமோன் ராஜா: 9244204420
B. அர்ஜுனன் : 994435 58041

## சத்திய வழி




- ❖ பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ❖ ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- ❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763


---

## கிறிஸ்துவின் வசனம்



- ❖ பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- ❖ தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- ❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ❖ ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)


Srilanka all Asia Service



<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



- ❖ பேச்சாளர் : சகோ. B. பிலேமோன் ராஜா
- ❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
- ❖ மெயில் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- ❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- ❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- ❖ English Quaterly Magazine : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி
- ❖ J.C. School of Evangelism : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

<u>தொடர்புக்கு</u> : செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 [ 4 இதழ்கள் ] (அ) ரூ. 200 [ 8 இதழ்கள் ] க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .................................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

[இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்]

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ________________________________

தெரு / ரோடு : ________________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ________________________________